பக்கங்கள் 16 — Registered as a Newspepar — விலை ரூபா 12.00

# ஈழநாதம்

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | வைகாசி 03 | 17-05-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 88

உங்கள் நிகழ்வுகளை நவீன மிக்சிங் முறையில் வீடியோ எடுப்பத ற்கும் கறுப்பு - வெள்ளைப் படங்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும்

மலரும் மலர்கள்

வீடியோ அ  போட்டோ

யாழ். கிளி  ாவி (1770)



பக்கம் 03

இனவாதப் பின்னணியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



பக்கம் 05

அகிம்சைப் போராட்டம் எப்படித் தோற்றது .?



பக்கம் 11

எது நல்ல சினிமா ?



ஆனையிறவு நன்னீர் திட்டம்

## நாகரிகமான முறையில் – மூன்றாந்தரப்பு மேற்பார்வையின் கீழ்

# அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்

•அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன

விடுதலைப்புலிகள் அமைப்பைப் பொறுத்தவரையில் நாகரிகமான முறையில், மூன்றாந்தரப்பு மேற்பார்வையின் கீழ் ஒரு அரசியல் தீர்வை கொண்டுவரவேண்டுமென்பதில் மிகவும் உறுதியாக் இருக்கின்றார்கள் என அரசியல் துறைப்பொறுப்பாள: சு.ப.தமிழ்செல்வன் அவர்கள் லண்டன் பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

அச்செவ்வியின் போது அவர் மேலும் தெரிவிக்கையில் ''ஆரம்பத்தில் சமாதான நடவடிக்கைகள் மிகவும் விறுவிறுப்பாகவும், சிறப்பாகவும் நடைபெற்றுக்கொண்டிருந்தன. ஆனால், தற்போது சற்று வேகம் குறைந்திருப்பதாகவே நாம் கருதுகின்றோம்''.



"யுத்த நிறுத்த உடன்பாட்டில் இரு தரப்பாலும் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் ஒரு காலவரையறைக்குள் நடைமுறைப் படுத்தப்படவேண்டிய தேவை இருக்கின்றது. அதில் குறிப்பாக செயல் முறைகள் நடைமுறைப் படுத்தப்படாமல் இருப்பது, இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் தாமதமாகவும், மந்தகதியிலும் செல்லும் சூழலைத்தான் தற்போது உருவாக்கியுள்ளது."

"இச்சமாதான முன் முயற்கள் எமது மக்கள் மனதிலும் சிங்கள மக்கள் மனதிலும் ஒரு நம்பிக்கை ஒளியை கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. தறபோது ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த தாமதங்களும் மந்தகதியில் செயற்படுவதும் மக்கள் மனதில் ஒரு அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துமா? என்ற ஓர் சூழல் தோன்றிக்கொண்டிருக்கின்றது."

"முன்னைய காலங்களிலும் இந்த சமாதான அமைதி முயற்சிகள் படைதரப்பினரின் விட்டுக்கொடுப்பின்மையாலேயேதான் குழம்பியுள்ளன. இதேபோன்ற நிலை மீண்டும் தோன்றாதாவாறு பிரதமர் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் மிகவும இறுக்கமாக நின்று, உறுதியாக நின்று தமது சமாதான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு சென்ற பிரதமர் தற்பொழுது தனது படைத் தரப்பைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்ற போது நிச்சயமாக

16ம் பக்கம் பார்க்க

## நேர்நோக்கு

பயங்கரவாத தடைச் சட்டம் எனும் கொடூரச் சட்டத்தால் தமிழ் மக்கள் கடந்த பல வருடங்களாக அநுபவித்து வரும் துன்பங்களுக்கு அளவேயில்லை.

அவசரகாலச் சட்டத்துடன் தற்காலிக ஏற்பாடு எனும் பெயரில் இந்தச் சட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு இரண்டு தசாப்தங்கள் கடந்து விட்டன. இக்காலப் பகுதியில் பெரும்பாலும் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே, அரசாங் கங்கள் ஆட்சி புரிந்திருக்கின்றன. எனினும் சில காலங்களில் அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவது உண்டு.

சில வேளைகளில் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் கூட அவசரகாலச் சட்டம் மட்டுப் படுத்தப்படுவது உண்டு.

ஆனால் எவ்வாறான நிலையிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவில்லை.

இந்தப் பயங்கரவாத தடைச்சட்டத்தால் சிங்களக் கட்சிகள் கூடப் பாதிக்கப் பட்டதுண்டு. இச் சட்டத்தின் கொடூரத்தை 1989 ஆண்டு காலப்பகுதியில் ஜே.வி.பி கடுமையாக அனுபவித்தது. ஆனால் இச் சட்டத்தை நீக்கி விடுமாறு கோர சிங்களக் கட்சிகள் முன்வருவதாக இல்லை.


இதற்கு சிங்களக் கட்சிகள் பெரும்பாலும் தமிழர் போராட்டத்தைப் பயங்கரவாதமாக நோக்குவதுடன் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள், ஆதரிப்பவர்களை மட்டுமல்ல தமிழர்களையே பயங்கரவாதிகளாகப் பார்க்கின்றமையே காரணமாக அமைகிறது.

அதாவது பயங்கரவாதத் தடைச்சட்டம தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தினாலும் தமிழ் மக்க ன் போராட்டத்தை இராணுவக்கரங் கொண்டு அடக்கும் போது மேற்கொள்ளும் கொடூர வழிமுறைகளுக்கு "சட்டபூர்வ" அங்கீகாரத்தைக் கொடுப்பதனால் அச்சட்ட மூலத்திற்கு எதிராகச் செயற்பட அவர்கள் விரும்புவதில்லை, முற்படுவதில்லை.

ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் அனுபவிக்கும் இன்னல்களுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் பெரிதும் காரணமாக இரு ால் அதற்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டிய தேவை உள்ளது.

இதில் டைக்கும் வெற்றி இலங்கை முழுவதும் சிறிலங்கா அரசாங்கம் அமைத்துள்ள சி கூடங்களிலும், த களிலும் ஆண்டு காரணமின்றி அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு விமோசனமளிக்கக் கூடிய ாகும்.

அத்துடன் இதற்கான போ த்தை நடத்துவதற்கு உக ணமாகவும் இன்றைய சூழ் லை உள்ளது.



அக்கரைக்குச் சென்று வரும்...., அலைகூறும் செய்திக்காய் இக்கரையில் காத்திருக்கும் வலைஞர்கள் காட்சியிது

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி

## குவிமையங்கொள்ளும் பௌத்த சிங்கள பேரினவாதம்

சிறிலங்காவில் தற்போது நிலவும் அமைதிநிலையும், அதற்கு காரணமான அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தமும் அதன் பெறுபேறாக ஏற்பட்டு வரும் சமாதான பேச்சுவார்த்தைக்கான நகர்வுகளும் சிறிலங்காவின் பெரும்பான்மை சிங்களவர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தினாலும் அது மிகச்சொற்பமான ஆனால் மிக மிகத் தீவிர பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனையைத் கொண்ட குழப்பவாதிகளான சில அரசியல்வாதிகளுக்கும், பௌத்த பிக்குகளுக்கும் அச்சத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளமை அவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள் மூலம் தெளிவாகியுள்ளது.

போர்நிறுத்தம், சமாதான உடன்படிக்கை, இனப் பிரச்சினைக்கான நியாயபூர்வ அரசியல் தீர்வு, நிரந்தர அமைதி என்ற இன்றைய நாட்களின் சொற்கள் இவர்களின் ஒவ்வாமைக்குரிய சொற்களாகி விட்டன.

விடுதலைப்புலிகளின் வளர்ச்சி, இராணுவ மேலாண்மை, அவர்களுக்கான மக்களின் ஆதரவு, அவர்கள் மீதான சர்வதேச சமூகத்தின் கூர்ந்த அவதானிப்பு, உலகளாவிய ரீதியில் அவர்களின் அமைதி நகர்வுகளுக்கு எற்பட்டு வரும் அங்கீகாரம் எனப்பல விடயங்கள் இந்த பேரினதீவிரவாத கிளர்ச்சிக் கும்பலுக்கு பெருஞ் சினத்தையும், விரக்தியையும் எற்படுத்திவிட்டுள்ளதன் எதிரொலியே இவர்களின் அண்மைக்கால நடவடிக்கைகள், போராட்டங்கள், அறிக்கைகள், கண்டனங்களுக்கு காரணமாகும். இதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை.


இவ்வாரத்தில் கண்டியிலும், அநுராதபுரத்திலும் தமது சொற்ப ஆதரவுக் குழுக்களை கூட்டி இவர்கள் நடாத்திய இனவெறியையும், வகுப்பு வாதத்தையும் தூண்டும், "போராட்டம்" என்ற பெயரிலான கூத்துக்களில் இவர்களின் மிகப் பலவீனமான அரசியல் கொள்கைகள் மற்றும் மதக் கோட்பாடுகள் போன்றவற்றை இனங்காணக் கூடியதாக உள்ளது.

அவர்களாகவே அதனை, அதாவது தங்களின் 'இருப்பின்' தன்மையை இனங் காட்டியுள்ளனர். எல்லாவற்றிலும் மேலாக தாங்கள் எவரும் தேசபக்தர்கள், இனஉணர்வாளர்கள், மதப் பாதுகாவலர்கள் என முப்பரிமாணத் தோற்றங் காட்ட முனையும் இவர்கள் அவர்களின் தேசத்தின் அமைதியைப் பேணவும், இனத்தின் அழிவைத் தடுக்கவும், மதத்தின் கௌரவத்தைக்காக்கவும் எடுக்கப்படும் நீண்ட நெடுங்கால துயரந்தரும் பிரச்சினைக்கும் - அதன் காரணமான போருக்கும் முடிவு காண எடுக்கப்படும் சர்வதேச ஆதரவுடனான அமைதி முயற்சிகளை எதிர்ப்பதன் மூலம் தங்களின் நான்காவது பரிமாணமான "மனித விரோத" தன்மையும் வெளிப் படுத்தியுள்ளார்கள் என்றே கூறவேண்டும்.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் எழுச்சிமையங்களாக விளங்கும் கண்டி தலதாமாளிகையும், அநுராதபுர புனித மகாபோதி நிலையத்தையும் களநிலைப்படுத்தி இவர்கள் ஆரம்பித்துள்ள இந்த சமாதான எதிர்ப்புப் போராட்டம், அமைதியை விரும்பும் பௌத்த சிங்கள பெரும்பான்மை மக்களின் மனதில் இனவெறியைக் கிளறிவிடும் ஒரு நடவடிக்கையேயாகும்.

விடுதலைப்புலிகளை அழிப்பதன் மூலம், அவர்களோடு பேசாது அவர்களுடனான உடன்படிக்கையை நிராகரிப்பதன் மூலம் சிறிலங்காவில் அமைதியை, சமாதானத்தை ஏற்படுத்தலாம்என இன்னமும் இவர்கள் நம்புவார்களாகவும், அதையே கோருபவர்களாகவும் இருப்பது சிங்கள மக்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கும் ஒரு நடவடிக்கையேயாகும்.

இதனைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் தென்னிலங்கை மக்களேயாவர்: இதில் அவர்கள் தவறுவார்களேயானால் அவர்கள் தங்களைத் தாங்களே வரலாற்றுத் தவறைச் செய்தவர்கள் என்று கூறிப் புலம்ப வேண்டிய நிலை ஏற்படும் என்பதும் ஒரு வரலாற்று நியதி ஆகிவிடும்....




## படையினரின் அறிவிப்பு; கல்வி சமூகம் அதிருப்தி

கல்வியே தமிழ் மக்களின் அழியாச் சொத்து. அவர்கள் வாழ்வியக்கத்தின் ஆதாரமும் அதுவே. அதனால் தான் தமிழ் மக்களை அழிப்பதற்கான பிரதான இலக்காக பேரினவாதிகள் அவர்களின் கல்வியையே குறிவைத்து வந்துள்ளனர்.

காலங்காலமாய், கட்டம் கட்டமாக நன்கு திட்டமிட்டபடி இதனை சிறிலங்காவின் மாறி மாறி வந்த அரசுகள் யாவும் நடைமுறைப் படுத்தியும் வந்துள்ளனர்.

தரப்படுத்தல், யாழ் நூலக எரிப்பு ,பாடசாலைகள் மீது குண்டுத் தாக்குதல், பாடசாலைகளை இராணுவ முகாமாக பயன்படுத்து தல், கல்விற்கான சாதனங்கள். உபகரணங்களை சிதைத்து அழித்தல் போன்றவை தமிழ் மக்களின் கல்வி வளர்ச்சியை நிர்மூலமாக்கும் நடவடிக்கைத் தொடரின் நிகழ்வுகளேயாகும்.

இதற்கு சிறிலங்காவின் சகல பேரினவாத அரசுகளும் மௌன அங்கீகாரத்தை வழங்கியே வந்துள்ளன.

பாடசாலைகளை இராணுவ முகாமாகப் பயன்படுத்துதல் நாகரீக சமூகத்தின் நடவடிக்கையாக கருதவே முடியாது. புரிந்துணர்வு, ஒப்பந்த விதிமுறைகளின் பிரகாரம் பாடசாலைகள் வணக்கத்தலங்கள் பொதுமக்களின் வீடுகள் போன்ற வற்றில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் வெளியெறி விடவேண்டும் என்பது முக்கியமான அம்சமாகும்.

ஆனால் இராணுவம் இதற்கு மறுப்பதும்,தொடர்ந்து அங்கு நிலை கொண்டிருப்பதும் ஒப்பந்த மீறலாகவே கருத வேண்டும். பாதுகாப்பு அமைச்சின் கட்டளைப் பிரகாரம் நடக்க வேண்டிய சிறிலங்காவின் அரசபடையினர் அரசு மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலான விதிகளை புறக்கணித்து தன்னிச்சையாக நடந்து கொள்வதும், குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து வெளியேறமுடியாது என்று அறிக்கை விடுவதும், இராணுவம் அரசின் நடவடிக்கைகளை புறக்கணித்து நிராகரிப்பதாகவே உணரவைக்கிறது. படையினரின் இந்த புரிந்துணர்வற்ற நடவடிக்கை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவமதிப் பதாகவே கல்விச் சமூகம் கருதுகிறது.

## மிதிவெடியில் சிக்கி இருவர் படுகாயம்

(கிளிநெச்சி)

ஆனையிறவு உமையாள்புரத்தில் மிதிவெடி அபாயம் என எச்சரிக்கப்பட்டிருந்த பாதுகாப்பற்ற பகுதிக்குள் சென்ற இருவர் இராணுவ மிதிவெடியில் சிக்கி பலத்த காயங்களுக்கு உள்ளான சம்பவம் 16.05.2002 அன்று முற்பகல் 11.30 மணி அளவில் இடம் பெற்றுள்ளது.

கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சியை சேர்ந்த 28 வயதுடைய யோகலிங்கம் ஜெயசீலன், ஏழாலை யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும் இல 50,1/2 ஏக்கர் திட்டம் கனகாம்பிகை கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட 24 வயதுடைய 03 பிள்ளைகளின் தந்தையான நாகேந்திரம் நந்நகுமார் ஆகிய இருவருமே படுகாயங் களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சியிலுள்ள தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

யோகலிங்கம் ஜெயசீலன் என்பவர் இரு கண்களிலும் பலத்த காயங்களுக்கு உள்ளனதால் அவர் அவசர சிகிச்சை மேற்கொள்ளும் பொருட்டு அக்கராயனிலுள்ள மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இராணுவ முன்னரங்கப் பகுதியான உமையாள்புரத்தில் மிதிவெடிகள் இன்னமும் அகற்றப்படாத நிலையில் அங்கு "மிதிவெடி அபாயம்" என எச்சரிக்கை பதாதைகள் கட்டப்பட்டிருந்தும் அதைக் கவனத்தில் எடுக்காது அலட்சியப் போக்குடன் நடந்து கொண்டதால்- இத்தகைய அநாவசிய சம்பவம் எமது மண்ணில் ஏற்பட்டுள்ளது.

வன்னிமண்ணில் இன்னமும் இராணுவத்தினரால் விதைக்கப் பட்டுள்ள 14 லட்சம் மிதிவெடிகள் மீட்கப்படாதுள்ளதென மதிப்பிடப் பட்டுள்ள இந் நிலையில் சிறிய வளத்தினை கொண்டு மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் துரிதமாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் இப்பணியினை கண்டு வியந்து மெச்சிய சர்வதேச உதவி வழங்கும் நிறுவன அங்கத்தவர்கள் உருப்படியாக எதனையுமே செய்ய முன்வராதது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மிதிவெடி அபாயம் என எச்சரிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்குள் அனுமதியின்றி எத்தேவைகளுக்காக வெனினும் செல்வதைத் தவிர்த்து அநாவசிய இழப்புக்கள் எமது மண்ணில் இனியும் ஏற்படாதிருக்க ஒத்துழைக்குமாறு மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சோ)

## யாழ் அரச செயலகம் முன்னால் மறியல் போராட்டம் செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் பொற்றோர், பாதுகாவலர் சங்கம் எதிர்வரும் 20ம் திகதி யாழ் அரச செயலகமுன்னால் மறியல் போராட்டத்தில ஈடுபடவுள்ளது.

கடந்த காலங்களில் படையிரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன தமது பிள்ளைகள் மற்றும் உறவினர் குறித்த தகவல்களை அறியத் தருமாறு இச்சங்கம் பலதடவைகள் சம்பந்தப்பட்டோரிடம் கோரிக் கைகளை விடுத்து வந்த போதிலும் எதுவித பதிலும் வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனையடுத்து யாழ் செயலகத்தில் எதிர்வரும் 20ம் திகதி முற்றுகையிட்டு அதன் நடவடிக்கைகளை செயலலிழக்கச் செய்ய இச்சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தின் போது பல நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனமை தெரிந்ததே.

# இனவாதப் பின்னணியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்



"அமைதியும், பிரகாசமுமான முகத்துடன் புன்னகை தவழ, சாந்தமாகப் பேசும் இந்த மனிதனை எப்படி பயங்கரவாதி என இவர்களால் சித்தரிக்க இதுவரை காலமும் முடிந்தது'' என அங்கலாய்க்கும் சாதாரண சிங்கள மக்களை இப்போது சந்திக்க முடிகிறது. பெரும்பாலான சிங்கள, ஆங்கில ஊடகங்கள் உருவாக்கிய இனவாதப் படிமங்களை விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு சற்று அசைத்துச், சரித்து விட்டதென முதுபெரும் தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

இப்போதெல்லாம் சாதாரண சிங்கள மக்கள் உட்பட உண்மையான பௌத்தர்களான ஒரு சில பௌத்த மதகுருமாரும் தமிழ் மக்களுடைய பிரச்சனைகளை அவர்களுடைய வாழ்வியல் துயரங்களை உணரவும் அவைபற்றி அலசவும் தொடங்கிவிட்டனர் என்பதனையும் உணரமுடிகிறது எனவும் அவர் மேலும் சொன்னார். எனினும் இவர்களுடைய குரல்களுக்கு அச்சுப்பதிப்பு ஊடகங்களோ என்றி இலத்திரனியல் ஊடகங்களோ முக்கியமான இடத்தைத் தருவதில்லை என்பது இன்னும் நடைமுறையில் உள்ள யதார்த்தமாகும்.

பேரழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் நாட்டுக்கு சமாதானத் தீர்வொன்றைக் காண்பதன் மூலம் அமைதியும், நிம்மதியும் ஏற்பட வேண்டுமென அனைத்து இன மக்களும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற போதிலும் சிஹல உறுமய போன்ற இனவாத அமைப்புக்கள் தமிழ், முஸ்லீம் இனங்களை அழிப்பதிலேயே கண்ணாக இருக்கின்றன. "சிங்கள பௌத்த நாடு" எனும் கோசம் இருக்கும் வரை இந்த தேசத்துக்கு விமோசனம் கிட்டப் போவதே இல்லை என சிறிலங்காவின் முன்னணி வர்த்தகப்



பிரமுகரான தேசமான்ய லலித் கொத்தலாவல பேட்டி ஒன்றில் கடந்த வருடம் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது "புரிந்துணர்வு ஒப்பந்தம்" கைச்சாத்திடப்பட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தில் இனப்பிரச்சனைக்கான நகர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் பல்வேறு தடைகளும், நடைமுறை தடங்கல்களும் எழுகின்ற போதும், இரு பகுதியினருமே மிக நிதானமாக செயற்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் இவற்றிற்கு நெருக்கடியை ஏற்படுத்தும் முகமாக சிங்கள கடும் கோட்பாட்டாளர்களின் எதிர்ப்பு போராட்டம், சாதாரண மக்கள்மத்தியிலான விசமத்தனமான பிரச்சாரங்கள் என்பவற்றோடு; தமிழ் அமைப்புகள் எனப் பெயரிட்டு தமிழர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் இரண்டொரு குழுக்களும் கை கோர்த்துள்ளனர். (தமிழ் மக்களின் எழுச்சி நிகழ்வுகளை கூலிக்கு படம் பிடித்தல்; வீடியோபதிவு செய்தல் போன்ற புலனாய்வுப் பணிகள் மூலம் மக்களை அச்சுறுத்துதல் இவர்களின் தற்போதைய பிரதான பணியாகியுள்ளது)

கடந்த மாதம் கொழும்பு கைட்பார்க் திடலில் நாடு தழுவிய புரிந்துணர்வு ஒப்பந்த எதிர்ப்பு கூட்டம், ஒன்று ஜே.வி.பியால் ஏற்படுத்தப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராகவும், வடக்குக் கிழக்கின் இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படுவதற்கு எதிராகவும் நடத்தப்பட்ட இந்தக் கண்டனக் கூட்டத்தில் ஜே.வி.பியின் விமல் வீரவன்ச, மக்கள் ஐக்கய முன்னணியின் தினேஸ்குணவர்தன, சுதந்திரக் கட்சியின் அநுரா பண்டாரநாயக்க ஆகியோரும் ஏனைய சிங்களக் கடும் போக்காளர்களும் கலந்து கொண்டிருந்த போதும் பெரும்பாலான மக்கள் இக்கூட்டத்தினை நிராகரித்திருந்தனர்.

இதேபோன்று கிழக்கு மக்கள் அழைப்பு எனும் பெயரில் வாகன ஊர்வலமொன்று சேருவில தேரர் ஒருவரின் தலைமையில் கொழும்பில் நுழைவது பொலிசாரால் தடுக்கப்பட்டது. வடக்குக் கிழக்கு இணைப்பை இரத்துச் செய்யக் கோருவதே இவர்களின் நோக்கமாக இருந்தது.

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், நுவரெலியா எனப்பல இடங்களிலும் நடந்து முடிந்த பொங்குதமிழ் எழுச்சிகளும், தமிழர் ஆசிரியர் சங்க எழுச்சி மகாநாடு, யாழ் பல்கலைக் கழகத்தில் நடந்த சைவ எழுச்சி மகாநாடு என பல்வேறு மக்கள் எழுச்சி மகாநாடுகளிலும் "தமிழர் தேசியம், தாயகம், சுயநிர்ணயம்" என்பவற்றை ஏற்றுக்கொள்ளுகின்ற ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை எதிர்பார்க்கும் குரல்கள் வானளாவி ஒலிக்கின்றன. 1985 இல் முதற்தடவை ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்தத்தின்போது சார்க் நாடுகளில் ஒன்றான பூட்டானின் தலைநகரம் திம்புவில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் அர்த்தமுள்ள தீர்வுத்திட்டம் ஒன்றுக்காக நான்கு அடிப்படைகளைக் கொண்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1) தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

2) தமிழ் மக்களுடைய பாரம்பரிய வாழ்விடம் தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

3) தமிழ்த் தேசியத்தினுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

4) தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு சமத்தவமுடைய குடிமக்களாக அவர்கள் இந்த தீவில் வாழும் குடியுரிமை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதேயவையாகும்.

> **வெறும் அழுத்தக் குழுக்களாக செயற்பட்டு வந்த சிங்களக் கடும் கோட்பாட்டுக் குழுக்கள் இன்று பாராளுமன்றத்திலும் அங்கம் பெறும் அரசியற் கட்சிகளாகப் பரிணாமம் அடைந்து விட்டன என்பது இன்றைய இனச்சிக்கலின் கூர்மைக்கு ஓர் அடையாளமாகும்.**

ஏறக்குறைய பதினேழு வருடங்களின் பின்பும் அதே கோரிக்கைகளையே தீர்வுத்திட்டம் உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் எதிர்பார்க்கினறனர். இந்த கோரிக்கைகளைத் திரித்தும், தவறாகவும் பொருள் கூறும் முயற்சியிலேயே அன்று தொட்டு சிங்கள கடும் கோட்பாட்டர்களான சம்பிகரணவக்க, தசநீத குணதிலக போன்றோர் இன்று வரை ஈடுபட்டு வருகினறனர். இக்கோட்பாடுகள் ஒரு மாய தத்துவார்த்த விவாதம் (Abstract tbeoretical argument) எனக் கூறும் இவர்கள் பிரித்தானியரிடமிருந்து 1948 இல் சிறிலங்கா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே சிறுபான்மை இனங்கள் மீது பேரினவாதம் கட்டவிழ்த்து விட்ட இனவாத நடவடிக்கைகளின் மோசமான போக்கை, அது ஏற்படுத்திய துயரம் தரும் விளைவுகளை காலத்துக்கு காலம் சிங்கள மக்கள் புரிந்து கொள்ள முடியாதளவுக்கு திரித்து வந்துள்ளனர். மேலும், பிரித்தானியர் நாட்டை விட்டு வெளியேறிய பின்பு ஒரு. கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்கும், மற்றயதை கீழே தள்ளுவதற்கும் இந்த பேரினவாத கோட்பாடுகளை இறுக்கமாக மாற்றியிருந்தனர். இதுவே இந்த தீவின் இரத்தப் பெருக்கிற்கும், துயரத்திற்கும் காரணமாயிருந்தன என்பது இன்று எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மைகளாகி விட்டன.

வெறும் அழுத்தக் குழுக்களாக செயற்பட்டு வந்த சிங்களக் கடும் கோட்பாட்டுக் குழுக்கள் இன்று பாராளுமன்றத்திலும் அங்கம் பெறும் அரசியற் கட்சிகளாகப் பரிணாமம் அடைந்து விட்டன என்பது இன்றைய இனச்சிக்கலின் கூர்மைக்கு ஓர் அடையாளமாகும்.

1950களில் ஆரம்பித்து விட்ட நிலப்பறிப்பு இன்றுவரை தொடர்கிறது. 1985 இல் மணலாற்றில் கொக்கிளாய், நாயாறு, தென்னைமரவாடி ஆகிய இடங்களில் இருந்து ஒரே இரவில் ஆயுதமுனையில் வெளியேற்றப் பட்டவர்கள் இன்றுவரை தமது இடங்களுக்கு திரும்ப முடியாது அகதிகளாக அலைகின்றனர். 1946ம் ஆண்டின் குடிசன புள்ளி விபரங்களுக்கும், இன்றைய குடிசன புள்ளி விபரங்களுக்குமான இடைவெளியே வடக்கு கிழக்கு தாயகச் சிதைவுக்குப் போதுமான ஆதாரமாகும். எனவே "தமிழர் தாயகம்" அங்கீகரிக்கப்படுவதே தமிழர்களின் சமத்துவமான வாழ்வுக்கான பாதையாக மாறும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

சிறுபான்மை இனங்களும் இலங்கைத்தீவில் கூடி வாழும் ஒரு இணக்கமான சூழ்நிலையை உருவாக்க முடியாத அல்லது விரும்பாத சிறிலங்காவின் அரசியல் சக்திகள் சுயநிர்ணய உரிமை வழங்குவது என்பது தனியரசுக்கு வழிகாட்டுவதாகும் என கூறுகிறார்கள். (Self determination will lead to separate state) சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான தேசங்களின் ஐக்கியத்தில் உருவாகிய அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற மேற்குலக அனுபவங்கள், சமஷ்டி அமைப்புக்கள் இவர்களின் கவனத்துக்கு ஏன் எடுபடவில்லை எனும் கேள்வி எழுகிறது. சமத்துவமான வாழ்நிலை உருவாக்கமே உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்தும்.

மாங்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப் பட்ட காடழிப்பு சட்டவிரோதமான ஒரு செயல் எனக் குறிப்பட்டிருந்தார் சூழல் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி திரு.ஜெகத் குணவர்தனா. இவரின் கூற்று பெரும்பாலான சிங்களப் புத்தி ஜீவிகளின் மனப்பாங்கின் தெளிப்பாக கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். இது சிறிலங்காவின் அரசியல் அமைப்பும் அதன் சட்ட திட்டங்களுமே இலங்கைத்தீவில் நடைமுறையில் இருக்க வேண்டும் எனும் எதிர்பார்ப்பின் விளைவாகும். இந்த சட்டங்களும், இதன் அமுலாக்கமும் இந்தத் தீவின் மக்களிற் பலரை துன்பத்துக் குள்ளாக்குவதை இவர்கள் அறிந்து கொள்ளவில்லை அல்லது அறிந்து கொள்ள விரும்பவில்லை என்பதையே இது குறித்து நிற்கிறது. இலங்கைத்தீவின் ஒரு பகுதியில் வேறொரு அரசுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு (Quassy State) பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிர்வாகம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் சூழ்நிலையிலேயே சுமூகமான இணைக்கப்பாடும் நிரந்தரத் தீர்வும் எட்டப்படக்கூடும்.

ஆறு மாதங்களில் "பயங்கரவாதத்தை" ஒடுக்குவதற்காக, பிரிகேடியர் வீரதுங்கவை யாழ்பாணத்துக்கு அனுப்பி வைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் முயற்சி வடக்குக் கிழக்கையும் கடந்து சிறிலங்காவின் தலைநகரையும் எட்டிவிட்ட பின்பும் அடக்கப் படவில்லை என்பது, பிரச்சினை பிரச்சினையின் தன்மையில் இருந்து அணுகப்படவில்லை என்பதை கோடி காட்டி நிற்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணைக்கப்பாடு காணப்பட்ட பல விடயங்கள் இன்றும் நடைமுறைக்கு வரவில்லை. இவை தொடர்பில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவதுடன், இந்த உடன்படிக்கை தொடர்பான விடயங்களை சிங்கள மக்கள் மத்தியிலும் தெளிவுபடுத்துவது எமது பிரதான பணியாக உள்ளது என தமிழர் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளமன்ற உறுப்பினர் திரு. செல்வம் அடைக்கலநாதன் வன்னி விஜயத்தின் போது கூறியிருந்தார்.

"சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழும் நாடாக தன்னை கட்டிவளர்க்கத் தவறியதால், இரத்தம் தோய்ந்த இனமோதல்களை அது காண நேர்ந்தது. இவ்வாறான புறக் கணிப்புகளாலேயே கொடூரமான பின் விளைவுகள் ஏற்பட்டன. எமது நாட்டின் சிறுபான்மை இனத்தவர்களில் ஒன்று ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தது. இது உலகின் மிகப்பெரும் அயுதப் போராக வளர்ச்சி பெற்றது" என சிறிலங்கா ஜனாதிபதி புதுடில்லியில் விமான விபத்தில் இறந்த இந்திய அமைச்சர் மாதவராவ் சிந்தியாவின் ஒரு வருட நினைவுப் பேருரையில் குறிப்பிட்டதை அவரே குழப்பங்கள் இன்றி புரிந்து கொள்ள வேண்டும் இவ்வான புரிதல்களே இந்தத் தீவின் நிரந்தர சமாதானத்துக்கு வழிகாட்டும்; ஒளியூட்டும். ●

– அன்ரன் அன்பழகன் –

## பிரமுக அறிமுகம்

### மங்கள சமரவீர

**பொதுசன ஐக்கிய முன்னணி பாரளுமன்ற உறுப்பினர்**

- நெடுங்கால அரசியல் பாரம் பரியத்தை கொண்டவரான மங்கள சமரவீரவின் தந்தை மகாராம சமரவீர சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அமைச் சரவையில் அமைச்சராக இருந்தவர். தாயார் ஹேமாசமரவீர மாத்தளை பிரதேசசபை உறுப்பினராக இருந்தவர்.



- பிரம்மச்சாரியான மங்கள சமரவீர லண்டனில் படித்தவர். B.A சிறப்பு பட்டதாரியான இவர் ஆடைவடிவமைப்பு தொழில் நுட்பத்திலும் பட்டம் பெற்றவர். பிரான்ஸில் ஆடைவடிவமைப் பாளராக பணியாற்றியவர்.

- ஆரம்பத்தில் சிறுகைத் தொழில் திணைக்களம், புடவைக் கைத் தொழில் திணைக்களம், தேசிய வடிவமைப்பாளர் நிலையம் ஆகியவற்றில் வடிவமைப்பு தொழில்நுட்ப ஆலோசகராகக் கடமையாற்றியவர். களனிப் பல்கலைக் கழகத்தில் நுண் கலைகள் தொடர்பான பகுதிநேர விரிவுரையாளராக இருந்தவர்.

- சிங்கள-பௌத்த பேரினவாதக் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்ட இவரின் அன்புக்கு பாத்திரமான தந்தையின் சகோதரியான மாவை சமரவீர திருமணம் செய்தது ஒரு தமிழரை. பிரபல்யமான அந்தத் தமிழர் பாக்குநீரிணையை ஓரே மூச்சில் இரு தடவை நீந்திப் பார்த்ததுடன் பல்வேறு உலக சாதனைகளையும் நிகழ்த்தி யவரான ஆழிக்குமரன் ஆனந்தன் ஆவார்.

- சந்திரிகாவின் விசுவாசியான இவர் பிரேமதாஸ குடும்பத்திற்கு நன்றிக்கடன் பட்டவகையில் அவர்களுக்கும் நிரந்தர விசுவாசியே... சஜித் பிரேமதாஸவின் நெருங்கிய நண்பரும் கூட.

- 1983 இல் மாத்தறை தொகுதியின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக அரசியல் பிரவேசம் செய்த இவர் லண்டன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உறுப்பினராகவும் இருந்தவர்.

- 1991 இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் துணைச்செயலாளராக இருக்கும் இவர் யாழ் நூலகத்திற்கு செங்கல்லும் புத்தகமும் சேர்ப்பதாக விளம்பர நாடகம் ஆடிய வெண்தாமரை இயக்கத்தின் ஆளுநராகவும் இருந்தவர்.

- 1997 இல் தகவல் துறை அமைப்பாளராக பொறுப்பேற்ற இவர் சந்திரிகாவிற்கு இன்றுவரை விசுவாசமாக இருந்துவரும் ஒரு சிலரின் மிக முக்கியமானவர்.

- இவரது அரசியல் எதிரிகள் மகிந்த ராஜபக்ஷவும், மகிந்த விஜேசேகராவும் ஆவர்.

- இடதுகை பழக்கமுள்ளவரான இவரை தன்னினச் சேர்க்கை யாளர் என்று கூறுவதுண்டு.

- பொ.ஐ.முன்னணி - ஜே.வி.பி இணைப்புக்கு பெரிதும் பாடுபட்ட மூலகரான இவருக்கு விமல் வீரவன்ச உட்பட பல ஜே.வி.பி உறுப்பினர்கள் நண்பர்களாக உள்ளனர்.

- மாதெட்ட, பாரதீய ஆகிய இரு சஞ்சிகைகளையும் இஸ்ரா என்ற வாரப்பத்திரிகையையும் வெளியிடும் இவரின் அண்மைக்கால நண்பர்களில் வ்ரதராஜப் பெருமாளும் ஒருவர்.

- இவருக்கு பிடிக்காத சொல் கடன் அட்டை (இதனால் இவருக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் இடியப்பச் சிக்கல்) இவருக்கு அச்சமூட்டும் ஊரின் பெயர் மாத்தறை. (இப்போது இவரின் பெயரை அடிக்கடி ஞாபகமூட்டும் தாக்குதல் வழக்குடன் இந்த ஊர் தொடர்பு கொண்டது)

- கறுப்பு இவருக்கு பிடிச்ச கலரு (சுசாந்தி ஜெயசிங்க என்ற ஒலிம்பிக் ஓட்ட வீரங்கனையுடன் தொடர்புடையது இந்த கலர்)

- சிங்கள் கமிஷன் அறிக்கையின் பின்னணியில் இயங்கிய இவருக்கு புரியாதது தமிழர் பிரச்சினை.

- 'பிரபாகரனை உருவாக்கியது சிறில் மத்தியு' தான் என்று குற்றம் சாட்டும் இவர் விடுதலைப் புலிகளை கடுமையாக எதிர்ப்பவர்.

- தற்போதைய கவலை: அச்சமூட்டும் வழக்குகள்.

- எதிர்காலத் திட்டம்: இப்போதைக்கு வழக்குகளில் இருந்து விடுதலை பெறுதல்.

- இன்றும் நம்புவது: சந்திரிகாவை.

- ஒருபோதும் நம்பாதது: திருமணத்தை.

---

அண்மைக்காலமாக சந்திரிக்காவிற்கு கிடைக்கும் செய்திகள் எல்லாமே அவருக்கு குழப்பத்தையும், ஏமாற்றத் தையும், விரக்தியையும் ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டவையாகவே உள்ளன.

தேர்தல் தோல்விகள், அதுவும் சொந்த பாரம்பரிய 'அத்தனகல' தொகுதியிலேயே ஏற்பட்ட தோல்வி

ஜே.வி.பியினரின் சுய நலத்தன்மை சந்திரிகாவுக்கு இப்போது எரிச்சலூட்டும் வெறுப்பேற்படுத்தி வருகின்ற போதிலும், அவரால் அவர்களை முற்றாக ஒதுக்கமுடியாத நிலையேயுள்ளது.

காலம் இப்படி ஒரேயடியாக காலைவாரிவிடும் என்ற அவர் கனவு கூடக்கண்டிருக்கமாட்டார்.

பாவியார் போகுமிடமெல்லாம்

நிஹாலோ, அவரின் சொந்தப் பாதுகாப்புப் பிரிவின் இயக்குநர் அல்லவா? ஆக யாரின் பாதுகாப்பு குறித்து சனாதிபதி அதிக அக்கறை காட்டவேண்டும் என்பது அவருக்கு தெரியும் தானே...

***

**சுதந்திரக் குரல்கள்**

சிறிலங்காவின் உள்ளூராட்சித்

---

**தென்னிலங்கை அரசியல் காட்சிகள்....**

# குழப்பத்தில் சந்திரிகா: கவலையில் ரத்வத்தை

அவரை மிகவும் நம்பிக்கையிழக்க வைத்துள்ளது.

தன்னைச் சூழ இருந்த- தனக்கு நெருக்கமான- பிரியத்திற்குரிய பலரும் குற்றவாளிகள் பட்டியலில் ஒவ்வொன்றாக இணைக்கப்பட்டு வருவது அவரை மிகவும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது.

மாமனார் ரத்வத்தை யினதும் அவரது பிள்ளைகளினதும் கைது அவர்கள் மீதான மோசமான படுகொலைக் குற்றச்சாட்டுகள் போன்றவை அவருக்கு வெட்கத்தையும், அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அவரது நெருங்கிய கட்சி- சகாவான மங்களசமரவீர மீதான கொலைமுயற்சி- மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகள் அவருக்கு தலை குனிவை ஏற்படுத்தியுள்ளது.

தனது பிரியத்திற் குரியவரான சனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் இயக்குனர் நிஹால் கருணாரத்னவின் கைதும் அவர் மீதான பல்வேறு பாரதூரமான குற்றச்சாட்டுகளும், விரக்தியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றையும் விட தன்னை, தன் அதிகாரத்தை, அலட்சியம் செய்து நடவடிக்கைகளைத் தொடரும் ரணிலின் மௌன நகர்வுகளும், விடுதலைப்புலிகளின் காய் நகர்த் தல்களும், தன்னை மெல்ல மெல்ல செயலற்ற ஒருவராக்கி ஓரங்கட்டி வரும் தன்மை குறித்த அச்சம் அவருக்கு தனது அரசியல் எதிர்காலம் குறித்தும் தீர்வெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளியு ள்ளது.

இவை ஒருபுறமிருக்க தனது கட்சிக்குள் உட்கட்சி முரண்பாடுகள் அதிகரித்துவருவதும் கூட்டணிக் கட்சிகள் காலம் பார்த்து காலைவாரிவிடும் உத்திகளுடன் காத்திருக்கின்றன என்று செய்திகள் பரவலாகவும், பகிரங்கமாகவும் வெளிவந்து கொண்டிருப்பதும்



சந்திரிகாவின் சமகால பதட்டநிலையை மேலும் அதிகரித்து ள்ளது.

இத்தகைய நிலையில் கட்சிப் பொறுப்பை அநுராவின் கையில் ஒப்படைத்து விட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி எஞ்சியுள்ள மிச்சசொச்ச கௌரவத்தையாவது காப்பாற்றிக் கொள்ளுமாறு அவரின் நலனில் அக்கறை கொண்ட சிலர் அவருக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளனராம்.

ஆனாலும் கட்சித் தலைமையை அநுராவுக்கு விட்டுக் கொடுக்க அந்த சிங்கள பௌத்த முடிசூடாக் காவலன் என்ற பட்டப் பெயரைக் கொண்ட மகிந்த ராஜபக்ஷ விடுவாரா என்பதும் கேள்விக் குறியே...

பள்ளமும் திட்டியும் என்ற தமிழ்ப் பழமொழி இன்றைய சந்திரிகாவின் நிலைக்கு மிகவும் பொருத்தமான உவமையாகியுள்ளது.

இத்தகைய பன்முனைத் தாக்கங்களின் வெளிப்பாடாகவே அவரின் அண்மைக்கால பேச்சுகள், அறிக்கைகள், பேட்டிகள்யாவும் அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத்ததாகும்.

சிறிலங்கா தேசிய மட்டத்தில் மட்டுமல்ல சர்வதேச அரங்கிலும் சந்திரிகாவின் பெயர் மிகக் குறுகிய சிலமாத காலத்தினுள் விரைவாக மங்கத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் அவர் அரசியல் சதுரங்கப் போட்டியில் வீழ்ச்சி நிலையில் இருந்து தன்னை மீட்க வெற்றி நிலை நோக்கி வியூகமமைத்து வரும் ரணிலைத் தோற்கடிக்க எந்தக்காயை எப்படி நகர்த்தப்போகிறார் என்பதே பலகோடி ரூபாய் பெறுமதிமிக்க கேள்வியாகும்.

ஆனால் இப்போதுள்ள நிலையில் அவர் எந்தக்காயை எப்படி நகர்த்தினாலும் அவருக்கு மிக மோசமான பின்னடைவுகளையே அது ஏற்படுத்தும் என்பதில் அவருக்குக் கூட இருக்கும் நம்பிக்கைதான் சிறிலங்காவின் இன்றைய அரசியலின் போக்கில் விசித்திரமான திருப்பங்களுக்குக் காரணமாகப் போகின்றது.

### ரத்வத்தையின் கவலை

கண்டி போகம்பரைச் சிறையில் சிறைக்கைதிகளாக இருந்தும், ராஜபோகவாழக்கையை நடத்திவரும் சிறிலங்காவின் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், கோமாளி ஜெனரலுமான அநுருத்த ரத்வத்தைக்கும் அவரது புதல்வர்களான லொகான் மற்றும் சானுக்க ரத்வத்தைகளுக்கும் இப்போதுள்ள பெருங்கவலை சனாதிபதி சந்திரிகா தங்கள் மீது காட்டும் அக்கறையை விடவும் தனது பாதுகாப்புப்பிரிவின் (P.S.D) இயக்குனரான நிஹால் கருணாரத்னவின் மீது அதிக அக்கறையைக் காட்டுவதேயாகும்.

அண்மையில் கூட நிஹால் கைதாவதற்கு முன்னர் நவலோக மருத்துவமனையில் தன்னைச் சிகிச்சை பெறுவதற்கென அனுமதித்துக் கொண்டிருந்த வேளை அங்கு சென்ற சனாதிபதி சுமார் நான்கு மணிநேரம் அவருக்கு ஆறுதல் கூறினார் என்று வெளிவந்த பத்திரிகைச் செய்தி ரத்வத்தைக்கு கடுப்பை ஏற்படுத்தி யுள்ளதாம்.

இது தொடர்பாக தன்னை சிறையில் பார்க்க வருவோரிடம் எல்லாம் தனது அதிருப்தியை தெரிவித்துக் கொண்டாராம் ரத்வத்தை.

அவரின் (சந்திரிகாவின்) வெற்றிக்காக

**-தூரன்-**

உழைத்ததன் பலனே இந்தச் சிறைவாழ்க்கை... அதனை அவர் புரிந்து கொண்டால் நல்லது...? என்றாராம் ரத்வத்தை.

என்னதான் மாமனாக இருந்தாலும் இவர் சந்திரிகா அரசில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர். ஆனால்

தேர்தல் முடிவுகள் தந்த அதிர்ச்சியின் பின்னர் எதிர்க்கட்சிகள் தேர்தல் என்ற சொல்லை உச்சரிக்கவே அஞ்சுகின்றன. ஆளும்கட்சி பலமாக உள்ள நிலையில்



எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கவிழ்க்க நினைப்பதும் , நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர நினைப்பதும் முட்டாள்தனம் என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர் ஒருவர் கட்சிக் கூட்டமொன்றில் தெரிவித்தாராம். உடனேயே இன்னொருவர் பின்வரிசையில் இருந்தபடி இப்போதுள்ள நிலையில் ஆட்சியைக் கலைப்பதிலும் பார்க்க கட்சியைக் கலைத்து விடுவது புத்திசாலித்தனம். போகிற போக்கைப் பார்த்தால் கட்சிக்காரர் எல்லாருமே சிறைக்குள் இருந்து கட்சியை நடத்த வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படு வதற்கில்லை என்று சொன்னாராம்.

ஓமோம் அங்கு போய் கைதிகள் சுதந்திரக் கட்சி என்று பேர் மாற்றியும் கொள்ளலாம் என்றாராம் மற்றொருவர். ஆக எல்லாருமே ஏதோ குற்றங்களைச் செய்தே இருக்கிறீர்கள் என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் அப்படித்தானே என இன்னொருகுரலும் ஒலித்ததாம்.

### இடம்மாற்ற உத்தரவு

கொழும்பில் இந்தியாவைச் சேர்ந்த சோதிடர்கள் பலர் முகாமிட்டுள்ளார்கள். சிலர் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் தங்கியுள்ளார்கள். இவர்களைத் தேடிப் போவோர்களில் அரசியல்வாதிகளே அதிகம்...

எல்லாருமே தங்களின் அரசியல் எதிர்காலம் பற்றி ஆரூடம் கேட்பவர்களாகவே உள்ளனர்.

ஒரு கேள்விக்கு பதிலளிக்க 500 ரூபா முதல் 1000 ரூபாய் வரை அரசியல்வாதிகளிடம் பறிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் தனது சாதகக் குறிப்பை தனது நம்பிக்கைக்குரிய செயலாளரிடம் கொடுத்து ஆட்சிமாறுமா? அல்லது கட்சிமாறலாமா? என்ற கேள்வியைக் கேட்டு பதில் பெற்றுவரச் சொன்னாராம்.

அவருக்கு சோதிடர் கூறியனுப்பிய

பதில்:- இடம்மாறுங்கள் இல்லையேல் ஆபத்து என்பதேயாகும்.

இப்போது என்ன செய்வது என்று குழம்பிப் போயுள்ளாராம் அந்த கம்பஹா மாவட்ட அரசியல்வாதி..

சமஷ்டி அரசமைப்பு முறையானது ஓர் அபாயகரமான பூதமென்பதே பொதுவாக ஆசிய அரசுகளின் எண்ணம். இந்தியாவில் இப்போது நிலவுவது சமஷ்டி முறையல்ல; அரைச் சமஷ்டி முறைதான். பிரித்தானியர் தமது ஆதிக்கத்தின் கீழ் இந்தியாவை வைத்திருந்த போது அங்கு அவர்கள் அறிமுகப்படுத்தியிருந்தது சமஷ்டி முறையையல்ல. அது ஒரு புவியியல் நிர்வாக அலகு முறை தான். சீனாவும் சமஷ்டி

# அகிம்சைப் போராட்டம் எப்படித்தோற்றது ?

முறையைக் கண்டு அஞ்சும் தேசம். குழும உணர்வு மோலோங்கிய ஆசிய சமூகங்களில் அரச அதிகாரம் பெற்ற பெரிய குழுமம் சமஷ்டி முறையை நிராகரிப்பதன் மூலமே 'தேச' ஐக்கியத்தை கட்டிக் காக்கலாம் எனப் பிழையாக எடைபோடுகின்றது. இதில் இலங்கையும் ஒன்று.



ஆசியாவில் நிலவும் சமஷ்டி எதிர்ப்புச் சிந்தனை பற்றி பிறிதொரு கட்டுரையில் விரிவாகப் பார்ப்போம்.

சமஷ்டிக் கோரிக்கையை முன் வைத்து அதனடிப்படையில் சமஷ்டி கட்சி என்ற பெயரில் ஒரு கட்சியை தோற்றுவித்த முதலாவது ஆசியநாடு இலங்கைதான். 1949 ஆம் ஆண்டு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் சமஷ்டி கட்சி உதயமானது.

பிரித்தானிய அரசியற் பாரம்பரியத்தில் சமஷ்டி. எதிர்ப்புக் கண்ணோட்டமே அதிகமுண்டு. ஆதலால் அதன் அடிமை நாடுகளாக இருந்த ஆசிய அரசத்தலைவர்களிடமும் அச்சிந்தனை இலகுவாக வேர் பதித்து விட்டது. சமஷ்டி பற்றிய எண்ணக்கருவை ஆசியாவில் முதலிற் கொண்டிருந்த அரசியல்வாதி என்ற பெருமை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவிற்கு உண்டு. இவர் தலைவனாக, ஆட்சியாளனாக வரமுன் இதனைக் கூறினாரே தவிர தலைவனானதும், ஆட்சியாளனானதும் அச்சிந்தனையை வசதியாகக் கைவிடவே விரும்பினார்.

ஆனால் பிரித்தானிய அரசியல் மரபுக்கு வெளியே அமெரிக்க மிசனின் (கீ.எஸ்.ஐ) சிந்தனை மரபிற்குட்பட்டு வளர்ந்த எஸ்.ஜே.பி. செல்வநாயகத்திடம் சமஷ்டி முறைபற்றிய சிந்தனை இலகுவிற் பதியமுடிந்தது. அமெரிக்க சமஷ்டி முறையை கொண்ட ஒரு தேசம் என்பதால் அமெரிக்க மிசனின் பாரம்பரியத்திற் கூடாக செல்வநாயகத்திடம் இச் சிந்தனை இலகுவாக வேர்விட முடிந்தது.

இன,மத,மொழி மற்றும் குழும உணர்வுகளினாற் குரோத முற்றிருக்கும் ஆசிய சமூகங்களின் மத்தியில் சமஷ்டி என்ற சொல்லின் பெயரால் ஒரு கட்சி தோன்றியமை என்பது ஆசிய சமூக வளர்ச்சிக்கு எதுவான ஒரு சிறந்த முன்னுதாரணமே. இணைக்குழும உணர்வு மேலோங்கிய ஆசியாவில், இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஈழத் தமிழ் பேசும் மக்கள் கிறீஸ்தவரான செல்வநாயகத்தை ஆயுட் காலத் தலைவராக ஏற்றுப் போற்றியும் கொண்டமை கூட ஒரு சிறந்த முன்னுதாரணமே.

சமஷ்டி கோரிக்கையை அடைந்ததற்கான வழிமுறையாக அகிம்சைப் போராட்டத்தை இவர் தேர்ந்தெடுத்தார். இந்தியாவிற்கு மிக அருகே அமைவிடத்தைக் கொண்ட தீவென்ற வகையில் இந்தியாவின் காந்தியால் அறிமுகப்படுத்தப் பட்டிருந்த அகிம்சை முறை இலங்கைக்கும் இலகுவாகப் பரவியது. ஆதலால் அகிம்சை வழிமுறையில் சமஷ்டி அரசமைப்பை ஸ்தாபிப்பது என்ற இலட்சியம் சமஷ்டிக் கட்சியால் (தமிழரசுக் கட்சி) முன் வைக்கப்பட்டது. இந்த அகிம்சைப் போராட்ட வழிமுறை எப்படி அமைந்திருந்தது என்பதை பரிசீலனை செய்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கம். குறிப்பாக அகிம்சைப் போராட்டக் காலம் என வர்ணிக்கப்படத்தக்க 1956ஆம் ஆண்டிலிருந்து 1977ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியே இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகும்.

ஈழத்தமிழர் ஒரு புள்ளிவிபரக் கொத்தல்ல, அவர்கள் நீண்ட வரலாற்றில் திரண்டெழுந்து ஒரு வஸ்து; ஒரு வினோதமான இரசாயனக் கலவை. ஈழத்தமிழரை விளங்க முற்பட்ட பலரும் தத்தமது நோக்கு நிலையில் நின்றே யானை பார்த்த குருடனைப்போல பார்த்தனர். பிரித்தானியரின் பார்வையில் ஈழத்தமிழர் "விசுவாசம் மிக்கச் சேவகர்" என்பது. இரண்டு கிலோ மீற்றர் நீளமும் இரண்டு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட யாழ்ப்பாணத்தாரின் தீர்மானமல்ல தமிழரின் தீர்மானம் என்று ரஜீவ் காந்தி மீற்றர் கணக்கில் தமிழரை அளக்க முற்பட்டார். தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையிலான இனப்பிரச்சினை இட்டு நிரப்பப்பட முடியாததும். விளங்கிக் கொள்ள முடியாததுமான அதளபாதாள வேறுபாட்டைக் கொண்டுள்ளது என்ற பொருள்பட ஜே.என். டிக்ஸித் கூறினார். ஈழத்தமிழர் புதிரும் வினோதமுமான மக்களென்பது டிக்ஸித்திற்குத் தெரிந்துள்ளது. ஈழத்தமிழரை இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் கருவிகள் என ரோகண விஜயவீர கூறினார்.

இப்படி பலராலும் பலவாகக் கூறப்படும், மதிப்பிடப்படும் ஈழத்தமிழரின் 20ஆம் நூற்றாண்டு அரசியல் வரலாற்றைச் சிறப்பாக

**"எப்போதும் உன்னதமான போராட்டங்களுக்குத் தயாரானவர்களாய் தமிழ் மக்கள் இருந்துள்ளனர் என்பதை வரலாறு எமக்குக் கூறுகின்றது, நீண்ட காலமாய் பல்வேறு எதிரிகளினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் அப்பாவித் தமிழ் மக்களின் பக்கம் நின்று நிதானமாகவும் பொறுப்புடனும் வரலாற்றை எடைபோடுதலே வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளில் ஒன்றாகும்."**

ஆராய்ந்து எழுதினால் மட்டுமே தமிழ் மக்களைப் புரிந்து கொள்ளுதல் சாத்தியப்படும். தமிழர் தமது இருபதாம் நூற்றாண்டு வரலாற்றை ஆய்ந்தறிந்து புரிந்து கொள்ளத் தவறுவார்களேயானால் தமக்குரிய 21ம் நூற்றாண்டு வரலாற்றை சிறப்புற ஒழுங்கமைக்க முடியாதவர்களாவார்கள். எனவே தமது 20ஆம் நூற்றாண்டு வரலாற்றைத் தமிழர் மிகச்சிரத்தை எடுத்து ஆராய்ந்து எழுத வேண்டும். பிற இனங்களுக்கு மட்டுமல்ல தமிழன் தனக்குத் தானே புரியாத புதிராயுமுள்ளான்.

மேலோட்டமான இச்சிறு கட்டுரையில், 20ஆம் நூற்றாண்டு ஈழத்தமிழர் கடந்து வந்த ஒரு போராட்ட முறையான அகிம்சைப் போராட்ட முறையை மதிப்பிடுவதற்கான ஒரு சிறு முற்குறிப்பை மட்டும் குறிப்பிடலாம் என தோன்றுகின்றது.

சமஷ்டிக் கோரிக்கை ஆசியாவின் அன்றைய சூழலிற் சிறப்பானது என்பதிற் சந்தேகமில்லை. ஆனால் அந்த இலட்சியத்தை அடைவதற்கான அகிம்சைப் போராட்டமுறை எவ்வளவு தூரம் சிறப்பாகப் பின்பற்றப்பட்டது என்பது கேள்விக்குரியதே. காந்தியின் அகிம்சைப் போராட்டத்தோடு ஈழத்தில் நிகழ்ந்திருந்த அகிம்சைப் போராட்டங்களை ஒரு போதும் ஒப்பிட முடியாது.

சமஷ்டிக் கட்சியின் முதலாவது பகிஷ்கரிப்புப் போராட்டம் 1950ஆம் ஆண்டு சோல்பரியின் யாழ் விஜயத்திற்கு எதிரானது. இது பெரிதும் கோரிக்கையினவானதே. மிகச் சிறு அளவிற்தான் இதன் வெற்றி அமைந்தது. இலங்கையில் நிகழ்ந்த முதலாவது கறுப்புக் கொடிப் போராட்டம் பிரதமராயிருந்த கொத்தலாவலையின் 1954 ஆம் ஆண்டு யாழ் விஜயத்திற்கு எதிரானது. இக் கறுப்புக் கொடிப் போராட்டம் சில நிமிடங்கள் நீடித்தது. இப்படிப்பட்ட கறுப்புக் கொடிப் போராட்டம், பகிஸ்கரிப்புப் போராட்டம், கதவடைப்புப் போராட்டம் எனக் சிறு சிறு போராட்டங்களைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் மூன்று அகிம்சைப் போராட்டங்களையே முக்கியமானவையாக் கொள்ளமுடியும். அதில் முதலாவது 1956 யூன் 5ஆம் திகதி தனிச் சிங்கள மசோதாவிற்கெதிரான சமஷ்டிக் கட்சியின் காலிமுகத்திடற் சத்தியாக் கிரகம். அன்று காலை காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் ஆரம்பமானது. சிங்களக் குண்டர்களின் தாக்குதல்களினால் சத்தியாக்கிரகம் சில மணித்தியாலங்களுடன் கைவிடப்பட்டது. இதுபற்றி அ.அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறுகிறார். "காடையர் வீசிய கல்லினால்

**- மு திருநாவுக்கரசு -**

எனது நெற்றி பிளந்தது. எத்தனையோ தொண்டர்கள் காயமுற்றனர். பகல் ஒரு மணிக்கு தலைவர்கள் எல்லோரும் ஆலோசித்துச் சத்தியாக்கிரகத்தை நிறுத்தித் தொண்டர்களை திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தனர்."

அடுத்து இரண்டாவது பெரிய அகிம்சைப் போராட்டம் "திருமலை யாத்திரை" இது 1956 ஒகஸ்ட் 6ஆம் திகதி தொடங்கி 16ஆம் திகதி வரையான பத்து நாட்கள் வரை நீடித்தது யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலிருந்து கட்சித் தொண்டர்களும் மக்களுமெனத் திரண்டு திருமலை நோக்கிப் பாதயாத்திரை புறப்பட்டனர். மக்கள் மத்தியில் இதற்கு நல்லாதரவு இருந்தது. இவற்றில் மக்கள் விடுதலை உணர்வையும், உற்சாகத்தையும் வெளிப்படுத்தினர். இந்தப் பாதை

யாத்திரையின் முடிவில் பண்டாரநாயக்காவிற்கு ஒரு வருட அவகாசம் அளிக்கும் திருமலைத் தீர்மானத்துடன் இப் போராட்டம் நிறுத்தப்பட்டு விட்டது.

அடுத்து 1961ஆம் ஆண்டு நிகழ்ந்த 58 நாட்கள் நீடித்த சத்தியாக்கிரகப் போராட்டம் இலங்கையில் அதிக நாட்கள் நீடித்த மிகப்பெரும் அகிம்சைப் போராட்டம் இதுவே. இதுவே சமஷ்டிக் கட்சியின் ஆகப்பெரிய அகிம்சைப் போராட்டமும் ஆகும். உண்மையான அர்த்தத்தில் இதுவே சமஷ்டிக் கட்சியின் இறுதி அகிம்சைப் போராட்டமுமாகும். 58 நாட்கள் வரை நீடித்த சத்தியாக்கிரகத்தை பிரதமராயிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா பொருட்படுத்த வில்லை. இதுபற்றி காவலூர் நவரத்தினம் பிற்காலத்தில் என்னிடம் தெரிவித்திருந்த ஒரு கருத்தை கூறுவது பொருந்தும்.

"போராட்டம் பயனின்றி நீடித்துக் கொண்டு போனது. எப்படிப் போராட்டத்தைக் கைவிடுவதென்று தெரியவில்லை. அந்நிலையில் சட்டவிரோத தபால் சேவைய்ய ஆரம்பிப்பதன் மூலம் அரசு நேரடியான தலையீட்டைச் செய்து போராட்டத்தை வெற்றிகரமாக நிறுத்த வழிசமைக்கலாம் என எண்ணி சட்டவிரோத தபாற் சேவையை ஆரம்பித்தோம். எதிர்பார்த்தபடியே அரசு போராட்டத்தை முடித்து வைத்தது." என்று நீண்ட விளக்கத்துடன் கூறினார்.

அவசரகாலச் சட்டப் பிரகடனம், இராணுவத் தலையீடு என்பவற்றால் 1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகம் முற்றுப் பெற்றது. அதன்பின்பு அப்படி ஒரு போராட்டத்தை கட்சி ஒரு போதும் சிந்திக்கவில்லை. இவ்வாறாக அவர்கள் கூறிய அகிம்சைப் போராட்டம் கைவிட்டப்பட்ட 15 ஆண்டுகளின் பின்னர் 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் சமஷ்டிக் கோரிக்கைக்குப் பதிலாக தமிழீழக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இதற்கான போராட்ட வழிமுறையும் அகிம்சை என்றே கூறினராயினும் அவ்வழியிற் செயற்பாடுகளை குறிப்பிடக் கூடியளவிற்கு முன்னெடுக்க வில்லை.

அப்படியாயின் அகிம்சைப் போராட்டம் தோல்வி கண்டமைக்குரிய காரணங்கள் யாவை?

1) அகிம்சைப் போராட்டங்கள் முழு அளவில் முன்னெடுக்கப்படவில்லை.

2) அகிம்சைப் போராட்டங்கள் எதனாலும் சிங்கள அரசின் பொருளாதாரத்தைப் பாதிக்கமுடியவில்லை என்பதுடன் ஒரு போதும் சிங்கள அரச இயந்திரத்தை ஸ்தம்பிக்கச் செய்யவும் முடியவில்லை. அதாவது இவற்றால் சிங்கள அரசிற்கு பாதிப்பேற் படவில்லை. ஏனெனில் எமது அகிம்சைப் போராட்டம் அரசைப் பாதிக்கக் கூடிய பொருளாதாரப் பரிமாணத்தைக் கொண்டிருக்க வில்லை என்பதுடன் எமது பொருளாதார வாழ்வுதான் தெற்கிற் தங்கு நிலையைக் கொண்டிருந்தது என்ற எதிர் யதார்த்தத்தையும் கொண்டிருந்தது. மலையகத் தமிழர் இந்த அகிம்சைப் போராட்டத்துடன் இணைக்கப் பட்டிருந்தால் நிலைமை வேறுவிதமாய் அமைந்திருக்கும். ஏனெனில் அவர்கள் ஒரு பொருளாதாரச் சக்தி.


3) 1977ஆம் ஆண்டு வரை தமிழ்த் தலைவர்களில் எவரும் முழுநேர அரசியற் தலைவர்களாக இருந்ததில்லை. பகுதி நேரத் தலைவர்களாக இருந்து கொண்டு ஒரு மக்கள் கூட்டத்தின் தலைவிதியை நிர்ணயிக்கலாம் என்று எண்ணியதும், அகிம்சைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கலாமென்று எண்ணியதும் வேடிக்கையானது. 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்பு எதிர்கட்சித் தலைவராய் இருப்பவர் வேறு தொழில் புரிய முடியாதென்ற உத்தியோகபூர்வ நிர்ப்பந்தத்தின் பின்னணியில் அ.அமிர்தலிங்கம் முழுநேரத் தலைவரானார். இதற்கு அப்பால் இந்த அகிம்சைப் போராட்டக் காலம் முழுவதும் பகுதிநேரத் தலைவர்களின் காலமே.

4) தமிழ்த் தலைவர்களில் எவரும் சில மாதக்கணக்கான காலமே சிறையிலிருந்து ள்ளனர் வருடக் கணக்கான ஆண்டுகளுக்கு அவர்களிற்கான சிறையை எதிரியால் நீடிக்க முடியாதளவிற்கே இவர்களது அகிம்சைப் போராட்டங்களின் பருமன் அமைந்திருந்தது.

5) எதிரி அகிம்சைப் போராட்டங்களை அற்பமாய் எடுக்கக்கூடியளவிற்கே போராட்டங்களின் தன்மைகள் காணப்பட்டன.

தமிழ் மக்களின் பிரச்சினையை சூடுதணியாது வைத்திருந்ததற்கும் அப்பால், தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் உணர்வை தூண்ட உதவியதற்கும் அப்பால் எமது அகிம்சைப் போராட்டம் பெரிதும் முன்னேற முடியாது போனது. எனவே இந்த அகிம்சைப் போராட்டத் தோல்வியில் எதிரிக்கு ஒரு பக்கம் பங்கு இருக்கின்ற போதிலும் மறுபக்கப் பங்கு இப்போராட்டத்தை முன்னெடுத்த தலைமைக்குரியது.

இதனை உணர்ச்சிவசப்பட்டு வெறும்




பற்றுப் பாசங்களுக்குள்ளாற் பார்க்காது அறிவுபூர்வமாகச் சரிவர எடைபோட வேண்டியதே வருங்கால வளர்ச்சிகளுக்குமான அத்திவாரமாகும்.

எப்போதும் உன்னதமான போராட்டங்களுக்குத் தயாரானவர்களாய் தமிழ் மக்கள் இருந்துள்ளனர் என்பதை வரலாறு எமக்குக் கூறுகின்றது, நீண்ட காலமாய் பல்வேறு எதிரிகளினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டுவரும் அப்பாவித் தமிழ் மக்களின் பக்கம் நின்று நிதானமாகவும் பொறுப்புடனும் வரலாற்றை எடைபோடுதலே வளர்ச்சிக்கான முன் நிபந்தனைகளில் ஒன்றாகும்.

# செய்தியைத் தயாரிக்கும் முறை

செய்தியை எழுதும் முறைக்கு ஒரு அடிப்படையைப் பத்திரிகைத்துறை ஏற்படுத்தியுள்ளது.
-ஒரு செய்தியைத் தொகுக்கும் முன், அதில் பின்வரும் விடயங்கள் உள்ளனவா என்பதைத் திட்டமிடுதல் வேண்டும்.
-செய்தியின் பெறுமதி-News wortyness. வழங்கப்படும் செய்தி பெறுமதியுள்ளதாக இருத்தல் வேண்டும். பெறுமதி இல்லாத ஒரு செய்தியாயின் நிராகரித்துவிட வேண்டும்.
-உறுதித்தன்மை அழுத்திக் கூறுதல்.-Emphsis எழுதப்படும் செய்தி தொடர்பாக உறுதியாக இருத்தலுடன் அதனை அழுத்திக் கூறவேண்டும்.
-When,why,what,who,which-
இந்த 5 வினாக்களுக்கும் விடை அளிக்கும் வகையில் எழுதப்போகும் விடயத்தை ஆராய்ந்து எழுதுதல்.
-பேச்சாளர் -Spokesman ஒரு செய்தி தொடர்பாக யார் கூறியது என்று குறிப்பிட்டால் அச்செய்தி நம்பகத்தன்மையுடையதாக இருக்கும்.
-இவற்றை அடிப்படையாகக் கொண்டு செய்திகளை எழுதும் பொழுது பின்வரும் அடிப்படைத் தன்மைகளுக்கேற்ப செய்தியை எழுதுதல் வேண்டும்.
-ஒரு செய்தி என்று குறிப்பிடப்படும் பொழுது அதற்குப் பின்வரும் நான்கு கூறுகள் இருத்தல் வேண்டும்.
1.தலைப்பு (Head line)
2.முன்னுரை. (Lead)
3.செய்தியின் உடற்பகுதி-(Body of the News)
4.முடிவுரை (End of the News)
இவற்றைக் கொண்டு செய்திகள் கவிழ்ந்த கூம்பக உருவில் எழுதப்படுவது வழக்கம். இக்கவிழ்ந்த கூம்பக உருவில்,
1.நிகழ்ச்சியின் முக்கிய தகவல்கள் அல்லது சம்பவங்கள் முதலாவது பந்தியில் சுருக்கமாகக் கொடுக்கப்படும். இது தலைப்பு அல்லது முதல் பந்தி எனப்படும்.
முதல் பந்தியின் செய்தியின் முக்கிய அம்சங்கள் யாவும் சுருக்கமாகக் கூறப்பட வேண்டும். இதில் பல கருத்துக்களைப் புகுத்த முயலக் கூடாது.
வாசகர்களை வாசிக்கத் தூண்டுவது முதல் பந்தியே. எனவே முதல் பந்தியை வாசித்ததுமே விடயத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் அச் செய்தி இருத்தல் வேண்டும். இதில் அதிகளவில் வசனம் இருக்கக் கூடாது. ஆய்வுகளின்படி 17சொற்கள் கொண்ட முதல் பந்தியே சிறந்ததாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால்15-20 சொற்கள் கொண்ட முதல் பந்தி வரவேற்கக்கூடியது.
2. முதல் பந்தியை அடுத்து வருவது செய்தியின் உடற்பகுதி. தலைப்பில் கொடுக்கப்பட்ட தகவல்கள் இங்கு விரித்து எழுதப்படும்.
3.அதனை அடுத்துவரும் தகவல்கள் யாவும்,அவற்றிற்குரிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்படும்.முக்கிய



தகவல்கள் முன்னாலும், ஏனையவை பின்னாலும் வரும்வகையில் செய்தியை எழுத
வேண்டும்.
இவ்வாறு கவிழ்ந்த கூம்பக முறையில் செய்திகள் எழுதப்படுவதால், பின்வரும் அனுகூலங்கள் ஏற்படுகின்றன.
1.அவசரமாக வாசிப்பவர்கள் முதல் பந்தியை வாசித்து விடயத்தைக் கிரகித்துக் கொள்வர்.
2.இடத்தட்டுப்பாடு ஏற்படின் உதவி ஆசிரியர் செய்தியின் ஒரு பகுதியை வெட்ட நேரிட்டால் கடைசியில் இருந்து வெட்ட இந்த அமைப்பு வசதியாக இருக்கும்.
கீழ் இருந்து வெட்டும்பொழுது முக்கியம் குறைந்த செய்திப் பகுதியே நீக்கப்படும்.
ஒரு செய்தியில் பொருத்தமான நிகழ்வுகள், சம்பவங்கள் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு செய்தியின் நம்பகத் தன்மையைப் பேணுவதற்கு உரிய பொருத்தமான தரவுகள், திகதிகள், யார் கூறியது, எங்கிருந்து பெறப்பட்டது என்பன போன்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேணடும். அதாவது செய்தியின் மூலத்தைக் குறிப்பிடுவது அதன் உண்மைத் தன்மையை வலிமைப்படுத்தும். உ-ம்- செய்தி நிறுவனங்களை மேற்கோள் காட்டுதல். மற்றும் செய்தியாளர்கள், அதிகாரிகள் என்பன.
ஒரு சம்பவத்தில் 100பேர் கொல்லப்பட்டால் அவர்களது பெயர், விபரம் எழுதுதி வாசகர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களைத் திருப்திப்படுத்தும் செய்தியைத் தொகுக்க வேண்டும். கிடைக்கின்ற செய்திகளை உடனுக்குடன் விரைவாக வாசகர்களுக்கு வழங்கிவிட வேண்டும். இன்றைய செய்தி நாளைக்குப் பிந்திய செய்தியாகி விடும்.

ஒரு சம்பவம் எவ்வளவுக்குப் பாரதூரமானதாக உள்ளதோ அதற்கேற்ப செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
கூடாத சம்பவங்கள் நல்ல செய்தியாக இருக்கும் என்று சொல்வார்கள். உ-ம்- பாலியல் வன்முறை, கொலைகள். Gorald Ford தம்ளரை எடுத்துச் சென்றால் அது ஒரு பாரதூரமான செய்தி. ஏனெனில் Ford அமெரிக்க ஜனாதிபதியல்லவா.
வாசகர்கள் எல்லோருக்கும் ஒரு ஆவல்.(Curiosity) இருப்பதால், அதற்கேற்ப செய்தியை அமைத்து வழங்க வேண்டும்.
பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிக்குச் செய்திகளை எழுதும் பொழுது மொழிநடை இலகுவாகவும், குறைந்த சொற்களைக் கொண்ட வாக்கியங்களாகவும் இருத்தல் வேண்டும். படிப்பறிவு இல்லாதவர்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் இலகுவான மொழிநடையில் இருத்தல் வேண்டும். பேச்சுத் தமிழில் கொச்சை நீக்கி எழுத வேண்டும்.
பேசுவது போலவே எழுத வேண்டும் என்று தினத்தந்தியின் ஆசிரியர் சி.ப.ஆதித்தனார் கூறியதுடன் தினத்தந்தியை எளிமையான மொழிநடையில் வெளியிட்டார்.
உ-ம் -தேத்தண்ணி - தேநீர்
உ-ம் - இலக்கியத்தமிழ் எழுத்துத் தமிழ்

| | | |
|---|---|---|
| கோன் | - | அரசன் |
| புள் | - | பறவை |
| செப்பினார்- | | சொன்னார் |

எந்த ஒரு அரசியல் செய்தியை எழுதும் பொழுதும் அதற்குரிய பின்னணியைச் சிறிது புகுத்தி எழுத வேண்டும். இதற்கு நூலகம், (Cutting files) என்பவற்றில் இருந்து அதற்குரிய தகவல்களைத் திரட்டி எடுக்க வேண்டும்.
ஒரு சம்பவம் பற்றிய செய்தியை எழுதும் பொழுது அந்தந்த இடங்களின் பன்கட்.புலம் என்பவற்றை அறிய வாசகர்கள் ஆவலாக இருப்பதால், அதற்கேற்ப அவை தொடர்பான பின்னணியையும் அறிந்து எழுதுவது சிறப்பாக இருக்கும்.
தேவையற்ற சொற்களைப் புகுத்துவதையோ, சுற்றி வளைத்து எழுதுவதையோ, புரியாத சொற்களைப் பயன்படுத்துவதையோ தவிர்த்தல் வேண்டும். வாக்கியங்களை அமைக்கும் போது கலப்பு வாக்கியங்களைப் பயன்படுத்துவது, தனி வாக்கியங்களில் எழுத வேண்டும். செய்திகளை எழுதும் போது, முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம், இலக்கண விதிகளுக்கு அமைவாக வாக்கியம் அமைந்துள்ளது என்பதே.
உ-ம்
1.மெல்லின, இடையின, வல்லின எழுதுப் பிழைகள்.
2.செயப்பாட்டுவினையில் எழுதுவது, செய் வினையில் எழுத வேண்டும்.
எ.கா: ஆசிரியர் நூலை எழுதினார். (செய்வினை)
ஆசிரியரால் நூல் எழுதப்பட்டது. (செயப்பாட்டு வினை)
3.பிறவினையை உபயோகிக்காது தன் வினையில் எழுதுவது.

ஒரு குறிப்பிட்ட செய்தியை எழுதும் பொழுது, அந்தச் சம்பவத்தை மட்டுமே எழுதுதல் வேண்டும். தனிப்பட்ட கருத்துக்கள் அல்லது விமர்சனங்களைச் சேர்த்தல் கூடாது.
தேவையாயின் அவை தொடர்பான மேலதிக விபரங்களைப் பற்றி எழுத்திலோ அல்லது விவரணக் கட்டுரையிலோ குறிப்பிடலாம்.

இலங்கை ஒரு பல்லின சமூக நாடாக இருப்பதால், ஒரு சமூகத்தையோ அல்லது சாதியையோ பாதிக்கும் வகையில் எழுதுதல் கூடாது.

சர்வதேச உறவுமுறை பேணப்படும் வகையில் எழுதுதல் வேண்டும். இன்னொரு நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலோ அல்லது அந்த நாட்டைத் தாக்கியோ எழுதக் கூடாது.

-வல்வை.ந.அனந்தராஜ்-

பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டபடும் நபர்களைப் பற்றி எழுதும் பொழுது, அவரது தனித்துவம், கணவ்யல்வு என்பவற்றையும் கவனித்து எழுதுதல் வேண்டும்.
பந்திகள் நீண்டவையாக இருக்கக் கூடாது. சிறிய பந்திகளாக அமைப்பதால், வாசிப்பதற்கு இலகுவாகவும், கவர்ச்சியாகவும் இருக்கும். இவற்றுக்கு உபதலைப்புக் கொடுத்து எழுதுவது வேகத்தைக் கூட்டும். எண்கள் எப்பொழுதும் இலக்கங்களிலேயே கொடுத்தல் வேண்டும். பந்தியின் ஆரம்பத்தில் வந்தால் எழுத்தில் கொடுக்க வேண்டும்.
செய்தித் தணிக்கைகள் நிலவும் காலத்தில் மக்களுக்கு ஏதோ ஒரு வகையில் உண்மைச் செய்திகளை எழுத வேண்டும். இதற்கு இறுதியில் உறுதிப்படுத்தப் படாத செய்திகள் தெரிவிக்கின்றன என்று போடலாம்.


யாழ் நகரில் துவிச்சக்கரவண்டி
மற்றும் உதிரிப்பாகங்கள், பெப்சி ,மெரண்ட,
ரீவி,றேடியோ போன்ற தரமான பொருட்களை
விநியோகிக்கும் ஒரே நிறுவனம்





இ.ச.பேரம்பலம் சக
நிறுவனம்
50.52.54. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் தொ.பே. இ. 021-2988.



உங்களுக்குத் தேவையான
இலத்திரனியல் உபகரணங்களுக்கும் –
உதிரிப்பாகங்களுக்கும்.....
எம்மை நாடுங்கள்.....



வடபகுதிக்கான 'ஹீரோ ஹொண்டா'
வகை மோட்டார் சைக்கிள்களின் ஏக
விநியோகஸ்தர்கள்

வடபகுதி வாசிகளே....
நீங்கள் எம்மிடம் கொள்வனவு செய்யும் மோட்டார் சைக்கிள்களுக்கான சகல பதிவுகளையும் உங்களுக்கென நாமே செய்து தருகின்றோம்.

N.S ரட்ணம் பிரதர்ஸ்
இல.6 – முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா. தொ.பே. 024 – 21237

# இன்னொரு போர்முகம்

**தொ**டர்ந்தும் அங்கிருந்து அவதானிக்கிறேன். அந்தப் பெரிய தேடுதல் விளக்கானது உயிர் பெறுகின்றது. அது விமான ஓடு பாதையின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை பாரிய வெளிச்ச வெள்ள மொன்றை பாய்ச்சியவண்ணம் மெல்ல நகர்கின்றது. சந்தேகத்திற்கிடமான இடங்களில் சிறிது நின்றே செல்கின்றது. இரண்டுதரம் அவை ஒளிர்வதற் கிடையேயான நேரம் 10 நிமிடங்கள் ஆகும் என்பதைக் கவனிக்கின்றான். அது உயிர்பெறும் போது, உணர முடிகின்றது.

சரியான சந்தர்ப்பமொன்றில் பிரதான பகுதியை நோக்கி நகரத் தொடங்குகின்றான். இப்படியொருவன் இவ்வளவு பாதுகாப்பேற்பாடுகளுக்கும் தண்ணி காட்டி வருவான் என அவர்களால் எதிர்பார்க்கமுடியாமல் இருந்தமையே இவனுக்கு பலமான சாதகமான காரணியாக அமைந்துள்ளது. எதை எங்களால் செய்ய முடியாது என எதிரி எண்ணுகிறானோ அதனை நிச்சயம் நாங்கள் செய்ய வேண்டும். இவன் செய்கின்றான். இப்பொழுது விமான ஓடுபாதைக்கு அண்மையில் வந்து விட்டான். பக்கமாக நிலத்தின் கீழ் இருக்கும் வரிசையான மின்குமிழ்களைக் கண்டவனுக்கு நேற்றைய நாள் காட்சிகள் நினைவில் வர "தட்டித்தவறி இப்பொழுது பிளேன் வரவேணும்" என எண்ணியதுதான் தாமதம் விரைவாக 60 மீற்றர் அகலமான ஓடுபாதையைக் கடந்து புல்வெளிக்குள் பிரவேசித்து விட்டான். எப்பொழுதும் ஈரலிப்பை பேணியவாறு முழங்காலளவு உயரத்திற்கு புல் காணப்பட்டது.

இப்பொழுது இவன் ஊர்ந்துசெல்ல புற்கள் மடிகின்றன. அவை மடியும் ஓசையே காதின் அருகிலுள்ள கருங்கல் ஒன்றின் மேல் சம்மாட்டியால் அடிக்கும் போது சத்தம் கேட்பது போலுள்ளது. ஒருவாறு ஊர்ந்து சென்று பிரதான முகாமைச் சுற்றி மின்சாரம் பாய்ச்சப்படும் வேலியிலிருந்து 50 மீற்றர் தூரமளவில் படுத்திருக்கின்றான். அவ்வேலிக்கு முன்னால் ஒரு கம்பிறோல் தடை காணப்படுகின்றது. இதற்கு முன்னால் வெளிப்புறமாக இன்னுமொரு ஒடுக்கமான பாதை காணப்படுகின்றது. இதற்கு முன்னால் 25 மீற்றர் இடைவெளியில் மின் கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன. அவை தம் கடமையை சரிவரச் செய்வதால் பூரித்து நிற்கின்றன. மின்சார வேலிக்குள் அண்ணளவாக மூன்று மீற்றர் உயரத்தில் அமைக்கப் பட்ட காவலரண்கள் அல்லது கண்காணிப்பரன்கள் பத்து மீற்றர் இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருப்பவர்களுக்கு முன்னால் பரந்து விரிந்திருக்கும் பிரதேசங்கள் அனைத்தும் தெளிவாகத் தெரியும். அப்பகுதி முழுவதும் அவர்கள் வைத்திருக்கும் பிரதேசங்கள் கொல்லும் தூரத்திற்குட்பட்டே இருக்கும். உட்புகும் எவரையும் சுட்டு வீழ்த்துவது இலகுவாக்கப்பட்டு இருக்கின்றது.

இன்னும் கொஞ்சம் கிட்டப் போய்ப் பார்ப்போம், எண்ணியவன் மெல்ல மீண்டும் ஊர்கின்றான். மீண்டுமோர் அதிர்ச்சி வைத்தியம் கிடைக்கிறது, இன்னுமொருவன் நாயொன்றுடன் அவ் ஒடுக்கலான பாதையில் வருகின்றான். அது இப்பொழுது வள்...வள்...என குரைத்தபடி அவனையும் இழுத்துக்கொண்டு இவனை நோக்கி பாய்ந்து வருகின்றது. இத்துடன் எல்லாம் சரி. பட்டபாடெல்லாம் இன்னும்



சில கணங்களில் பஸ்பம் ஆகப்போகின்றது. இவனிடம் பயத்திற்குப் பதிலாக கவலை குடிகொண்டு விட்டது. சே.. அண்ண எவ்வளவு எதிர்பார்ப்போடு இருப்பார். அம்மாவிற்கு நான் இப்படியெல்லாம் செய்யிறது தெரியுமா? என பலவாறு எண்ணியவனுக்கு இப்போது அவன் மனதில் அவனுக்கு வெறுப்பு வருகின்றது. முந்தி ரோமச் சக்கரவர்த்திகள் பசியோடு இருக்கும் சிங்கத்தையும், திடகாத் திரமாக இருக்கும் அடிமைகளையும் சண்டைக்கு விட்டு ரசிப்பார்களாம். அடிமை வென்றால் விடுதலையாம்... இங்கே நாய் வெல்லுமோ இல்லையோ நான் தப்பேலாது... மேற்படி எண்ணங்கள் அந்த சில கணங்களில் வந்ததுதான் அவனுக்கு வெறுப்பு வரக் காரணம். பேசாமல் மூச்சுவிடாமல் படுத்திருந்தவன், தனது கைக்குண்டை எறிவதற்குத் தயாராகின்றான். நாய் இப்பொழுது அருகில் வந்து விட்டது. இன்னும் இரண்டு பாய்ச்சல் இடம்தான் மீதி... அதிஸ்ரதேவதை இவனுக்கு மீண்டும் மாலையிடுகின்றாள். நாயை இழுத்துப்பிடித்து அவன் ரோச் அடித்துப் பார்த்து விட்டு ஏதோ தன்னுள் திட்டியவண்ணம் நாயை இழுத்துக் கொண்டு மீண்டும் அப்பாதையில் ஏறிச்செல்கின்றான். அங்கிருந்தே எடுக்கக்கூடிய தகவல்கள் அனைத்தையும் மனனம் செய்தவன் வெளியேற எண்ணுகின்றான்.

சற்று நிதானித்தவன் திரும்பி நகராமல் முகாமைப் பார்த்தவண்ணமே நகர்கின்றான். இப்பொழுது மடிந்திருக்கும் புற்களை ஓரளவு நிமிர்த்தி நிமிர்த்தி விட்டு நகர்கின்றான். இவை நாளை தடயம் ஆகிவிடக்கூடாது என்பதால் எனக்கு எவ்வளவு நல்ல மனம், என்னால புல்லுக்கூட மடியக்கூடாது என்பதினில்தான அக்கறையாக இருக்கின்றான். தனக்குததானே கூறிக்கொள்கின்றான். அவ்வாறு பின்வாங்குவது அதிக களைப்பை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

இப்பொழுது இவன்தான் முன்னர் மறைந்திருந்த கட்டிடத்திற்கே வந்து சேர்ந்து விட்டான். ரோந்துச்சுற்று தன்னைத் தாண்டும் வரை பொறுத்தி ருந்தவன் உட்சென்ற வழியாலேயே வெளிவருகின்றான். வேற்றுலோகம் இருந்து பூலோகம் வந்ததாக உணர்கின்றான்.

நேரம் அதிகாலை 3 மணியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. தான் கண்டவற்றையெல்லாம் றெஜிக்குச் சொல்கின்றான். இவர்கள் எல்லோரும் உப்பாறு வந்து குணமண்ணைக்கு வீடியோவையும் போட்டுக்காட்டி மற்றத் தகவல்களையும் வழங்குகின்றனர். வரைபடங்களையும் தயாரிக்கின்றனர். மேற்படி விடயங் களையும் சொர்ணமண்ணைக்கும் அறிவிக்கின்றனர். இவன் மீண்டும் ஒரு முறை உட்சென்று பார்க்கும்படியும் பாதைகள் எடுக்கும்படியும் அறிவிக் கின்றனர். மீண்டும் சீனன்குடா சென்ற வர்கள் வழிகாட்டிக்காகக் காத்திருக் கின்றனர். சில நாட்கள் பொறுத்திருந் தவர்கள் வழிகாட்டி இன்னும் வராததால் பொறுமையிழந்து தாங்களே நேரே போய்வர முடிவெடுக்கின்றனர்.

தொடரும்.........

# கலைஞனுக்கு மனச்சோர்வு இருக்கக்கூடாது...

ஆதிமூலம்
-தமிழ் நாட்டின் தலைசிறந்த ஓவியர்களில் ஒருவர்.
-நவீன ஓவியத்தில் புதிய பரிமாணங்களை உருவாக்கியவர்.
-பாரம்பரிய-மரபுகார்ஓவிய- சிற்ப முறைகளில் சூழ்ந்த ஈடுபாடு கொண்டவர்.
-நவீனஓவியம் குறித்த அவரது கருத்துக்களும் கேள்விகளுக்கான விடைகளும் ஓவியர்களுக்கும் ஓவியத்துரையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் பயனுள்ளதாகும்.

இயந்திரத்தனமான ஓவியம் வரைய எனக்கு விருப்பமில்லை. மிகப்பெரிய 'கேன்வாஸில'(Canvass) சுதந்திரமாக கைகளை வீசி ஓவியம் தீட்டுவதற்கும், சின்ன அளவில் வரைந்து கொடுப்ப தற்கும் வித்தியாசம் உள்ளது. எனக்கு ஒரு சமுதாயப் பொறுப்பு இருப்ப தாலேயே பத்திரிகைகளுக்கும் வரைய ஒப்புக்கொள்கிறேன்.

என் ஓவியங்களில் 90% இந்தியர் களாலேயே வாங்கப்படுகின்றது. இங்கிருக்கும் இளைய சமுதாயத்தினர்~ குறிப்பாகத் தொழிலதிபர்கள் பலர் என் ஓவியங்களை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு நவீன ஓவியங்களின் (Modern art) மீது பார்வை திரும்பியிருப்பதை மறுக்க முடியாது. சாதாரணமாக இருக்கும் ஓர் ஓவியத்தை வாங்கி மாட்டி அதையே தினந்தோறும் திரும்பத் திரும்பப் பார்த்துச் சலித்துப் போவதை விட நவீன ஓவியத்தில் தினம் தினம் நம் கற்பனைக்கேற்ப ஏராளமான உருவங்களைப் பார்க்க முடிகிறது என்பதே அதற்குக் காரணம்.

மக்களுக்கு இதுதான் பிடிக்கும் என்று தீர்மானிக்க நமக்கென்ன உரிமை இருக்கிறது. மக்களை நாம் மடையர் களென நினைக்கிறோம். அவர்களுக்கு அதுதான் பிடிக்கும் எனச் சொல்லிச் சொல்லியே மசாலாப் படங்களை எடுக்கும் தயாரிப்பாளர்களின் பேச்சுப் போல் இருக்கிறது இக்கருத்து. நல்ல படங்களை, புதுமையான ஓவியங்களை நாம் கொடுப்போம். அதை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொள்ள கொஞ்சக் காலம் ஆகலாம். நம் நாட்டில் மட்டுமல்ல வளர்ச்சியடைந்த



நர்டுகளிலும் கூட பாமரசனங்களுக்கு நவீன ஓவியத்தை ரசிக்கும் திறன் குறைவுதான். அதை நான் ஒப்புக் கொள்கின்றேன். நல்ல நாவல், நல்ல இலக்கியம் போன்றவற்றை தேடித் தேடி மக்கள் படிக்கும் பழக்கம் இப்போதுதான்

-ஓவியர் ஆதிமூலம்-

வளர ஆரம்பித்திருக்கிறது. மக்களுக்கு பழக்கமில்லை என்பதற்காக ஒரே மாதிரியான ஓவியங்களைக் கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை. (நவீன ஓவியங்களில் நம் கற்பனைக்கேற்ப ஏராளமான உருவங்களை உருவகம் செய்துரசிப்பது சாத்தியம். நீங்கள் ஒரு எண்ணத்தை அல்லது உருவத்தை மனதில் நினைத்து ஓவியத்தை வடிக்கிறீர்கள். உங்களின் ஓவியத்தை ரசிப்பவருக்கும் உங்களது கற்பனைதான் தோன்றும் என்று சொல்ல் முடியாதே.....?)

நான் கற்பனை செய்து தீட்டியே ஓவியப்படிதான் அதை ரசிப்பவனும் கற்பனை செய்து பார்க்க வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லையே..... என் ஓவியத்தை நான் வடித்திருக்கும் கோணத்திலிருந்து நான் பார்க்க வேண்டும் என்று யாரையும் நான் கட்டாயப்படுத்த முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது.

*உங்கள் ஓவியத்தின் மூலத்தை (கற்பனையை) அதனை ரசிப்பவனால் புரிந்து கொள்ள முடியாமல் போனால் அது உங்களைக் காயப்படுத்தாதா?

*நிச்சயமாக இல்லை.


*நவீன ஓவியங்களைப் பார்ப்பவர் களுக்கு விதவிதமான கற்கனைகள் தோன்றுவது போல் அதை வடிப்பவர் களுக்கும் தோன்றுமா?

*என்னைப் பொறுத்தவரை அப்படி யெல்லாம் தோன்றுவதில்லை. ஒரு உருவத்தைத் தீட்டிவிட்டால், எப்போது பார்த்தாலும் எனக்கு அந்த உருவம்தான் தோன்றும்.

*யாருடைய ஓவியங்கள் உங்களுக்கு தூண்டுகோலாய் இருக்கின்றன? யாருடைய பாணியை நீங்கள் பின்பற்றுகின்றீர்கள்?

*என் ஆசிரியர்கள் சந்தனராஜ்~பிரபல ஓவியரும் சிற்பியுமான தனபால் ஆகியோர் எனக்கு மிகவும் Inspirarion ஆக இருந்திருக்கி ன்றார்கள்.

Global Atmosphere எனப்படும் உலகளாவிய சுற்றுப் புறவியல்தான் என் ஓவியங்களின் மையக்கரு. வண்ணங்கள், அசைவுகள், ஒளி என்று அனைத்தும் என் ஓவியங்களின் பாத்திரங்கள் பஞ்ச பூதங்களாலான காற்று, நீர் நெருப்பு, ஆகாயம் போன்றவற்றின் உருவங்களே என் ஓவியங்களென ஓவியங்களில் காற்று மெது மெதுவாக ஊடுருவிப்போகும், சிவப்பாய் நெருப்பு கொழுந்து விட்டெரியும். நீரில் பிரதிபலிக்கும் உருவங்களைக் கூட நான் விட்டு வைப்பதில்லை. ஒரு வண்ணத்தை மற்றொரு வண்ணத்தில் குழைத்தால் கிடைக்கும் சுவையான வண்ணங்களை என் ஓவியங்களில் உபயோகிக் கிறேன். ஆனாலும் என் ஓவியங்களில் ஓரிடத்திலாவது வண்ணங்களை அதன் இயல்பான (Original) நிறப்படியே உபயோகிக் கிறேன். நான் அறியாமலேயே, எனக்குத் தெரியாமலேயே Original வண்ணங்கள் வந்திடும் பசுமையான இலை, கடல்நீலம் போன்ற மாற்றமுடியாத வண்ணங்களில் கலப்படமற்ற இயல்பான இயற்கையான வண்ணங் களையே பயன்படுத்துகிறேன்.



ஒருமுறை முழுக்க முழுக்க வெள்ளை நிறத்தை கொண்டு மட்டுமே ஓவியம் தீட்டினேன். நவீன ஓவியம் என்பது பார்த்தவுடன் சட்டென புரிந்து கொள்ளமுடியாமல் இது என்னவாக இருக்கும்?! என்ற தேடுதலைப் பிறப்பிப்பதாய் இருக்க வேண்டும். பிடிபடாத ஏதோவொன்றைத் தேடுவதாய் இருக்கவேண்டும்.

*இப்போது பத்திரிகைகளில் கதைகள் தொடர் கதைகளுக்கு வரையப்படும் ஓவியங்கள் பற்றி உங்கள் கருத்து என்ன?

கதையின் சம்பவங்களை விலாவாரியாக ஓவியத்தில் தீட்டி வருகின்றார்கள். ஒரு சில கோடுகள், வண்ணங்கள் மூலமாக சம்பவங்களை கோடு காட்டிவிட்டால் போதும். காட்டிவிடவும் முடியும். எல்லாச் சம்பவங்களையும் வெளிப் படையாகத் தீட்ட வேண்டிய அவசியம் இல்லை என்பது என் கருத்து. அப்படித் தீட்டப்பட்ட ஓவியங்களில் பாத்திரங்கள் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். மக்களின் கற்பனைச் சக்திக்கு அங்கே இடமிருக்காது.

பத்திரிகைகளுக்கு ஓவியம் வரைபவர்கள் தாங்கள் படைக்கும் பாத்திரங்களைக் கொஞ்சம் வித்தியா சமாகக் கொடுக்க வேண்டுமென்பதே என் அபிப்பிராயம், மக்களின் கற்பனா சக்திக்கு தீனிபோடும் விதத்தில் ஓவியங்கள் தீட்டப்படவேண்டும். மருது போன்ற வர்கள் இப்போது புதுமையான ஓவியம் வரைந்து வருகின்றார்கள்.

*வளர்ந்து வரும் ஓவியக் கலைஞருக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?

*கலைஞனுக்கு மனச்சோர்வு என்பதே இருக்கக்கூடாது, மற்ற எந்தக் கலையையும் விட ஓவியக் கலைக்கு வாய்ப்புகள் அதிகம். அதில் கட்டுப்பாடுகள் இல்லை. அடங்கல்கள் இல்லை Universal art எனப்படும் உலகளாவிய கலை இது. இந்தக் கலைக்கு வானமே எல்லை.......

சிறுகதை

# புதிய பதிவுகள்

என்னை மறந்து போட்டியேடா என்று கேட்டவரை, நிமிர்ந்து பார்த்த யோசேப் அண்ணனுக்கு அவரை அடையாளங்காண முடியவில்லை. இந்த ஐம்பது வயது அலைச்சல்களுக்கும், அல்லோல கல்லோலத்துக்குமிடையில், இடறுப்பட்ட எத்தனை புதுமுகங்கள், எத்தினை புதுச்சினேகிதங்கள் எல்லாரையும் எல்லாவற்றையும் எப்படி ஞாபகம் வைத்திருக்க முடியும். என்றாலும் இவ்வளவு உரிமையோடு டேய் போட்டுக் கதைக்கும் இவன் ஆர்? என்று மனசைப்போட்டுக் குழப்பிக் கொண்டிருக்க அவர் மெல்லத் தனது சாரத்தை உயர்த்தி காலின் தொடைப்பகுதியில் இருந்த காயத்தைக் காட்டி, "நீயும் அந்தக் கங்காணியாரும் இல்லையெண்டா நான் இப்ப இருக்கமாட்டன் மச்சான்" என்றார். "அட இது அவன் தவம்" யோசேப் அண்ணனுக்கு ஞாபகங்கள் உடைத்துக்கொண்டு வந்தது; இரண்டு பேரும் ஆடு மேய்த்த சின்னவயசு ஞாபகம். ஆடு பிடிக்கவந்த நாயொன்று, தவத்தின்ர தொடையில் கவ்விக்கடிச்சுக்குதற, ஒரு சனமும் இல்லை யோசப் அண்ண தான், தான் வச்சிருந்த கத்தியாலையே அதை அடிச்சுக் கொண்டுட்டு அவனையும் தூக்கிக்கொண்டு வந்தவர். சின்ன வயசுச் சினேகிதம், கோவிலுக்கும், பள்ளிக்கும், கடற்கரைக்கும் கூடியே திரிஞ்சவை ரெண்டுபேரும்.

எங்கடாப்பா இருக்கிறார் எங்கட கங்காணியார் என்றார் தவமண்ணை "அந்தாள் ராங்கி பிடிச்ச ஆள் எண்டு உனக்குத் தெரியும் தானே? சனமெல்லாம் ஊரைவிட்டு ஓட இந்த ஊரில்தான் கிடந்து சாவனெண்டு அந்தாள் அப்பிடியே இருந்திட்டுது. பிள்ளையள் கெஞ்சிக்கேட்டும் அந்தாள் இறங்கேல்ல. அதுக்குப் பிறகு ஆருமே காணேல்லையாம்." இருக்குமட்டும் நான் அந்தாளுக்கு செய்யமுடிஞ்சதை செய்திட்டன் இன்னும் என்க்கு கடனிருக்கடாப்பா. கவலைப்பட்டார் அவர்.

தவமண்ணனைப் பொறுத்தவரைக்கும் கங்காணியார் தான் கடவுள் ஏனென்டா அவருக்கு நாய் கடிச்சுக் கிடக்கேக்க மருந்துகட்டி மாத்தினவர் அவர்தான். அன்பா, ஆதரவா ஊர்க்கதையெல்லாம் கதைச்சு, கதையை மாத்தி, புண்ணை ஒரு அமத்து அமத்தி, அவ்வளவு ஊனத்தையும் அரிகண்டமில்லாமல் துடைச்செடுத்து மருந்துகட்டி.. புண் மாறினாப்பிறகும் தவம் நடக்கேலாமல் தான் இருந்தவன். காலை மடக்கவோ நிமிர்த்தவோ முடியாமல் படுத்த படுக்கையாய் கிடக்கேக்க, கங்காணியார் ஒரு நாள் அவரைப் பார்க்க வந்தார். ஏனிப்பிடி படுத்த படுக்கையாய் கிடக்கிறாய்மோன, எழும்பிநட பாப்பம் எண்டு, அன்பாக் கதைச்சு காலை ஒருக்கா நீட்டு எண்டு கேட்டு அவன் காலை நீட்ட, அப்பிடியே அவனின்ர காலுக்கு மேல ஏறி இருந்திட்டார். அவன் கத்திக்கத்தி ஏலாமப் போனபிறகு, "நீ இனி நடப்பாய் எண்டுட்டு" போய்ட்டார். நான் கேட்டதற்கு "எல்லாத்துக்கும் மனந்தான்ரா, இதுகளுக்கெல்லாம் இது தான்ரா மருந்து. இதோட நடப்பான் என்றார்." அது மாதிரி அவன் எழும்பி விட்டான்.



அவன் மட்டுமில்லை, ஊரில கனபேர் கங்காணியாருக்கு கடமைப் பட்டவை. ஊரில எவரெண்டாலும் வருத்தமெண்டுபோய், அவர் அரளி விதையை அரைச்சுக் குடுத்தாலும் குடிப்பினம், ஒரு நம்பிக்கை அந்தாளிலை, அவரின்ர உத்தியோகம் கங்காணிதான். ஆனா ஊர்ப்பரியாரி, டாக்குத்தர், புசாரி எல்லாம் அவர்தான். காலில திருக்கை முள்ளடிச்சா ஆரும் ஆஸ்பத்திரிப் பக்கம் போகான். கங்காணியார காயத்தில ஒரு கரித்துண்டு வைக்க எந்தக் கடுப்பும் உடன நிக்கும். இல்லாட்டி ஒரு புளிக்கொட்டை பாதி போதும். வேப்பங்குச்சியில வெள்ளைபூசி உள்கண்டல் எடுத்துட்டு, அம்மிச் செழும்பு வச்சுக்கட்டினா, ஒரு ஆறு நாள் அவன் தண்ணியில நனைஞ்சாலும் ஒரு கண்டலும் வைக்காது. கடலுக்குப்போய் கடல் புளுப்பட்டு ஆசுப்பத்திரி எண்டு போகேலாது. டாக்குத்தர் கேள்வி கேட்டே துளைச்சுப் போடுவார். "அந்தப் புளுவைக் கொண்டுவர ஏலாதே" எண்டு கேட்பார். கண்டா எல்லோ அதைக கொண்டு வாறத்துக்கு.

முல்லை-யேசுதாசன்

அதுக்கெல்லாம் கங்காணியார் தான் டாக்குத்தர். கரைச்ச புளியும் பழைய கள்ளும் சேர்த்து "முழுக்களையும் குடி" என்பார். அவ்வளவு தான் அடுத்தநாள் அவன் தொழிலுக்குப் போவான். காச்சலெண்டு மாறாதவன் பேயெண்டு இவரட்டை வருவான். வேப்பிலை அடிச்சு திருநீறு போட்டு, கையில நாலைஞ்சு குளிசையும் குடுத்துவிடுவார். அது சுகம் வந்திடும். "பேய் கீய ஏதும் உண்மையா இருக்கோ?" எண்டு கேட்டால் நீதான்ரா பேய் என்பார் நான் வேதமண்ண திருநீறு போடமாட்டன் எண்டால் பாவிலுக் கிழவனட்டபோய் தண்ணி ஓதி எறிஞ்சிட்டுப் போ"வென்பார். ஆனா குளிசை தராம விடமாட்டார்.

யோசேப் அண்ணனுக்கு சின்னக் காச்சலெண்டாலும் செத்துப் போடுவோமோ எண்டு சரியான பயம். அவர்ர சின்னக்காலத்தில, அவர ஊரில ஒரு பெரிய ஆசுப்பத்திரி கிடையாது. சின்ன ஒப்பிரேசனெண்டாலும் யாழ்ப்பாணந்தான் போகோணும். ஏதேனும் வருத்தம கொஞ்சம் கடுமை எண்டாத்தான் ஆசுப்பத்திரிப் பக்கம் போவார். அவர் முந்தி காச்சலெண்டு போனாலும் நாலைஞ்சு போத்தல் கொண்டு போகோணும். இல்லாட்டி ஓடலி கத்துவான். வேண்டாம் எண்டாலும் விடான். அந்த கலக்கித்தாற மருந்தைக் குடிக்கிறதெண்டால்... காலில முள்ளுக்குத்தினாலும் கத்தி தான் வைப்பாங்கள். ஐஞ்சாறு நாள வாட்டு, அவசரம் எண்டு வீட்டகீட்ட போனா அடுத்தநாள் பொலிசு வரும். ஆர் டாக்குத்தரட்ட பேச்சு வேண்டுறது. அந்த நேரம் ஊரில ஒரு பெரிய மனுசனெண்டா டாக்குத்தர் தான். எந்தளவு மரியாதை அவருக்கு லோங்சும் சேட்டும் போட்டு டை கட்டி, காலில சப்பாத்து, கையில ஒரு வெள்ளைக் கோட்டு, காதில வச்சுப் பாக்கிறது, நடந்து வந்தா எவனும் ஒதுங்கித்தான் போவான். கடவுளுக்கு சமம். வாட்டுப் பாக்க டாக்குத்தர் வாறார் எண்டா நேசிமார் படுறபாடு, பயம் நோயாளியைப் பாக்கவாற எவனும் நிக்கவே ஏலாது, யோசேப் அண்ணனும் ஒருக்கா அவர்ர தகப்பனுக்கு சாப்பாடு குடுக்க நேரந்தப்பிப்போய், கங்காணி அடிச்சு கலைச்சுவிட்ட ஞாபகம் இன்னும் இருக்கு. அவருக்கும் தானும் டாக்குத்தரா வந்தா எவ்வளவு பேர பயப்படுவினம் எண்டொரு பெரிய கறபனை. அவர்ர அப்பரட்ட ஒருக்கா சொன்னார், அவர் பாரத்த ஒரு பார்வையிலையே அந்த ஆசையை கைவிட்டுடடார்.

பின்னுக்கு அவரின்ர ஊரிலயும கொஞசம பெடி பெட்டையள் படிச்சு டாக்குத்தராப் போட்டுதுகள் எண்டு , துள்ளிக் குதிச்சவர். ஆனா ஒருதரும இப்ப ஊரில இல்ல. அதில ஒரு பெடியன் சூசைநாதரெண்டு கழுத்துக்குமேல வைத்தியம் பாக்கிறதில உலகத்திலயே முதல் ஆளாம். லண்டனில இருக்கிறானாம், இன்னொரு பெடியன் இத்தாலியில, இந்தியாவில, கொழும்பில எண்டு எல்லாம் வெளியில தான். இவரின்ர பக்கத்து வீட்டுப் பெட்டையொண்டும் டாக்குத்தருக்குப் படிச்சவள். யோசேப் "அண்ண நான் மட்டும் டொக்டரா வந்தா இந்த ஊரில தான் வேலை செய்வன்'' எண்டு கனபேருக்கு முன்னால, வச்சு சொன்னவள். அவளும் இப்ப வன்னிக்கு வெளியிலதான். ஊர்ப்பிள்ளையள் டாக்குத்தருக்கு படிச்சிட்டாங்கள் எண்டு, அதுகளில எவ்வளவு மரியாதை வச்சிருந்தவர். ஊர் பெருமைப்பட ஒருதரும் இல்லையெண்ட கவலை தான் இப்ப அவருக்கு. "எப்பிடி இருந்தாலும் அவையள் இஞ்ச வரத்தானே வேணும்'' தன்னைத்தானே சமாளிப்பார்.

தன்ர பெடியளையும் டாக்குத்தருக்கு படிக்க வைக்க கோணும் என்டொரு எண்ணமிருந்தது அவருக்கு. ஆனா மூத்தவன் இதைவிட எனக்கு பெரிய கடமை இருக்கெண்டு ஒரு விசுப்பு விசுப்பிக்கொண்டு போட்டான். கவலைப்படேல்ல அவர். கடைசி இருக்குது கண்ணில காட்டேலாது



அவருக்கு "உங்களுக்க ஒண்டுப சொல்லி விளங்காதப்பா, உதைவிட பெரிய படிப்பெல்லாம் இருக்கப்பா," என்பான். இவர், மனிசியைத்தான் ஒரு பார்வை பார்ப்பார். அவ்வளவு தான். முந்தியெல்லாம் ஒரு செத்தவீடெண்டா, எவ்வளவு பெரிய விசயம், எவ்வளவு சனம் கூடியிருக்கும். ஒரு சின்ன ஒப்பிரேசன் எண்டாலும் ஒராளுக்கொராள் ஒத்தாசையா உதவி செய்து, ஊர் கவலைப்படும். இப்பெல்லாம் ஊரைவிட்டு ஓடினதும், சண்டை எண்டும், குண்டுவீச்செண்டும் எத்தின சனம் செத்து, காயப்பட்டு, அங்கவீனமாப்போய் எல்லாம் சின்னவிசயமாப் போச்சுது. கொஞ்ச டாக்குத்தர்மார் இருந்து என்ன செய்யிறது. அவங்களும் தங்களுக்கு ஏலுமானதைச் செய்யிறாங்கள். அவங்களும் இல்லாட்டி இன்னும் எவ்வளவு சனம் செத்திருக்கும்.

எத்தினையோ வருசத்துக்குப்பிறகு மூத்தவனை ஒருநாள் கடற்கரையில கண்டுட்டார். எங்கயடா நிற்கிறாய், உதில இருக்கிற வீட்டை ஒருக்கா வந்திட்டு போகலாந்தானே, கொம்மா நெடுக உன்னை நினைச்சு அழுகிறாவடா எண்டு சொல்ல, இப்ப கடற்புலியில தானப்பா நிக்கிறன். அம்மாட்டை சொல்லுங்கோ, லீவு கிடைக்கேக்க வாறனெண்டு. இப்ப எனக்கு கதைக்க நேரமில்லை எண்டுட்டு போட்டான்.

கனநாளைக்குப் பிறகு கால்துடையில வெடிபட்டு, மெடிசினில எண்டு கேள்விப்பட்டு, எல்லா மெடிசின்களுக்கும் அலைஞ்சு கடைசிவரையும் அவன் தட்டுப்படேல்லை. அவருக்குத் தெரிஞ்ச எந்த இயக்கப் பெடியனையும் அவர் விசாரிக்காமல் விடேல்ல. சின்னக் காயமெண்டு சில பெடியளும், உதுக்கெல்லாம் ஏன் கவலைப்படுறியள் எண்டு இன்னுமொருத்தனும் துடை எலும்பு முறிஞ்சிட்டா கால்கழட்டிப் போடுவாங்கள் இப்பெல்லாம டம்மி க்காலோடையும் சண்டைக்கெல்லாம் போறாங்கள் என்று மற்றவனும், கடைசியா அவருக்கு நல்லாத் தெரிஞ்ச பெடியன் ஒருத்தன் த்ான் உண்மையைச் சொன்னான். "நாங்கள் போன 'போட்'டில உங்கட மகனுக்கு மட்டும்தானப்பா காயம். ரெண்டு 'பிப்டி ரவுன்ஸ்' சரியாத் துடை எலும்பில அடிச்சுப்போட்டுது. அடியோட எலும்புத்துண்டு உடைஞ்சு பறந்துபோய் அவனுக்கு பக்கத்தில கிடந்திச்சுது. என்ன கால் கொஞ்சம் கட்டையாத்தான் வரும். சுகப்படுத்திப் போடுவாங்கள். உதெல்லாம் அவங்களுக்கு சிம்பிள் பிரச்சினை" எண்டுட்டு போய்ட்டான். அவர்ர மனம் ஒரு இடத்தில இல்லை. மனிசி கேட்டதுக்கு மழுப்பிப்போட்டு, தனக்குள்ள எல்லாத்தையும் போட்டு மறைச்சிட்டு, மற்றாக்களில எரிஞ்சு விழுந்து, அந்தோனியார் கோவிலுக்குப்போய் நேத்திவச்சு மெழுகுதிரி கொழுத்தி, பெடியனுக்கேதுமெண்டா உன்னக் கடலில கொண்டுபோய் போட்டுடுவன் எண்டுபேசி..........

நண்பன் தவமும் கங்காணியாரும் மனசுக்க வந்து போச்சினம். எங்கேயோ தூரத்தில இருந்து ஆமியடிச்ச ரவுண்ஸ் முழங்காலுக்கு கீழ் பின்சதையில

அந்த நேரம் ஊரில ஒரு பெரிய மனுசனெண்டா டாக்குத்தர் தான். எந்தளவு மரியாதை அவருக்கு லோங்சும் சேட்டும் போட்டு டை கட்டி, காலில சப்பாத்து, கையில ஒரு வெள்ளைக் கோட்டு, காதில வச்சுப் பாக்கிறது, நடந்து வந்தா எவனும் ஒதுங்கித்தான் போவான். கடவுளுக்கு சமம். வாட்டுப்பாக்க டாக்குத்தர் வாறார் எண்டா நேசிமார் படுறபாடு, பயம் நோயாளியைப் பாக்கவாற எவனும் நிக்கவே ஏலாது, யோசேப் அண்ணனும் ஒருக்கா அவர்ர தகப்பனுக்கு சாப்பாடு குடுக்க நேரந்தப்பிப்போய், கங்காணி அடிச்சு கலைச்சுவிட்ட ஞாபகம் இன்னும் இருக்கு. அவருக்கும் தானும் டாக்குத்தரா வந்தா எவ்வளவு பேர் பயப்படுவினம் எண்டொரு பெரிய கற்பனை. அவர்ர அப்பரட்ட ஒருக்கா சொன்னார், அவர் பார்த்த ஒரு பார்வையிலையே அந்த ஆசையை கைவிட்டுட்டார்.

பட்டதுக்கு செபஸ்தியானின்ர காலை மந்திகை ஆசுப்பத்திரியில கழட்டியெடுத்த ஞாபகம் வந்திச்சுது. சிலாவத்தைக் கடற்கரையில கிபிரடிச்சு சின்னப்பீஸ்பட்டு சிவனேந்திரம் தடியூண்டி நடக்கிறது ஞாபகம் வந்திச்சுது. எங்கேயோ எப்பவோ ஒரு பேப்பரில தொடை எலும்பு முறிவு சம்பந்தமாய் கட்டுரை படிச்சது நினைவுக்கு வந்தது. தொடை எலும்பு சதைப்பிடிப்பான இடம். எலும்பும் பெரிய நீளமான எலும்பு. எட்டுவயசுப் பிள்ளையெண்டா எலும்பு வளர வாய்ப்பிருக்குது. இல்லையெண்டா அதை வெட்டி விடுறது நல்லம். தொடை எலும்பு சிகிச்சை எண்டால், நாலு ஸ்பெசலிஸ்டுகள் தேவை. எலும்புக்கு ஒரு ஸ்பெசலிஸ்ட், நரம்புக்கு ஓராள், பிளாஸ்டிக் சர்ஜரி, மற்ற விடயங்கள் எண்டு நாலு பிரிவு இருக்கும். அதுவும் ஏதாவது அடிபட்டு முறிஞ்சால்தான் இவனுக்கு எலும்பில துண்டு இல்லை. வயது இருபத்தி இரண்டுக்கு மேல, யோசிச்சு யோசிச்சு தலையெல்லாம் கிறுகிறுத்துப்போச்சு அவருக்கு. அந்தப் பெரிய டாக்குத்தர்மாரே செய்யேலாத வேலையை, A/Lலும் O/Lலும் படிச்சிட்டு இயக்கத்துக்கு போன பெடியள் எப்பிடி செய்வாங்கள். திரும்பவும் ஒருக்கா அந்தோனியாரைக் கூப்பிட்டார். கங்காணியார் இருந்தாலும் ஆறுதலாயிருக்கும். கடல் சண்டையெண்டா ஏதாவது கவர் இருக்கே, வெட்ட வெளியில நிண்டு பிடிக்கிற சண்டை. எத்தினை பெடியள் இந்த விடுதலைக்கெண்டு உயிரையே விட்டுட்டுதுகள். கால் தானே கவலைக்கெல்லாம் ஒரு முடிவெடுத்திட்டார் யோசேப் அண்ண.

அண்டைக்கொரு காலமை பெடியன் ஒருத்தன் கடிதம் குடுத்துட்டுப் போனான். மூத்தவன் தான் எழுதியிருந்தான். என்னைப் பாக்கோணும் எண்டு ஏன் அலையிறியள். வருவன் எண்டு அம்மாட்டைச் சொல்லுங்கோ. காணுற பெடியளையெல்லாம் மறிச்சு கேள்வியள் கேக்கிறியளாம்........... ஏறிவிட்டுது யோசேப் அண்ணனுக்கு. நான் வருவன் எண்டா? என்னண்டாம் வருவார். நான் என்னவோ கவலைப்பட உவனுக்கு கொழுப்பெல்லே. திரும்பவும் மனுசியோட ஒரு ஏத்தம்.

வீட்டு வாசலில மோட்டார் சயிக்கிள் வந்து நிக்குது எண்டு எட்டிப்பாத்தா மூத்தவன்தான். அவனோட இன்னுமொரு மெல்லிய கறுவல், தோளில துவக்கு, கோல்சரோட மகனும் இயக்கத்தில பெரிய ஆள்போல, மனசுக்குள்ள நினைச்சுக்கொண்டார் யோசேப் அண்ண. ஆனாலும் வாசலுக்க போய் வரச்சொல்லி கூப்பிடேல்ல. மூத்தவன் தாண்டித்தாண்டித்தான் நடந்து வந்தான். டம்மிக் காலோ எண்டு உன்னிப்பாய் குதிக்காலைப் பார்த்தார். இல்லை, அப்ப சுகப்படுத்திப் போட்டாங்கள். அப்பிடியெண்டால் இயக்கத்திலயும் பெரிய பெரிய ஸ்பெசலிஸ்டுகள் இருக்கிறாங்கள். என்னப்பா யோசிச்சுக்கொண்டு நிக்கிறியள். மனிசி கேட்ட பிறகுதான் நிசத்துக்கு வந்தார்.

அண்டைக்கு வீடு அமளிதுமளி தான். ரவுண் கடைக்கு போட்டுவந்த யோசேப் அண்ணர் நாலு சின்னப்பாசலோட வந்தார். "என்னப்பா இது" என்று பெடியன் கேட்டதுக்கு "மணிக்கூடு" என்றார். எனக்கேன் நாலு மணிக்கூடு. "உனக்கில்லையடா அது, தொடையில ஒரு ஒப்பிரேசனெண்டா அதை சரிப்படுத்துறதுக்கு கட்டாயம் நாலு ஸ்பெசலிஸ்டுகள் இருப்பாங்கள், அது தான் நாலு மணிக்கூடு" பெடியள் இருவருக்கும் சிரிப்பு வந்துட்டுது. "அப்பா அப்பிடியெண்டா நாலு மணிக்கூட்டையும் இவனுக்கே குடுங்கோ. அந்த நாலு ஸ்பெசலிஸ்ட்டும் இவன்தான்." என்றான் மூத்தவன், அவருக்கு சிரிப்புத்தான் வந்தது. தோளில துவக்கு, கோல்சர், பச்சை உடுப்பு, காலில ஒரு செருப்பு. "இவரோ டாக்குத்தர்." பேந்தும் சிரித்தார். நம்பவே இல்லை அவர். வெள்ளைக் கோட்டு, டை, சப்பாத்து, தெதஸ்க்கோப்புடன் அவருடைய மரியாதைக்குரிய டாக்குத்தர் கண்ணுக்கு வந்து போனார். ஒருமுறை "அப்பா தோளில துவக்கும் மருந்துப்பையும் கட்டி, சண்டை நடக்கிற இடத்தில சண்டைபிடிச்சு, மருந்து கட்டுற இடத்தில மருந்துகட்டி, ஒப்பிரேசன் தியேட்டரில ஒப்பிரேசன் செய்து, நாங்கள் சம்பளத்து டொக்டர் இல்லையப்பா, விடுதலைக்காய் வேலை செய்யிற டொக்டர்மார் நாங்கள்." அந்த மெல்லியவன் மெதுவாய்ச் சிரித்தான். அவன் பேசப்பேச அவருடைய மரியாதைக்குரிய டாக்குத்தர் மெல்லமெல்ல அவர் மனசைவிட்டு மறைந்துபோக இந்தப் புதிய, மெல்லிய, கருப்பான, துவக்கோட, செருப்போட, வெள்ளைக்கோட் இல்லாத, இந்த டாக்குத்தர் அவர் மனதில் புதிதாகப் பதியத் தொடங்கினார். இப்ப அவரின்ர ஊரில நிறையக் கங்காணிகள் இருக்கிறார்கள். ❑

## •மாத்திரைக் கதை•

## நிறைவு

நகைக்கடைக் கண்ணாடிப்பொட்டியில் கண்ணைப்பறித்த இரத்தினக்கல்லைப்பார்த்து தெருவில் கிடந்த குறுணிக்கல் பொறாமைப்பட்டது.

'எனக்கு ஏன் மதிப்பில்லை? நானும் ஒரு கல்தானே.........'

தெருவோரத்தில் கிடந்த கடற்பாரை கூறியது :-

'ஏ குறுணி! காலம் முழுவதும் உன்னை நீயே பெரிதாக எண்ணிக்கொண்டு பலரும் பார்க்க தெருவில் கிடக்கின்றாய். ஆனால் இரத்தினக்கல் அப்படியா? நிறைந்து வளர்ந்து இரத்தினமாகும் வரை வெளியில் தலைகாட்டியதே இல்லை. எங்கோ மண்ணின் மறைவில் அது தன்னைத்தானே உருவாக்கிக்கொண்டிருந்தது.'

'அப்படியென்றால்....?' என்று இழுத்தது குறுணிக்கல்.

கடற்பாரை சொன்னது: -

'நிறைவாகும் வரை
மறைவாக இரு'.

-காசி ஆனந்தன்-




போகட்டும் விட்டுவிடு
என்று யாரும் சொல்லலாம்.
பிள்ளையை இழந்தவனின்
துயரத்தீயை
அவளது தீராத தாகத்தை
களத்திலே வீழ்ந்தவனின்
ஒளிரும் கனவுகளை
அவன் வாழத்துடித்த மீதி
வாழ்க்கையை
அவனைப் பிரிந்த சோதரரின்
பெருந்துயரத்தை
துயர் வளையங்களுள் சுழலும்
அவர்களது மங்காத நினைவுகளை
எல்லாவற்றையும்

போகட்டும் விட்டுவிடு என்று
எப்படி இருப்பது?
ஊரெல்லாம் இன்னும் பரவியிருக்கு
நோயும் பிணியும்
பசியும் பட்டினியும்
பிரிவும் இழப்பும்
குருதியும் கண்ணீரும்
துயரமும் வேதனையும்
எல்லாம் யாரையாவது
ஆட்டிப்படைக்கட்டும்
என்றெப்படி இருப்பது?
நாம் போராடுகிறோம்
மரணத்தை மோதி மோதி
நொருக்கியபடி


அச்சத்தை தீயிட்டு எரித்தபடி
தடைகளை, நொறுக்கி எறிந்தபடி
புதிய வாழ்க்கையின் பிறப்புக்காக
நாம் போராடுகிறோம்.
அமைதிக்காக, சமாதானத்துக்காக
நீதிக்காகவும்,
அன்புக்காகவும்
நாம் போராடுகிறோம்.
அடிமைச் சீவியம்
அகதி வாழ்க்கை
மரண முற்றம்
துயர ஞாபகங்கள்
எதுவும் வேண்டாம்

என்றபோதும்
சுழல் வளையங்கள் எதுவும்
நீங்கவில்லை.
சிலர் இருக்கிறார்கள்
சிலர் போய்விட்டார்கள்
சிலர் போகத்துடிக்கிறார்கள்.
எல்லாவற்றிலும்
யாருக்குப் பங்கு
யாருக்கு இல்லை
யாருக்குப் பொறுப்பு
யாருக்கு நிராகரிப்பு
யாருக்கு வாழ்க்கை
யாருக்கு மரணம்
யாருக்கு இழப்பு
யாருக்கு அமைதி?

போகட்டும் விட்டுவிடு' என்று
யாரால் இருக்கமுடியும்
இப்போதும், இனியும்?

-கருணாகரன்-

# புரட்சியின் குழந்தை



வாருங்கள்
அவர்களின் மீது கற்களை
எறிவோம்.
ஒரு பலஸ்தீனக் குழந்தையின்
புரட்சி முகத்தை பயங்கர
வாதம் என்கின்றார்கள் ! –
என்றும்
இரும்பு விலங்குகள்
வலிமையானவையென்று
அவனுக்குத் தெரியும் –
எனினும்
கற்களையேனவன் கையில்
எடுத்தான்?
துயரம் வந்து – அவன்
தொண்டையை அடைத்த
போது.
தாயை எதிரிகள் இழுத்துப்
போயினர்
தந்தையின் உயிரை
அவர்கள் பறிக்கையில்
புதரின் மறைவில்
திகைத்தபடியிருந்தான் –
அப்போதவன்
கண்களில் கண்ணீரைவிடவும்
பயமே அதிகமாய் உருகி
வழிந்தது – உனது இழப்பின்
துயரம்
''மலைகளுக்கும் கூன்
விழவைக்கும் துயரம்''
எனது ஈழத்தெருக்களில்
சாவு வந்தபோது –
குண்டுகளால் தேவாலயங்கள்
சரிந்த போது, சல்லடையிடப்பட்ட பிணங்கள்
கடலில் மிதந்த போது –
தெருக்களில் வைத்து
இழுத்துச் சென்ற போது –
யுத்தம் ஊர்களுக்குள் வந்த
போது, பிணவாடையும், இரத்த
நெடியுமாக எமது வாழ்வு
கழிந்த போது – எம்
குழந்தைகளின் அழுகை
வானைக்குடைந்தது........

சிறைச் சுவர்களும் நடுங்க
கொடுக்கிகளால் நகங்கள்
பிடுங்கிய போது
பெற்றோல் நிரப்பிய
பெலித்தீன் பைகளுக்குள் –
எம்
மூச்சு முட்டியபோது,
தலைகீழாய் தொங்கிய
உடலில் – உயிரசைய
மின்சாரம் பாய்ச்சிய போது
விழி குத்திய அதேபுள்ளியில்
மரணங்கள் வந்த போது –
நாங்கள்
அடைந்த துயரம் போல........
உனது துயரம் – ஓ
உனது வாழ்வு மலையைச்
சரித்து
அதனின்று ஒரு கல்லை
நீ எடுத்தாய்........
துப்பாக்கி கிடைக்காத போது
கற்களை எடுக்கலாம் – என
அறிவுறுத்திய குழந்தையே –
உனது
பலஸ்தீன மண்ணில் வைத்து
– நீ
சுடப்பட்டாய்.......
புரட்சி பூக்கின்ற போது
இரும்புக்கரங்களால் –
சூரியனை
மறைக்க அவர்கள்
நினைத்தனர் – ஆதலால்
உன்னை அவர்கள் – உனது
மண்ணில் வைத்தே சுட்டுக்
கொன்றனர்
ஈழமண்ணில் நாங்கள்
சுடப்படுவது போல
உன்னை அவர்கள் சுட்டுக்
கொன்றனர் – எனினும்
உனது கனவை – ஒரு போதும்
சாவு எடுத்துச் செல்லாது
மரணத்தின் போது உனது
கடைசிப்புன்னகையில்
அவர்கள் தோற்றனர் – நீ
புரட்சி பூத்த மண்ணின்
குறியீடாய்
நிலவுக் கடுத் தாற் போல
தெரியும்
புரட்சின் குழந்தை
மண்ணின் குழந்தை

-முல்லைக் கமல்-

# மகாவம்சம்: முரண்பாடுகளாலான வடிவமைப்பு

சிறிலங்காவின் சிங்களவா வரலாற்றைச் சொல்வதாக கூறப்படும் இரண்டு புராதன நூல்களாக மகாவம்சம், தீபவம்சம் ஆகிய இரு நூல்களும் இருக்கின்றன. இவற்றுள் மகாவம்சம் என்ற நூலை வில்ஹெம் கெய்கா (Wilhelm Geiger) என்பவா ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந்த மொழி பெயர்ப்பு நூல் 1912ம் ஆண்டில் முதல் முதல் வெளியிடப்பட்டது. இவரது மொழிபெயர்ப்பே சிங்கள பேரினவாத சக்திகளால் பெரிதும் கைக் கொள்ளப்படுகின்றது.

தீபவம்சம், மகாவம்சம் இரண்டுக்குமே அவற்றை விடப் புராதன மூலங்கள் இருப்பதால், அவற்றை வரலாற்று ஆவணங்களாகக் கொள்ளலாம் என்று கெய்கா இந்த நூலிலே கூறியிருக்கிறார். மகாவம்சத்தினுடைய குறைபாடுகள் வெளிவடிவத்தில் தான் இருக்கின்றனவேயொழிய உள்ளடக்கத்தில் இல்லையென்றும் அவா கூறுகிறார்.

மகாவம்சம் புராதன ஆதாரங்களை கொண்டிருப்பதற்கு ஆதாரமாக கெய்கா கூறியிருக்கும் மகாவம்ச-ரிக்கவின் ஆசிரியா யாா என்பதை கெய்கரால் கூறமுடியவில்லை. ஆரம்பத்தில் மஹிந்த தேரா இலங்கை வந்த காலம் வரை இருந்த மகாவம்சம் பின்னா மகாசேனன் காலம் வரை (4ம் நூற்றாண்டு ஆரம்பம்) விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக கெய்கரே கூறுகிறார்.

தீபவம்சம் பாளிமொழியிலான செய்யுள்களின் கரடு முரடான வடிவமாகும். அதற்குக் கொடுக்கப்பட்ட புதிய வடிவம்தான் மகாவம்சம். இதனை மகாநாம என்பவா எழுதியதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் மகாவம்சம் என்பது பௌத்த திருமுறையினா சார்ந்த வரலாற்றுக்கு முக்கியமானதாக இருந்தாலும் தேவநம்பிய தீசனுக்குப் பிறபட்ட காலத்து பகுதிகளையே ஓரளவுக்காவது நம்பகத் தன்மையுடன் பயன்படுத்த முடியும் என்று, இந்திய பௌத்தத்தின் கைநூல் (Manual & Indian Budhism) இன் ஆசிரியா கோ்ண் (Kern) என்பவா கூறியிருக்கிறார்.

கி.மு 160ம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதிகளுக்கென மகாவம்சத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற வரலாறுகள் சந்தேகத்துக்கிடமான ஆதாரங்



களைக் கொண்டிருப்பதாலும் அதனால் முன்வைக்கப்படும் கருத்துகள் பொய்யானவையாக இருப்பதாலும் அவை முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அசோகா (Asoka) என்ற நூலில் வீ.ஏ.ஸ்மித் (V.A.Smith) குறிப்பிட்டுள்ளார். அநேகமான ஆய்வாளர்கள் இவற்றில் உள்ள அற்புதங்கள் மாயாஜாலங்களை நீக்கி விட்டு எஞ்சியவற்றை உண்மையான வரலாறாக ஏற்றுள்ளார்கள். இவ்வாறு கட்டுக் கதைகளைப் பொருள் கொள்வதென்பது வரலாற்று ரீதியாக விமா்சிப்பதன் அடிப்படைக் கோட்பாடுகளோடு ஒத்துப் போவதாக இல்லை என்றும் அவா மேலும் கூறியுள்ளார்.

ஆனால் மகாவம்சத்தை மொழிபெயா்த்த கெய்கரோ அதனை எழுதியவாகள் ஆகக் குறைந்தது, "உண்மையைச் சொல்ல விரும்பினார்கள்" என்பதாலேயே இவற்றைச் சரியானவை என்று ஏற்றுக் கொள்ளலாம் என்று சப்பைக் கட்டுக் கட்டுகிறார்.

அடுத்ததாக அசோகனின் கல்வெட்டுகள் வருகின்றன. அசோகனின் கல்வெட்டுகளிலே மகிந்தனுடன் வந்ததாக சொல்லப்படும் அசோகனின் மகளாகிய சங்கமித்தவின் பெயா காணப்படாததனால் அந்தப் பெயரே சந்தேகத்துக்குரியது என்று வீ.ஏ.ஸ்மித கூறுகிறார்.

இலங்கைக்கு புத்த மதத்தைக் கொண்டு வந்த மகிந்தனை சீன யாத்திரிகா்கள் அசோகனின் நெருங்கிய உறவினா் என்று கூறும் அதே வேளை இலங்கை வரலாறுகள் அவனை அசோகனின் மகன் என்று கூறுகின்றன. இலங்கை வரலாறுகளை வலுப்படுத்தமுனையும் கெய்கரோ சீன யாத்திரிகா்களின் தகவலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது நியமங்களுக்குள் அமையாது என்கிறார்.

விஜயன் தொடக்கம் தேவநம்பியதீசன் வரையான காலப்பகுதி குறித்து அவநம்பிக்கைகள் எழுவதற்கு, விஜயன் புத்தா இறந்த அன்று இலங்கை வந்தான் என்று மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதும் காரணமாகிறது. அத்தோடு பந்துகாபயனின் பின் அரசுக்கட்டிலேறிய மூத்த சிவா என்பவன் வாலிபம் கடந்து விட்ட காலத்திலேயே பதவி ஏற்றிருக்க வேண்டும். எனினும் அவனது ஆட்சிக் காலமாக 60 வருடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயன் தொடக்கம் மகாசேனன் வரை ஆண்ட 61 அரசாகளில் பந்துகாபயன் தவிர்ந்த வேறு எவருமே 40 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்ததாக குறிப்பிடப்படவில்லை. புத்தரும் விஜயனும் சமகாலத்தில் வாழ்ந்ததாகக் காட்டுவதற்காகவே, இவனது ஆட்சிக் காலம் நீடித்துக் காட்டப்பட்டிருக்கலாம் என்று கெய்கா் கூறுகிறார். மூத்த சிவாவுக்கு, முதல் ஆட்சி செய்த பந்துகாபயவின் ஆட்சிக் காலம் 70 வருடங்களாக காட்டப்பட்டிருப்பதும் இதற்காகவே என்று கருத இடமிருக்கிறது.

தேவநம்பிய தீசனுக்கும் துட்டகைமுனுவுக்குமிடையேயான காலப்பகுதியில் ஆட்சி புரிந்தவா்கள் (எல்லாளன் உட்பட ஏழு மன்னா்கள்) வரலாறுகள் புனைவுகள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன என்பதையும், தேவநம்பியதீசனுக்கு பின்வந்த காலப்பகுதிகளிலும் பல இடங்களில் இவ்வாறே கற்பனைகள் மூலம் நிரப்பப்பட்டுள்ளன என்பதையும் கெய்கா ஒப்புக் கொள்கிறார். புத்தா் பரிநிர்வாணமடைந்ததாகச் சொல்லப்படும் கி.மு 544 என்பதன் கணிப்பிலே 60 வருட வழு இருப்பதாகவும் கெய்கா கூறுகிறார்.

தீபவம்சம் மகாவம்சம் ஆகிய இரண்டுக்கும் அவற்றை விட புராதனமான மூலங்கள் இருப்பதை ஆா.ஓ.பிராங்கே (R.O. Franke) என்பவா வன்மையாக மறுத்துள்ளார். மகாவம்சத்தின் உள்ளடக்கங்கள் கற்பனையானவை என்று இவா் வலியுறுத்தியிருக்கிறார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால் மகாவம்சத்துக்கு, ஆதாரம் காட்டவேண்டிய தேவை இருக்கிறது. ஆதாரத்துக்காக காட்டப்படும் நூல்களின் பெயா்களையோ அவற்றை ஆக்கியோா்களையோ கெய்கா போன்றோரால்

**-வி.அருளாளன்-**

எடுத்துக் கூறமுடியவில்லை மகாவம்சத்திலே மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, கற்பனைகளால் வரலாறுகள் நிரப்பப்பட்டிருக்கின்றன. அரசா்களின் ஆட்சிக் காலங்கள் நீட்டப்பட்டிருக்கின்றன. தவறான தகவல்கள் புகுத்தப்பட்டிருனக்கின்றன. அற்புதங்கள், மாயாஜாலங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கு மேற்பட்ட ஆய்வாளா்கள் மகாவம்சம் கற்பனையானது என்று நிராகரித்து விட்டிருக்கிறார்கள். கெய்கா போன்றோா அதனைத் தூக்கி நிமிா்த்த படாதபாடு பட்டிருக்கிறார்கள். இவ்வாறான மகாவம்சத்தை வைத்துக் கொண்டு தான் சிங்களப் பேரினவாதம் இலங்கைக்கு உரிமை கொண்டாடுகிறது. தூய ஆரிய இனமாக தன்னைப் பிரகடனப்படுத்துகிறது. சிங்களப் பேரினவாதத்தின் மூத்த கதாநாயகனான விஜயன் மணந்த பெண் மதுரையை ஆண்ட பந்து மன்னனுடைய மகளான திராவிடப்பெண். விஜயனின் நண்பாகள் மணந்ததும் திராவிடப் பெண்களே. இங்கு ஆட்சி கொண்டிருந்த இயக்காகளை (யக்காக்கள் என்று மகாவம்சத்தில் இவா்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது) (யக்கா-பேய்) அழித்து அவா்களைப் பசாசுகளாகச் சித்தரித்து விட்டு இலங்கை மீது உரிமை கொண்டாடுகிறாா்கள் ஆரிய சிங்களவா என்று சொல்லிக் கொள்வோர். பாவம் அவா்கள், விஜயன் ராணியாக மணந்த திராவிடப் பெண்மூலம் அவனுக்கு வாரிசுகள் இருக்கவில்லை. இருந்திருந்தாலும் அவா்கள் திராவிடக்கலப்புள்ளவா்களாகவே இருந்திருப்பார்கள். விஜயன் இறந்து 1 வருடகாலத்துள் இலங்கையில் அரசாகள் எவரும் இருக்கவில்லை.

விஜயனின் சகோதரனான சுமித்தவுக்கு மதுரை அரசனின் மகளான திராவிடப் பெண் மூலம் பிறந்த மூன்று பிள்ளைகளில் இளையவனான பந்துவாசுதேவ விஜயனின் பின் இலங்கை அரசனானான். இவனது வாரிசுகளே இலங்கையை ஆண்டனா. இந்த விபரங்கள் மகாவம்சத்தின் 6,7,8ம் அத்தியாயங்களில் ஐயத்துக்கிடமின்றிச் சொல்லப்படுகின்றன.

அந்த வகையிலே உதயபிரசாந்த மத்தேகம என்ற சிங்களவா, 1988ம் ஆண்டில் எழுதிய கவிதையில் கூறியிருப்பது போல,

"…..எமது வரலாற்றைப்
பொய்கள் மிகைப்படுத்தல்களின்றி
தூயதாக்க……
அறிவியல் ரீதியாக அதனை
எழுத…….
வேளை வந்திருக்கிறது."

**உசாத்துணை**


1) The Mahavamsa or the great chronicle of Ceylon- By. Nilhem Geiger
2) Manual of Indian Budhism, By. Kern.
3) Asoka By V.A.Smith


## மதவடி மயிலர்

செய்தி:- ஜே.வி.பி. உள்ளிட்ட இனவாதக் கட்சிகளின் பிரேரணையை எதிர்கொள்ளத் தயார். தொண்டமான், சந்திரசேகரன் அறிவிப்பு.

மயிலா்:- ஆட்காட்டி முட்டை எடுக்க எவனோ பதுங்குகிறான். அவன்ர காலில செருப்பை எடுக்க இவன் பதுங்குகிறானெண்டிருக்கக் கூடாது. பாருங்கோ இனவாதத்தை எதிர்க்கிற கொள்கைவாதத்திலே பிடிவாதமாக இருக்கவேணும் என நினைக்கிறதிலே கவனமா இருக்கவேணும்.

செய்தி:- தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துக. சந்திரிகாவிடம் உலகத்தமிழர் கோரிக்கை.

மயிலா்:- திரியிலை கை வைச்சால் விளக்கு அனைஞ்சிடும் எண்டெண்ணுகிறது சரிதான் பாருங்கோ, கையிலே சுடும் கவனமாய் நடவுங்கோ.

செய்தி:- நாட்டைப் பாதுகாப்பதற்கு அனைவரும் அணிதிரள வேண்டும். ஜே.வி.பி. கண்டனக்கூட்டத்தில் அனுரா.


மயிலர்:--ஆசை வெட்கமறியாதென்னுறது உண்மைதான் பாருங்கோ. கதிரை ஆசைக்காக கட்சி தாவிக் களைச்ச மனிதன்ர உரை. பழைய நரிக்குப் புதிய சிங்கத்தைக் காணப் பிதற்ரவதுபோல கிடக்கு.

செய்தி:- பலாலி விமான தளத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி.

மயிலா்:- மாட்டுக்கு நாணயம் குத்தக் காணேலை கொம்புக்கு கூர் சீவி விட்ட கதை பாருங்கோ உது.

செய்தி:- இலங்கையின் சமாதான முயற்சிகள் விரைவில் வெற்றியடைய வேண்டும். ஐ.நா. செயலாளர் கோபி அனான்

மயிலா்:- முயற்கொம்புக்கு மூச்சிழைக்க ஓடினதா இருக்கக் கூடாதெண்டுதான் எல்லாரும் விரும்பினம் பாருங்கோ. கண்ணில்லாதவனைக் கரை சேர்க்கலாம் காலில்லாதவனை கரை சேர்க்கேலாதுதான் பாருங்கோ உம்மை. இது எப்ப தெரியவருமோ தெரியாது.




உங்களுக்கு
எங்களைத் தெரியும்
அறிமுகம் தேவையில்லை

த-குமாரசாமி
ரெக்ஸ்ரைல்ஸ்



கிளை நிறுவனம்
த.குமாரசாமி அன் சன்ஸ்
248/1. காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

42,44 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
☎ - 2985



## சினிமா படமாக்கப்பட்ட நாடகமல்ல படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல. வாய்ப்பேச்சால் சொல்ல முடியாதது. அப்படி யானால் சினிமா என்பது என்ன?


# எது நல்ல சினிமா?

எது நல்ல சினிமா? நல்ல சினிமாவுக்குச் சில அடிப்படை அளவு கோல்கள் உண்டு. இவற்றைத்தெரிந்து கொண்டால் தான் தரமான படங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். இலக்கியத்தைப் போலவே நமது சினிமா அனுபவம் ஆழமாவதற்கு நல்ல சினிமா என்றால் என்ன என்பதை வரையறுப்பதற்கு முன், எது சினிமா என்ற அடிப்படைக் கேள்வி எழுகிறது. திரைப்படப் பண்பாட்டில் இக்கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. நினைவில் கொள்ளுங்கள். திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல அச்சில் வருவதெல்லாம் இலக்கியம் ஆகாதது போலவே.

எது நல்ல சினிமா அல்ல?
சினிமா திரைப்படமாக்கப்பட்ட நாடகமல்ல. இது ஒரு அடிப்படையான வித்தியாசம், நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன்னே நிகழ்த்திக் கொண்டிருப்பது நாடகம். சினிமாவின் தன்மையே வேறு. தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு ஒரு முக்கிய காரணம், அது நாடகத்திற்கு அடிமைப்பட்டு இருப்பதுதான். இதற்கு வரலாற்று ரீதியான காரணங்களும் உண்டு. பேசும் படத்தின் ஆரம்பக் கட்டத்தைப் பார்ப்போம்.

அன்று (1930களில்) பிரபலமாயிருந்த புராண நாடகங்களே படமாக்கப்பட்டன. நாடகமேடை மாதிரியே செட் போடப்பட்டு, கமராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு, நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது. சென்னையிலிருந்த நாடகக் கொம்பனிகள், கூட்டம் கூட்டமாகக் கல்கத்தாவுக்கும், பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகங்களைப் படமாக்கிக் கொண்டன. அண்மைக் காலம் வரை இயக்குநர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத் துறையிலிருந்து வந்தவர்கள். நாடகத்தின் இந்த உடும்புப்பிடியிலிருக்கும் வரை ஆரோக்கியமான சினிமா மலர வழியில்லாமற் போயிற்று.

நமது இன்றைய படங்களிலும் கூட நாடகத்தனம் மிகுந்திருப்பதைக் காணலாம். கதாபாத்திரங்கள் சதுரமான திரையின் விளிம்பிலிருந்து வருவார்கள்,



மேடைக்குள் நுழைவதைப் போல, வசனத்தைப் பேசி விட்டு பக்கவாட்டில் சென்று மறைவார்கள். குரலை ஏற்றி இறக்கி பேசாமல் கத்திப் பேசுவார்கள் நாடக அரங்கின் கடைசி வகுப்பில் உட்காந்திருப்பவனுக்கும் கேட்க வேண்டுமே பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்கள் கமராவைப் பார்த்து (பார்க்க வந்திருக்கும் ரசிகர்களைப் பார்த்துப்) பேசுவார்கள் பேசிக் கொண்டே இருப்பார்கள்.... பேச்சு பேச்சு. படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்துக் கொண்டிருக்கும். நாடகத்தில் மேடையின் கீழ மர்ந்திருக்கும் இசைக்குழுவின் இசையைப் போல நாடகத்தனம் சினிமாவின் தன்மையை சீர் குலைக்கிறது.

சினிமா, கமராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல. எந்த ஒரு படத்திலும் ஊடே இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக்காட்சிப் படிமத்திற்கும், ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படி சம்பந்தமில்லாத காட்சி வந்தால், அது சினிமாவாக இல்லாமல் சலனப்படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியாகிறது. சினிமா, வாய்ப்பேச்சால், வார்த்தைகளால் சொல்லப்படுவதில்லை. அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருந்திருக்காது. டேப்பிலோ, றேடியோ விலோ கேட்டு திருப்தியடைய முடியும்.

சினிமா படமாக்கப்பட்ட நாடகமல்ல படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல வாய்ப்பேச்சால் சொல்ல முடியாது. அப்படியானால் சினிமா என்பது என்ன?

ஒவ்வொரு கலைக்கும் அதற்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன. ஒரு படைப்பாளி, இந்தப் பண்புகளைச் சரிவரப் பயன் படுத்தும் போது, அந்தக் குறிப்பிட்ட ஓவியம் மலர்கிறது. ஓவியத்தைப் பாருங்கள் அது கோடுகளாலும், படிமங்களாலும், வண்ணங்களாலும் ஆனது. 'மரம்' என்று ஒரு பலகையில் எழுதி, இது ஒரு ஓவியம் என்று உங்களை நான் ஏமாற்ற முடியாது. ஓவியத்தின் தனித்துவப் பண்புகள் அங்கில்லை. அதே போல் இசைதொனியாலும் லயத்தாலும் ஆனது. நடனம் உடல் அசைவை அடிப்படையாகக் கொண்டது. சினிமாவின் சிறப்பு அம்சம், அதற்குத் தனித்துவத்தை அளிக்கும் அம்சம் சினிமா மொழி எனலாம்.

சினிமா மொழி
சினிமா மொழி என்றால் என்ன? இதில் மூன்று அம்சங்கள் உள்ளன. முதலாவது அது காட்சிப் படிமங்களால் ஆனது. பாலு மகேந்திராவின் அழியாத கோலங்களில் ஒரு காட்சித் தொடர்: வாய்க்கால் ஒன்றில் சிறுவர்கள் நீந்தி விளை யாடுவது, அதிலொருவன் மூழ்கி இறப்பது, கிராமத்து மக்களின் வருத்தம், அதிர்ச்சி, சிறுவனின் ஈமக்கிரியைகள் எல்லாமே அழுத்தமான, அழகான, வரிசையான காட்சிப் படிமங் களால் வெளிப்படுத்தப்படுகின்றன. சினிமா அங்கே மலர்கிறது.

இரண்டாவது அம்சம் ஒலி. இந்தக் காட்சிப் படிமங்களுக்குத் தாங்கலாக வருவது. சினிமாவில் ஒலி பல விதப்படும். பேசும் வார்த்தைகள், இயல்பான சப்தங்கள் (ரயில் ஓடுவது, பறவைகளின் இரைச்சல், ஓடும் நதியின் சலசலப்பு) கடைசியா இசை. (இசை)யே இல்லாத படங்களும் உண்டு. எங்கே ஒலி முக்கியத்துவம் பெற்று காட்சி படிமங்கள் இரண்டாவது கட்டத்திற்கு தள்ளப்படுகின்றதோ அங்கே சினிமா சீரழிந்து தாழ்ந்து போகிறது. ஒலி காட்சிப் படிமத்திற்கு துணை போவதற்கு ஒரு எடுத்துக்காட்டு: பாரதிராஜாவின் 'கல்லுக்குள் ஈரம்' படத்தில் சலவைத் தொழிலாளி ஒருவன் குடித்து விட்டு ஆடும் போது பின்னணியில் அந்த தொழிலாளியின் குலத்தை குறிப்பிட்டு வரும் கிராமியப் பாடலின் இசை.

சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் கோர்வை (Editing) தனித் தனியாகத் தயாரிக்கப் பட்ட காட்சிப் படிமங்களும், ஒலிப்பதிவுகளும், ஒரு அர்த்த முள்ள கோர்வையாக அமைக்கப் படுவது. இதை சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக் கோர்வை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும்.
ஒரு உதாரணம்: வருத்தம் தோய்ந்த ஒரு மனிதனின் முகம், ஒரு தட்டில் கோழி வறுவல், புன்சிரிப்புடன் அந்த மனிதனின் முகம் என்ற மூன்று காட்சிப் படிமங்கள். இந்த மூன்று காட்சிப் படிமங்களும், இதே வரிசையில் இணைக்கப்பட்டால் நாம் காண்பது: பசியுடனிருக்கும் ஒரு மனிதன் கோழிரோஸ்ட் கிடைப்பதில் மகிழ்ச்சியடைகின்றான். வேறு வரிசைக்கிரமத்தில் இணையுங்கள் மகிழ்ச்சியான முகம், தட்டில் கோழி, வருத்தமான முகம். இப்போது நாம் காண்பது உணவை எதிர்பார்த்திருந்த ஒருவனுக்கு கோழி வந்ததில் ஏமாற்றம். சைவமோ என்னவோ காட்சிப் படிமங்களை இணைக்கும் வரிசைக்கிரமத்தைப் பொறுத்து அர்த்தம் மாறுகிறது.

காட்சிப் படிமங்களை இணைப்பதற்குப் பலமுறைகள் உண்டு. ஒவ்வொன்றிற்கும் தனியான ஒரு அர்த்தம் உண்டு. கண்ணிமைப்பது போல் காட்சி மாறுவது கட் (Cut) இது ஒரு இணைப்புத்தான். ஒரு காட்சி மங்கி, அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது, மயங்கித் தெளிதல் திரை இருண்டு, பின் மறு காட்சி வருவது இருண்டு தெளிதல் (Fade in and fade-out) சினிமா மொழியில் கால்புள்ளி, முற்றுப்புள்ளி, பந்தி என இவற்றைச் சொல்லலாம். சத்தியஜித்ரேஜின் பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை வரிசையாக சில மயங்கித் தெளிதல் மூலம் உணர்த்துகிறார்கள் வேறு காலகட்டத்தில் வேறு இடத்தில் நிகழ்பவை என்பதை மயங்கித் தெளிதல் மூலமாகவும் இருண்டு தெளிதல் நல்ல சினிமா மூலமாகவும் கூறலாம்.



இந்த சினிமா மொழியை அதன் தன்மையை, தனித்துவத்தை உணர்ந்து, ஒரு படைப்பாளி அதை அழுத்தமாகக் கையாளும் போது அங்கே நல்ல சினிமா பிறக்கின்றது. இந்த மொழியிலிருந்து மாறுபட்டு, வாய்ப்பேச்சினால் கதை சொல்ல முற்பட்டால், அங்கே சினிமா நலிவடைகின்றது. பேசும் மொழி போலவே இந்த மொழியின் நயம் அதைப் பயன்படுத்துவதும் படைப்பாளியின் திறனை, கற்பனை வளத்தைப் பொறுத்தது. விடியலைக் காணும் ஒருவன் ஓகோ சூரியன் உதிக்கின்றது எனலாம். கவிஞன் அதைக் கண்டாலோ பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் என்கிறான்.

இந்த சினிமா மொழிக்கும் இலக்கணம், மரபு எல்லாமே உண்டு. இது வெகுவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. தொழில்நுணுக்க வளர்ச்சியின் விளைவாகப் புதுப்புது சாதனங்கள், இந்த சினிமா மொழியை வளப்படுத்திய வண்ணமிருக்கின்றன. படைப்பாளிகள் சினிமா மொழியின் எல்லைகளை விரிவுபடுத்திய வண்ணமிருக்கிறார்கள். மேல் நாடுகளில் ஹிட்சகாக், உடிஆலன் போன்றோரின் படைப்புக்களையும் நம் நாட்டில் ஆரூர் கோபாலகிருஸ்ணன், அரவிந்தன், மணிகௌல் போன்றோரின் படைப்புக்களையும் காணும் போது இதை உணரலாம். காட்சிப் படிமங்களின் மூலம் மட்டுமே பொறாமை, எரிச்சல், அதிருப்தி, பொறுமை, மென்மை எனும் மனித மனத்தின் வெவ்வேறு நிலைகளை ஹிட்ச்காக் காட்டினார். காட்சிப் படிமங்கள் மூலம் சொல்ல முடிவதொன்றை வார்த்தைகள் மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சீரழிகிறது என்றார். ஹிட்ச்காக் தமிழ் சினிமாவில் காட்சிப் படிமங்களால் கதை சொல்லும் முறை சரியாக வளரவில்லை. (இது இந்திய சினிமாவிற்கும் பொருந்தும்.) பேசும் படம் பிறந்த நாளிலிருந்து பேசும் பேச்சால் கதை சொல்லும் வழக்கம் வேரூன்றி அது ஒரு பாரம்பரியமாகவே ஆகிவிட்டது எப்படி?.
மௌனப்பட நாட்களில், புராணக் கதைகளே படமாக்கப்பட்டன. இவை மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த கதைகள். ஆகவே, காட்சிப்படிமங்கள் மூலம் கதையை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமற் போனது. பெண்மான், சீதையின் முன் வரும்போது, அது மாரீசன் என்றும், அதை ராமன் துரத்திக்கொண்டு போவான் என்றும் படம் பார்க்க வந்திருக்கும் எல்லோருக்கும் தெரியும். ஆகவே பேசும்படம் வந்தவுடன் பேச்சுக்கும் அதைவிடப் பாட்டுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. (காட்சிப்படிம முறைதான் வளரவில்லையே) பிறகு 1950களில் வசனகர்த்தாக்கள்.நட்சத்திர அந்தஸ்தை அடைந்ததற்கும் இப்படி ஒலிக்கும். (பேச்சு) கொடுத்த அதீத முக்கியத்துவமே காரணம். 50களில் திரையில் பேசும் தலைகளையே அதிகம் கண்டோம். சினிமா வரண்டு நலிந்துபடுத்தே விட்டது. பிறகு இந்த சினிமா ஒலிகளை இசைத் தட்டுக்கள் மூலமும். ஒலிநாடா மூலமும் கேட்டு மகிழ்ந்தோம். திரையில் காண வேண்டிய ஒன்றை கேட்டு மகிழ முடிந்தால், அது சினிமா ஆகுமா?. சினிமா மொழியை பல முறைகளில் வளமடையச் செய்யலாம். குறியீடுகள் மூலம் (Symbol)கருத்தை வலியுறுத்துவது ஒரு முறை. மகேந்திரனின் உதிரிப் பூக்களில் சூழ் கொண்ட கருமேகம் அன்பிற்கு ஏங்கும் ஒரு பெண்ணின் நம்பிக்கையின் குறியீடாகக் காட்டப்படுகிறது. பெர்க்மன் Wild Straberries என்ற படத்தில் அன்பு சிறிதளவும் இல்லாத தம்பதியரைச் சித்தரிக்கிறார். அவர்கள் செல்லும் கார் ஒரு வழியில் பழுதடைந்து விடுகிறது. இருவரும் அதைத் தள்ள முயற்சிக்கிறார்கள். இங்கே அந்தக் கார் அவர்களது மணவாழ்க்கையின் குறியீடாக அமைகிறது.

சினிமா முழுக்க முழுக்க தொழில் நுணுக்க வளர்ச்சியின் படைப்பு. இசை, நாடகம், நடனம் போன்றல்லாமல், கமராலென்ஸ் ஒளி விளக்குகள் ஒலிப்பதிவு நாடா, ஒளிவீச்சு (Prooection) ஆகியவற்றின் உதவியால் தயாரிக்கப் படுகின்றது. ஆகவே சினிமாவைப் பற்றிப் பேசும்போது, அதன் தனித்தன்மையை மனதில் வைத்தே பேசவேண்டும். அது சினிமாவாக இருக்கிறதா என்று அதை ஒரு கதையாகவோ (இலக்கியம்) அல்லது நாடகமாகவோ பார்த்து கணிக்க முடியாது. சினிமாவை உணர, அனுபவிக்க வேறு வழியில்லை. இசையை, நடனத்தை, ஆழமாக அறிய, அலசப் பாடங்கள் படிக்கும் நாம் சினிமாவுக்கு இந்த மாதிரி



உழைப்பும் பயிற்சியும் அவசியமில்லை என்று நினைக்கின்றோம். திரைப்பட ரசனைக்கு முயற்சி தேவையே இல்லை என்று நினைக்கின்றோம்.

இப்போது சினிமா மொழி நமக்கும் பரிச்சயமில்லாத ஒன்றாகவிருக்கின்றது.மற்ற நாடுகளில் இம்மொழி வளர்ந்து கொண்டிருக்கின்றது. அங்கிருந்து வரும் நல்ல சினிமாவை நாம் அனுபவிக்க முடியாததற்கு நம் பரிச்சயமின்மைதான் காரணம். சினிமா மொழி, மொழி பெயர்க்க முடியாத ஒன்று. அது மனித குலத்திற்கே பொதுவானது. அதுதான் சினிமாவின் சக்தியும் கூட. சினிமாவைப்பற்றி இந்த விழிப்பு ஏற்படாதவரை, நாம் சினிமாவைப் புலனளவில் மட்டுமே அணுகுவோம். அறிவுபு,ர்வமாகவும் அணுகவேண்டும், அந்த அனுபவம் ஆழமான தொன்றாக அமைய வேண்டும்.

ஹ

# "ஏ"னைன் (A9) பாதைக்கு என்ன நடந்தது ?



தமிழ்க்கவி

யாழ்சாலை என்று நாங்கள் சொல்லும் இந்தவீதி "கண்டிறோட்" என்றுதான் எங்களால் அழைக்கப்பட்டது. கண்டிறோட் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் தொடங்கி மாத்தளைவரை போகும் நீண்ட புகையிரப்பாதையை அண்டித் தொடங்கி குருநாகலை அடையும் போது பிரிந்து தனித்தனியாகி கண்டிக்கு நேராக இந்தச்சாலை திரும்பிவிடும். கண்டி-இலங்கையின் மத்தியநாடு மட்டுமல்ல 1815 வரை அந்நியர்களை அண்டவிடாமலும் இருந்தநாடு. பாரம் பரியமாக நில உடைமையானர்கள் வாழ்ந்த இடமும் கூட. திருகோணமலைக்கு பொருட்களை கொண்டு செல்ல கொழும்புக் கோட்டையிலிருந்து பெருமளவு கடலைச்சுற்றி வலம்வர வேண்டியிருந்ததால் கண்டி வழியாகச் விரைவாகச் செல்லும் மார்க்கம் தேவைப்பட்டது. எனவே தீவின் நாற்பக்கமும் மத்திய மலைநாட்டு வழியுடன் இணைக்க வேண்டிவந்தது. இதனால் கண்டிவீதி ஒவ்வொரு நகரத்திற்கும் ஏற்படுத்தப் பட்டது.

யாழ்ப்பாணம் கண்டி வீதியை வவுனியாவுக்கு இப்பால் யாழ்சாலை என்று அழைக்கும் வழமை தமிழீழக் கோரிக்கை யோடுதான் உருவானது. வீதிகளின் அவசியம், அளவு, தேவை என்பன கருதி அவை தரம் பிரிக்கப்பட்டன. இப்போது A தர வீதிகளில் ஒன்பதாவது இடம் யாழ் கண்டிசாலை. 1970களுக்கு முன்பே வவுனியா கச்சேரிக்கு அப்பால் கிழக்கே கொறவப்பொத்தான ஊடாக திருகோணமலைக்கு செல்லும் வீதி திருகோண மலைக்கான சுருக்கப்பாதை இது. B தரம் இப்பிரிமுனை கெற்றப்போல் கவர் போல பிரிந்து தெற்கே செல்லும் கண்டிவீதி இந்த இடத்திலிருந்தே அகலப்படுத்தப் பட்டு அழுத்தமாகப் போடப் பட்டிருந்தது. வடக்கே யாழ்ப்பாணம் வரும் பகுதி ஏனோதானோவெனக் கிடங்கும் முடங்குமாக காலந்தள்ளியது. இந்தப் பாதையும் கச்சேரிக்கு அப்பால் மன்னார் வீதி பிரிகிறது. இது தெற்கிலிருந்து வந்த அந்த அகலவீதியை சமமாக வெட்டிப் பிரித்து இழுத்து விட்டது போல இருந்தது.

இந்த 'ஏ' (A9) னைன் வீதிக்கு இப்போது உலகப் புகழ் வந்திருக்கிறது. சர்வதேச வானொலிகள் தொலைக்காட்சிகள் மட்டுமல்ல இது சரித்திரத்திலும் பதியப்பட்டு விட்டது. அண்மைக் காலத்தில் அப்படி என்ன நடந்தது.

இவ்வீதி வவுனியா விலிருந்து சுமார் பதின்மூன்று கிலோ மீற்றரில் ஓமந்தையை அடையும். 1990 இவ்வீதி முதன்முதலாக மூடப்பட்டது. அப்போதுதான் இந்திய இராணுவம் வெளியேறிய சில மாதங்களுள் 1990 வைகாசி மாதம் 12ம் திகதி. 7ம் திகதி மட்டுநகரில் நடந்த அசம்பாவிதத்தைத் தொடர்ந்து, 10ந் திகதி மட்டக் களப்பில் போர் ஆரம்பித்து, 11ம்,12ம் திகதி வவுனியாவிலும் கருக் கொண்டது.

அப்போது மாங்குளம், கிளிநொச்சி, கொக்காவில், ஆனையிறவு என A9 பாதையிலும், முல்லைத் தீவுப் பகுதியிலும் இராணுவம் நிலைகொண்டிருந்தது. ஆனால் இந்தியப்படையின் வரவுக்குப்பின் முகாம்களில் முடங்கியிருந்தனர். ஏனைய இடங்களிலிருந்து இராணுவம் பெரும் முகாம்களுக்குள் முடக்கப் பட்டிருந்தது.

இந்தியராணுவம், தன் னுடன் சேர்த்திருந்த மக்கள் தொண்டர் படையுடன் வெளியேற, இவர்கள் இருந்த முகாம்கள், வீதிகள், ஊர்கள் என்பன விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுக்குள் வந்தன. சிலவற்றை போராடியும் மீட்டனர்.

இந்தவகையில் புலிகளின் காவலரண்கள் வீதிகளில் அமைக்கப்பட்டிருந்தது. அவற்றைக் கடந்து செல்ல இராணுவம் அனுமதிக்கப்படவில்லை. புலிகள் வடக்குக் கிழக்கில் தமது அரசியல் வேலைகளைச் செய்தும் வந்தனர். இப்போதுள்ளது போல். திடீரென 1990-06-10 அன்று ஒரு இராணுவவாகனம் தாண்டிக் குளத்தடியில் அமைந் திருந்த விடுதலைப்புலிகளின் காவல ரணைத்தாண்டி உள்ளே செல்ல முயன்றது. இவர்கள் தமது முகாமிலிருந்து புறப்படும் போதே அறிவிக்கவில்லை என்பதுடன் காவலரண்தாண்டி புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசக்குக்குள் வரவும் இவர்களுக்கு அனுமதி யில்லை. எனவே காவலரன் பொறுப்பில் நின்ற கப்டன் அசோக், தளபதி மேஜர் தயாபரனுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். எப்படியும் உள்ளேவிட மறுக்கும் படியும், தான் மேலிடத் திடம் கேட்டுச் சொல்வதாகவும் தயாபரன் அறிவித்தார். இவ்வுரையாடல் முடிவதற்குள் வாகனத்தை கொஞ்சம் பின்னுக்கெடுத்த இராணுவ அதிகாரி முழு வேகத் துடன் அதை முன்னே செலுத்தி னான். விடுதலைப்புலிகள் தடுக்க முயலவே இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. புலிகளும் எதிர்த்து தாக்கவே இராணுவம் வாகனத்துடன் திரும்பவும் முகாமுக்குள் சென்றது.

1990-06-15 அன்று விடிந்த சில மணிநேரத்துக்குள் திடீரென அப்பகுதியில் புகுந்த குண்டுவீச்சு விமானங்கள் அக்காவலரணைச் சுற்றிப் பீப்பாக் குண்டுகளை உருட்டின. வவுனியாவில் பெரும் சமர் மூண்டது. **A9** பாதை அரசினர் விவசாயப் பண்ணைவரை மூடப் பட்டது. வவுனியா நகரம் முற்றாகச் செயலிழந்தது. மக்கள் வவுனியாக் குளத்து வெளியூடாக வந்து தாண்டிக்குளம் குளக்கட்டை அடைந்து, கல்மடு வீதியால் குழுமாட்டுச் சந்திவரைவந்து, அங்கிருந்து அவ்வீதியால் தெற்கே திரும்பி நெளுக்குளம் வந்து மன்னார் வீதி வழியாக பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு வந்தார்கள்.

சிலர் தாண்டிக்குளம் வந்து அங்கிருந்து A9 பாதை வழியே புளியங்குளம், கனகராயன் குளம். கனகராயன் குளத்திலிருந்து கற்கிடங்கு வழியாகவரும் யாழ்ப் பாணம் பழைய ரோட்டு வழியாக கரிப்பட்டமுறிப்பை அடைந்து, மாங்குளம் இராணுவமுகாமை பின்புறமாகச் சுற்றி காட்டுவழியாக மீண்டும் கடந்து A9 பாதையில் ஏறி முறிகண்டி வந்து சேர்வர் என நினைத்தால் தவறு இடையே கொக்காவில் நின்றது.

*பாதை தொடரும்.....*

# "நெஞ்சு பொறுக்குதில்லையே"....

-1— — — — — — — — —

**நீ**ண்ட நாட்களுக்கு பின்பு எனது நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். நண்பர் என்னைக் கண்டது, மகிழ்ச்சியோடு வரவேற்று உட்காரவைத்தார். அவருக்கு முன்பாகக்கிடந்த வானொலியில் இருந்து கிரிக்கெட்வர்ணை, ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

கொழும்பு-சுகததாச விளையா ட்டரங்கில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே விளையாட்டு நடைபெறுவதை, ஒலிபரப்பாகும் வருணையில் இருந்து என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது.

நண்பர் என்னோடு பேச்சுக் கொடுத்தவாறே, கிரிக்கெட் விளையாட்டை செவிமடுத்து ரசித்துக் கொண்டிருந்தார்.

நேரம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. எங்கள் இருவரிடையேயும் பேச்சு மெல்ல மெல்லக் குறைந்து, ஒரு கனத்த மௌன இடைவெளி நிலவத் தொடங்கியது.

நண்பரின் முகமும் கடுகடுப்பான நிலையில், மெல்லச் சிவந்து போன தோற்றத்துடன் காணப்பட்டது.

நண்பரைச் சிறுவயதிலு முதலே புரிந்து கொண்ட நான், எதுவும் கூறாது மௌனம் காத்தபடி இருந்தேன்.

'என்ன இருந்தாலும் 'ஐசே... இவங்கள் இப்படித் தோற்றுப் போயிருக்கக் கூடாது.' அடித்தொண்டையிலிருந்து இரைந்து கத்தினார் நண்பர்.எனக்குள் மெல்லச் சிரிப்பு எழுந்து கொண்டது. ஆயினும், அதை வெளிக்காட்டாது இருந்தேன்.



கிரிக்கெட் விளையாட்டில் அவுஸ்திரேலிய அணியிடம், அவருக்கு விருப்பமான இந்தியஅணி தோற்றுப்போய் நிற்பதை, வானொலி அலை வரிசையூடாகக் கேட்டபோது, அவரால் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

அப்பொழுது அவரது வீட்டுத் தெருப்படலையருகில் இருந்து அந்தக் குரல் கேட்டது.

'ஐயா...'

'ஆரது...?' நண்பர் சற்று உஷ்ணத்துடன், உறுக்கியே கேட்டார்.

'ஐயா! ஏதாவது பிச்சை போடுங்கையா. காலையில இருந்து ஒன்றும் சாப்பிடேல்ல. வயிறு சரியாப் பசிக்குது.' குரல் வந்த திக்கில் எனது பார்வையைத் திருப்பிய போது, வயது முதிர்ந்த பெண்ணொருத்தி ஊன்று கோல் உதவியுடன் இரந்து கொண்டிருந்தாள். நண்பர் எரிச்சலுடன் சிடுசிடுத்தார்.

'இந்தா கிழடு, பிச்சை வாங்கிறதுக்கு என்ரைவீடே கிடைச்சது? போடி. போய் வேறை எங்கையாலும் பிச்சை எடு. போ...' அந்த ஆச்சி ஒன்றும் கூறாது திரும்பிப் போய் விட்டார்.

விளையாட்டுக்கள் விளையாட வேண்டியது தான் கேட்க வேண்டியது தான் ரசிக்க வேண்டியது தான். ஆனால், ஓர் உயிரின் வயிற்றுப் பசியை விட, எங்கேயோ உள்ள ஒரு நாட்டின் அணி, விளையாட்டில் தோற்றுப் போய் விட்டதற்காக நண்பர் நடந்து கொண்ட விதம்...?

என்னால் தொடர்ந்து அந்த இடத்தில் இருக்க முடியவில்லை. இருந்தால்... அவரது செய்கையில் நானும் ஒரு பங்காளியான உணர்வு என்னைப் பரிகசிக்கத் தொடங்கிவிடும். என்னை வற்புறுத்தி இருத்த முற்பட்ட நண்பரைப் பொருட்படுத்தாது, அவ் விடத்தைவிட்டு வெளியேறினேன் அடங்காத வெறுப்போடு...

-2— — — — — — — —

உச்சிவெய்யில் உடலை எரித்துக் கொண்டிருந்தது. வீசும் அனல் காற்றில் செம்மண் தெருவின் புழுதி முகத்தில் அடிக்க, எனது மிதிவண்டியில் போய்க் கொண்டிருந்தேன் நான்.

சீரற்ற தெருக்களில் உள்ள சிறுகுழிகளில் மிதிவண்டியின் முன் சில்லு உருளும் போது இலேசாக இடிக்கத் தொடங்கவே, அவசரமாக இறங்கி மிதிவண்டியின் முன்சில்லின் ரயரை அமர்த்திப் பார்த்தேன். காற்று வெளியேறியிருப்பது தெரிந்தது.

மிதிவண்டியை அருகில் உள்ள மிதிவண்டி திருத்தகம் ஒன்றின் முன்னால் நிறுத்தி விட்டு வால்ரியூப்பை பரிசோதித்த போது வெய்யிலின் அகோரச் சூட்டுக்கு அது உருகிப் போய் இருந்தது.

'வேறு ஒரு வால்ரியூப் வாங்கிப் போடுவம்...' என நினைத்தவாறு மிதிவண்டி திருத்தகத்துக்கு அருகில் இருந்த ஒரு பலசரக்குக் கடைக்குச் சென்றேன். 'அக்கா' ஒரு வால்ரியூப் தாங்கோ... கூறிவிட்டு, பொக்கெற்றுக்குள் கையை விட்டேன் காசை எடுப்பதற்காக.

'முதல்ல ஒரு ரூபாய் தாங்கோ... கடைக்காரப் பெண்மணி கையை நீட்டியபடி கூறினாள். காசைக் கொடுத்து விட்டு நின்றேன்.

ஒரு அங்குலமாக வெட்டித்தர வேண்டிய வால்ரியூப்பை முக்கால் அங்குல அளவுக்கு வெட்டித் தந்ததை, அவசரத்தில் நான் கவனத்தில் கொள்ளாது, வால் கட்டையில் பொருத்திப் பூட்டிவிட்டு, காற்றை அடித்தபோது, வால்ரியூப் மிதிவண்டியின் ரியூப்புக்குள் சென்று விட்டது.

எரிச்சலும் சினமும் என்னுள் ஒருங்கேசேர, திரும்பவும் அந்தப் பெண்மணியிடம் சென்றேன் இன்னொரு வால்ரியூப் வாங்குவதற்காக.

'அக்கா' இன்னொரு வால்ரியூப் தாங்கோ...'' "முதல்ல காசைத் தாங்கோ..." என்று அந்தப் பெண் கூறிய போது தான், என் உள்ளுணர்வுகள் விழித்துக் கொண்டன.

"அக்கா, முதல்லை வால்ரியூப்பை தாங்கோ. அப்போதும் கட்டையா வெட்டித் தந்தியள். அது ரியூப்புக்குள்ளே போட்டுது."

"அப்படியெண்டால் ரண்டு ரூபாதாரும். நீளமாக வெட்டித்தர."

வியாபாரத்தில் உள்ள சுரண்டல் தன்மையின் ஒரு பகுதி தெரிந்தது எனக்கு தெட்டத் தெளிவாக. முதல்ல காசை வாங்கிக் கொண்டு, வால்ரியூப்பின் நீளத்தைக் குறைத்து வெட்டிக் கொடுப்பதாலும், காற்றடிக்கும் போது அது ரியூப்பினுள் சென்று விடுவதாலும், மீண்டும் தம்மிடம் வால்ரியூப் வாங்குவதற்கு வரவழைக்கும் திட்டமிட்ட தந்திரம் என்பது எனக்கு புலனாகியது அப்போது. திரும்பிப் பார்த்தேன். அவ்விடத்தில் வேறு கடைகளும் இருக்கவில்லை.


**-ஆஞ்சநேயன்-**

மாற்று வழியில்லாது இரண்டு ரூபாய் கொடுத்து ஒரு அங்குல நீளத்தில் வால்ரியூப் ஒன்றை வாங்கிக் கொண்டு திரும்பிய போது...

"நாட்டிலை அக்கிரமம், அநியாயம் கூடிப்போச்சு. அதுதான் வெய்யில் இந்தப்பிடி பிடிக்குது..."

தெருவில் யாரோ ஒருவர் இன்னொருவருக்கு கூறிக்கொண்டு செல்வது என் காதில் தெளிவாகக் கேட்டது. எனக்குக் கேட்டது போலவே அந்தக் கடைக்காரப் பெண்மணிக்கும் கேட்டிருக்கும் நிச்சயமாக...

யாழ்குடாவின் சராசரி மழைவீழ்ச்சி 30 அங்குலமாகவும், வன்னியின் சராசரி மழைவீழ்ச்சி 60 அங்குலமாகவும் மதிப்பிடப்படுகின்றன. வன்னியில் பெருமழை பெய்யும் போது பெருமளவு நீர் கனகராயன் ஆறு, நெத்தலி ஆறு,



# ஆனையிறவு நன்னீர்த்திட்டம்

பிரமந்தன் ஆறு, தேராவில் ஆறு என்பன ஊடாகவும் பெயரிடப்படாத வேறு நீர்பாதைகள் வழியாகவும் சென்று ஆனையிறவு கடலேரியில் கலக்கின்றது. வடமாகாணத்தின் ஒரேயொரு ஆறு என்று குறிப்பிடப் படும் கனகராயன் ஆறு வவுனியாவில் ஆரம்பித்து, புளியங்குளம், மாங்குளம் பிரதேசத்தில் பெருக் கெடுத்து இரணைமடுக் குளத்தை வந்தடைகின்றது.

இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் ஆபத்தான அளவுக்கு உயரும் போது தடுப்புக் கதவுகள் திறந்து விடப்படுகின்றன. ஆனையிறவு கடலேரியில் கலக்கும் இந்த நன்னீர அதனுடைய உப்புத்தன்மையைக் குறைக்கின்றது. ஆனையிறவு நெடுஞ் சாலையின் கிழக்குப் புறமாகவுள்ள நீர் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் பெரும்பாலும் நன்னீராகவே காணப் படுகின்றது. இதன் பின் படிப்படியாக உப்புநீராக மாறுகின்றது. சில வருடங்களில் இந்த நீர் ஏப்ரல் மாதம் வரை உவர்நீராக மாறாமல் தாக்குப் பிடிக்கின்றது.

இந்த அவதானிப்பின் அடிப்படையில் ஆனையிறவு நன்னீர்த்திட்டம் வகுக்கப்படுகின்றது. இலங்கை சட்டசபை அங்கத்தவராகப் பதவி வகித்த கௌரவ கே.பாலசிங்கம் அவர்கள் இத்திட்டம் பற்றிய பேச்சை முதன்முறையாக ஆரம்பித்து வைத்தார். சிறந்த கல்விமானும், செயல் வீரனுமாகிய இந்த மகான் 1930களில் ஆனையிறவு நன்னீர்த் திட்டத்தையும், மகாவலி கங்கையை கனகராயன் ஆற்றுடன் தொடுக்கும் திட்டத்தையும் முன்வைத்தார். இதுவரை இரண்டுமே நிறைவேறாமல் கிடக்கின்றன.

இலங்கையின் கடன் வழங்கும் வங்கி, தெங்கு கூட்டுத்தாபனம், உல்லாசப் பயணிகள் சபை போன்ற பல்வேறு நிர்வாக மற்றும் பொதுநல அமைப்புக்களை இவர் முன்னின்று உருவாக்கினார். லண்டன் பல்கலைக் கழகத்தின் இளமானிப் பட்டப்படிப்பில் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளை சேர்ப்பதற்கு பாலசிங்கம் பொறுப்பாவார். கொழும்புடன் திருகோணமலை, மட்டக்களப்பு நகரங்களை புகையிரதப்பாதை மூலம் தொடுக்கும் திட்டத்திற்கும் இவர் தந்தையாவார். 1952இல் இவர் இறக்கும் போது இலங்கையின் மிகச் சிறந்த சட்டசபை உறுப்பினராக கணிப்பிடப்பட்டார்.

இலங்கை நீர்ப்பாசனத் திணைக் களத்தின் உதவி இயக்குநராகப் பதவி வகித்த நீரியல் பொறியியலாளர் எஸ்.ஆறுமுகம் ஆனையிறவு நன்னீர் திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்க முனைந்தார். 1954ம் ஆண்டு இது சம்பந்தமான வரைபடங்களையும் திட்ட வரைவுகளையும் ஆறுமுகம் வெளியிட்டார். சிறீலங்கா நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வைப்பிலிடப் பட்டிருக்கும் மூலப் பிரதிகள் ஆறுமுகம் பிளான் என்று அழைக்கப்படுகின்றன. இரணைமடுக்குளத்தை விஸ்தரித்ததோடு அதனுடைய அணைக்கட்டுக்களை உயர்த்துவதற்கும் ஆறுமுகம் பொறுப்பாவார். வட்டக்கச்சியிலுள்ள ஒரு தெருவுக்கு இவர் நினைவாக 'ஆறுமுகம்வீதி' என்று பெயரிடப் பட்டுள்ளது. இக்கட்டுரையின் ஆதார சுருதியாக ஆறுமுகம் பிளான் விளங்குகின்றது.

ஆனையிறவு நெடுஞ்சாலைக்கு கிழக்குப் புறமாகவுள்ள நீர் நன்னீராக வருடம் பூராகவும் இருக்க வேண்டிய கட்டாயத்தை ஆறுமுகம் தயாரித்த திட்டம் வலியுறுத்துகின்றது. இரண்டாவது இரணைமடுக்குளமாக இது காலப்போக்கில் மாற்றப்படுவதை திட்டம் எதிர்பார்க்கின்றது. சுண்டிக்குளம் வரை பரந்து கிடக்கும் ஆனையிறவு கடலேரி 11,400 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. இதனுடைய வடக்கில் வன்னேரிக்குளமும் தெற்கில் கரைச்சி நிலப்பரப்பும் காணப் படுகின்றன.

நன்னீராக்குவதற்குச் செய்ய வேண்டிய கட்டுமானப்பணிகள் மூன்று. இவை கட்டம் கட்டமாக செயற்படுத்தப்பட வேண்டும். முதற்கட்டமாக ஆனையிறவு பாலத்தடியில் அணைக்கட்டு அமைத்தல். இது நன்னீர மேற்குப்புறமுள்ள கடல்நீருடன் கலப்பதையும், கடல்நீர் கிழக்குப்புறம் வருவதையும் நிரந்தர மாகத்தடுத்து விடும். பாலத்தையோ அதன்மேலுள்ள பாதைகளையோ அகற்ற வேண்டிய தில்லை. அணைக் கட்டு எழும்பியபின் இவற்றை விஸ்தரிக்கும் வாய்ப்பு கூடுதலாக இருக்கிறது.

இரண்டாவதாக சுண்டிக்குளத்தில் இரு மைல் நீளமான அணைக் கட்டை அமைத்தல். இவ்வணைக் கட்டு ஒரு போக்குவரத்துப் பாதையையும் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது மேலதிக நீரை வெளியேற்றும் அமைப்பையும் கொண்டிருக்கும். இந்த அணைக் கட்டும் நன்னீர்-கடல்நீர் கலப்பைத் தடுப்பதற்கு உதவும். இந்த இரு அணைக்கட்டுக்களும் பூர்த்தியானவுடன் ஆனையிறவு நன்னீர் திட்டத்தின் முதல் அங்கம் நடைமுறைக்கு வரும்.

மூ[illegible]தாக முள்ளியன் பகுதி ஊ[illegible] நீர் வாய்க்கால் அமைத்தல். [illegible] ஆனையிறவு நன்னீர தேக்கத்தை[illegible]ம் வடமராட்சி கடலேரியையும் ஒன்றிணைக்கும் திட்டத்தின் முக்கிய பகுதியாக இரு நீர் நிலைகளின் ஒன்றிணைப்பு கருதப்படுகின்றது. யாழ்ப்பாணத்தின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதே ஆறுமுகம் திட்டத்தின் அடிப்படை நோக்கமும் குறிக்கோளுமாகும். திட்டம் நிறைவேற்றப்பட்டால் இந்த மண்ணின் பொருளாதாரமும் வாழ்வியல் முறைகளும் பாரியளவில் மாற்றமடையும்.

யாழ் தீபகற்பத்தின் நடுப்பகுதியில் பச்சிலைப்பளை-முள்ளியன் தொட்டு செம்மணி-அரியாலை வரை வடமராட்சி கடலேரி பரந்து கிடக்கின்றது. தீபகற்பத்தின் தட்பவெப்பத்தையும் நீர்வளத்தையும் வடமராட்சி கடலேரி தீர்மானிக்கின்றது. அதன் கரையோரங்களில் விவசாயத்திற்கு உதவாத உவர்நிலம் காணப் படுகின்றது. செம்பியன்பற்று, எழுதுமட்டுவாள், வரணி, கரவெட்டி,

*கலாநிதி*
**க.சோமாஸ்கந்தன்**

வல்லைவெளி ஆகிய பகுதிகளைத் தன்பால் வடமராட்சிக் கடலேரி வைத்துள்ளது. சரசாலையில் பிரியும் இதன் கிளை செம்மணி-அரியாலையைத் தொடுக்கின்றது.

ஆனையிறவு நன்னீர் தேக்கத்தை தாயாகவும் வடமராட்சி கடலேரியை மகளாகவும் இத்திட்டத் துடன் தொடர்புடையோர் கருதுகின் றனர். திட்டத்துடன் இணைந்துள்ள கட்டுமானப்பணிகள் நிறைவேற்றப்பட்ட பின்பும் அதனுடைய அடிப்படைப் பயனைப் பெறச் சில காலம் பொறுத்திருக்க வேண்டும். உவர்ப்பு நீக்குதல் தடங்கலை ஏற்படுத்தும். ஆனையிறவுப் பகுதியின் அடிநிலம் களிமண்ணாக இருப்பதால் மிகச்சில வருட மழைக்குப் பின் உவர்ப்பு நீங்கி விடும். முழு அளவு நீங்காவிட்டாலும் விவசாயத்திற்கு பயன்படும் அளவுக்கு உப்பின் அளவு குறைந்துவிடும்.

வடமராட்சிக் கடலேரியின் அடிப்பாகம் வண்டல் மண்ணாகவும், சுண்ணாம்பு நிலமாகவும் இருப்பதால் உவர்ப்பு நீங்கக் கூடுதல் காலம் எடுக்கும். ஏற்கனவே தொண்டமானாற்றை குறுக்கறுத்து ஒரு தடுப்பு போடப்பட்டுள்ளது. இது முழுப் பயன்பாட்டை இன்னமும் தரவில்லை. கி.பி 12ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வடமராட்சி கடலேரி எப்புறமும் தரையால் சூழப்பட்ட உப்புநீர் ஏரியாகவே இருந்துள்ளது. இப் புவியியல் அமைப்பு பிற நாடுகளிலுள்ள உள்நாட்டுக் கடல் களுக்கு ஒப்பானது.

கரணவாய் என்று அழைக்கப்படும் கருணாவாசல் கிராமத்தில் பெருமளவில் உப்புப் பாறைகளும் படிவங்களும் முன்பு இருந்தன. யாழ் தீபகற்பத்தை அப்போது ஆட்சி செய்த சோழர்கள் இந்த உப்பைத் தமது நாட்டிற்கு எடுத்துச் செல்லத் தீர்மானித்தனர். முதலாம் குலோத்துங்கனின் படைத்தளபதியான கருணாகரத் தொண்டமான் ஏரியைக் கடலோடு தொடுக்கும் வாய்க்காலை வெட்டினான். அது தொண்டமான் ஆறு என்று பெயர் பெற்றது.

கருணாகரத் தொண்டமானின் வீரத்தையும் அவன் இலங்கை மீது படையெடுத்த வரலாற்றையும் கலிங்கத்துப்பரணி புகழ்ந்துரைக்கும்.

**"இலங்கையெறிந்த கருணாகரன்றனிகல் வெஞ்சிலையின் வலிகேட்பீர்**
**கலிங்கமெறிந்த கருணாகரன்தான் களப்போர் பாடத்திறமினோ."**

குலோத்துங்கனின் ஆணைபெற்று வட இலங்கையை ஆட்சி செய்த கருணாகரத் தொண்டமான் கருணாகரப் பிள்ளையார் என்ற பெயரில் இணுவில், உரும்பிராய் கிராமங்களில் விநாயகர் ஆலயங்களை எழுப்பினான். இவன் காலத்தில் செம்பியன்பற்று துறைமுகமாக வடக்கில் நிலவியது. (ஆதாரம் ஈழத்து வாழ்வும் வளமும்- பக்கம் 110-114, பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை -இரண்டாம் பதிப்பு 1996, பண்டைய ஈழம் பக்கம் 242-243 வே.க.நடராசா பதிப்பு 1970)

யாழ் தீபகற்பம் தனது குடிநீர் மற்றும் விவசாயத்தேவைகளுக்கு நிலத்தடி நீரை நம்பியிருக்கிறது. வேறு விதமாக இத்தேவைகளுக்கு நீர் கிடைக்கும் வாய்ப்பு இப்போதைக்கு இல்லை. வடமராட்சி கடலேரியை நன்னீர் ஏரியாக மாற்றினால் தீபகற்ப வாழ்வின் தன்மை மாறுதலடையும்.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் விவசாயத்திணைக்களம் வெளியிட்ட புள்ளிவிவரத் தகவல்களின்படி (2000) உட்புற நீர் நிலைகள் உட்பட வடகிழக்கின் மொத்தப் பரப்பளவு 18860.51 சதுர கி.மீ இதில் 4.8 வீதமாக அமையும். யாழ் தீபகற்பத்தில் உட்புற நீர்நிலைகள் உட்பட மொத்தப் பரப்பளவு 41.70 சதுர கி.மீ. நீர் புறநீங்கலாக தரையின் பரப்பளவு 983.50 சதுர கி.மீ.

தீபகற்பத்தின் மேற்கில் வழுக்கி ஆறும், கிழக்கில் வடமராட்சி கடலேரியும் காணப்படுகின்றன். இவை விவ்சாயத்திற்கோ வேறு எதுவகை தேவைக்கோ உதவ மாட்டா. வழுக்கி ஆறு பெயரளவில் ஆறாக இருப்பதோடு நின்று விடுகிறது. மழைவெள்ளம் வெளியேறும் வாய்க்கால் என்று வர்ணிப்பது மிகவும் பொருத்தம். முன்னொரு காலத்தில் கடல் வாணிபத் தேவைகளுக்கு வழுக்கியாறு உதவியது பிறிதோர் கதை.

ஆனையிறவு நன்னீர்த் திட்டம் உப்பளத்திற்கு முடிவு கட்டும் என்று அஞ்சத் தேவையில்லை. உப்பளம் தனக்குரிய இடத்தில் தொடர்ந்து இயங்கும். நன்னீர் திட்டம் விவசாய வளர்ச்சியுடன் நன்னீர் மீன் வளர்ப்புக்கும் உதவும். எமது நன்னீர் மீன் வளத்தை விஞ்ஞான பூர்வமாகப் பெருக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. எமது குளங்களில் வாழும் மீனினங்களின் பெயர் விவரங்களை நாம் அறியமாட்டோம். வர்த்தகரீதியாக இலாபம் பெறுவதற்கு உகந்த நன்னீர் மீன்களை நாம் தெரிவு செய்து வளர்க்க வேண்டும்

உணவுத்தேவைக்கு நன்னீர் மீன் மிகவும் சிறந்தது. வட அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாக்கண்ட நாடு களில் நன்னீர் மீன்கள் பெருமளவில் உணவாக்கப்படுகின்றன. நன்னீர் மீன்கள் பற்றி ஆய்வு நூல்கள் இங்கு கிடைக்கின்றன. கடல்மீனை உண்ணாத மக்கள் கூட்டங்களை ஆசியாவில் காண முடிகின்றது. வியற்னாம் நாட்டின் பொருளாதாரம் நெல் உற்பத்தி, நதிகளில் பெரும் எண்ணிக்கையில் பிடிபடும் நன்னீர மீன் என்பனவற்றில் கிட்டத்தட்ட சம அளவில் தங்கியுள்ளது.

வன்னிக் குளங்களில் வாழும் மீன்களை ஒட்டுமொத்தமாக 'ஜப்பான் மீன்' என்று அழைக்கிறோம். பலவகை மீன்கள் வாழ்கின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக இனப்பெயர் உண்டு. வறியோர் உணவு என்று இகழ்ச்சி மொழியும் நன்னீர் மீன் தொடர்பாக வழங்குகின்றது. டி.எஸ்.சேனநாயகா பிரதமராக இருந்த காலம் மீன்வளம் மற்றும் கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகித்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜப்பானில் இருந்து தருவித்த நன்னீர் மீனை இரணைமடுக்குளத்தில் விட்டதாக கர்ணபரம்பரைக்கதை உலாவருகின்றது. இருப்பினும் எல்லாவகை வன்னி நன்னீர் மீனினங்களையும் ஜப்பான் மீன் என்பது மிகப்பெரிய தவறு.

இலங்கையின் முன்னாள் புதைபடிவ ஆய்வுத்திணைக்கள ஆணையர் டாக்டர் பி.ஈ.பி. தெரினியகல செய்த ஆய்வுகளின்படி மகாவம்ச காலத்தில் மாத்திரம் 56 வகையான நன்னீர் மீனினங்கள் இத்தீவில் காணப்பட்டன. அதன்பின் எத்தனை ரகங்கள் அழிந்தன.எத்தனை ரகங்கள் புதிதாகப் புகுத்தப்பட்டன என்ற விவரம் கிடைக்கவில்லை.

வெளிநாடுகளில் நன்னீர் மீன்களில் ஒன்றான கெழுதியின் குடும்பத்தைச் சேர்ந்த இனங்கள் கூடுதலாக உண்ணப்படுகின்றன. இந்தரக மீனின் தலையில் தொங்குமீசை இருப்பதால் இந்த மீனினத்தை பூனையுடன் தொடர்புபடுத்தி 'பூனை மீன்' (காற்பிஷ்) என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள். பூனைக்கும் இந்த மீனுக்கும் இடையில் மீசை ஒன்றுதான் பொது அம்சம். 'எமது போராட்டமும் தற்சார்புப் பொருளாதாரமும்' (தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வெளியீடு, தாவடி 1994) என்ற ஆய்வு நூலில் 'தமிழீழம் மீன் உற்பத்தியில் தன் தேவையைவிட மேலதிகமாகவே உள்ளது' என்ற பிரகடனம் காணப்படுகின்றது. இது கடல் மீனுக்கு மாத்திரம் பொருந்தும். நன்னீர் மீனுக்கும் சந்தை வாய்ப்பு உண்டு. புதிய இனங்களைத் தருவிக்கும போது நாம் இரு விடயங்களை மனங் கொள்ளல் வேண்டும் அவை நீரியல் சூழலை மாசுபடுத்தாதவையாகவும், ஏற்கனவே இங்குள்ள மீன்களுக்கு உயிரழிவை ஏற்படுத்தாதவையாகவும் இருப்பது அவசியம்.

இன்று சிங்கள நீர், தமிழ் நீர் என்றாகி விட்டது. எமது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய மகாவலி நீர் வரும் என்று எண்ணுவது முட்டாள்தனம். எமது நீர் முகாமைத்துவத்தை நாமே திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டும். திட்டமிடாதவன் நட்டமடைவான் என்பது பொய்யா மொழி.

*யாழ் தீபகற்பம் தனது குடிநீர் மற்றும் விவசாயத்தேவைகளுக்கு நிலத்தடி நீரை நம்பியிருக்கிறது. வேறு விதமாக இத்தேவைகளுக்கு நீர் கிடைக்கும் வாய்ப்பு இப்போதைக்கு இல்லை. வடமராட்சி கடலேரியை நன்னீர் ஏரியாக மாற்றினால் தீபகற்ப வாழ்வின் தன்மை மாறுதலடையும்.*




# நீண்ட நாள் ஆசை

அந்தக் காட்டில் பூனையும் முயலும் நட்புடன் வாழ்ந்து வந்தது. முயல் எங்கு போவிலும் பூனையுடன் தான் போகும். பூனையும் முயலை விட்டுப் பிரிய மாட்டாது.
ஒரு நாள் முயல், தலையை தடவிக் கொண்டிருந்தது. அப்போது பக்கத்தில் இருந்த காடுகள் எல்லாம் தேடிப்போன முயல் எலியை பிடிக்காது வந்தது. எலி வரும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த பூனைக்கு ஏமாற்றமாய் போய் விட்டது. சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற முடியவில்லை என்ற நாணத்துடன் முயல் வந்து பூனைக்குப் பக்கத்தில் இருந்தது. அப்போது எலி ஒன்று பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அதை பூனை கண்டதும் முயலுக்குக் காட்டியது. முயல் எலியைப் பார்த்ததும் எப்படி எலியை வளைத்துப் பிடிக்கலாம் என்று யோசித்தது.



பூனை கேட்டது.

"முயலாரே! நண்பர்கள் என்றால் எப்படி இருக்க வேணும் சொல்லு" என்றது. "நண்பனுக்காக எதையும் செய்யக் கூடியவன் தான் சிறந்த நண்பன்" எனப் பதிலளித்தது முயல்.

"அப்படியா நான் ஒன்று சொன்னால் செய்வீரா?" என்றது பூனை.

"ஓ... உனக்குச் செய்யாததா? என்வென்று கேளும் நான் தயங்காமல் செய்கிறேன்" என்றது முயல்.

"எனக்கு எலி சாப்பிட நீண்ட நாள் ஆசை-எங்கேயாவது போய் எலி பிடித்துக் கொண்டு வருவீரா?" என்று கேட்டது பூனை. இதைக் கேட்டதும் வியந்து போன முயல் "இதுவா உனது நெடுநாள் ஆசை... இப்போதே நான் போய் எலியுடன் வருகின்றேன்" என்று முயல் சென்றது.

"பூனை நண்பா... நீ கண்ணை மூடிக் கொண்டு படு. நீ இறந்து விட்டதாகக் கூறி நான் எலியை அழைக்கின்றேன். எலி அருகில் வந்ததும் நீ எலியைப் பிடித்து விடு" என்றது முயல்.

"நண்பன் என்றால் உன்னைப் போல் தான் இருக்க வேணும்" என்று கூறி விட்டு பூனை இறந்தது மாதிரி கண்களை மூடிக் கொண்டு படுத்தது. முயல் எலியிடம் போய் அழுதது.

"ஐயோ எலியாரே என் உயிர் நண்பன் இறந்து விட்டானே! நான் என்ன செய்வேன்?" என கண்களைத் துடைத்தது முயல்.

முயல் இதற்கு "நான் என்ன செய்வது, எனக்கும் உன் நண்பன் இறந்தது கவலையாகத் தானிருக்கிறது" என எலி கூறியது.

"எலியாரே! என் நண்பனை நான் கொண்டு போய் அடக்கம் செய்யப் போறன். என் நண்பனை தூக்கிக் கொண்டு போக உதவி செய்" என கெஞ்சியது முயல்.

"அப்படியா! இதோ வருகிறேன்" என முயலுக்குப் பின்னால் வந்தது. முயல் வந்து பூனையின் தலை அருகோடு நின்றது. எலி எட்டத்தில் நின்றது. பூனையைப் பார்த்ததும் "ஏன் அங்கேயே நிற்கிறீர் எலியாரே! கிட்டவாரும்" என்றது. எலிக்குப் குழப்பமாய் இருந்தது. ஏன் முயல் கிட்ட வரும்படி அவசரப்படுத்துகிறது. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கும் என சிந்தித்த எலி பூனை உண்மையிலும் இறந்து விட்டது தானா என சோதிப்பதற்கு ஒரு திட்டம் வகுத்தது.

"என்ன எலியாரே பேசாமல் நிற்கிறீர்கள் கிட்ட வந்து பூனையைத் தூக்குங்கள்" என்றது முயல்.

"முயலாரே பூனை இறந்தால் நாக்கு வெளியில் தெரியுமே" என்றது எலி.

"அப்படியா எலியாரே..?" என முயல் விழித்தது. அப்போது இறந்ததாகப்படுத்திருந்த பூனை நாக்கை வெளியில் நீட்டியது. இதைக் கண்ட எலி தலையில் கை வைத்தது.

"அடப் பாவிகளை.... திட்டம் போட்டு என்னை கொலை செய்யப் பார்த்தீர்களே" என்று சொல்லிக் கொண்டு ஓட ஆரம்பித்தது எலி.

***

# மின்மினிப் பூச்சிகள்

மின்மினிப் பூச்சிகள், உயிரொளிர்வு உள்ள பூச்சிகளாகும். பொதுவாக ஒளியுடன் வெப்பமும் இணைந்தே இருக்கும். ஒளி அதிகம் ஆக ஆக, வெப்பமும் உயரும். ஆனால் இந்த உயிர்களின் ஒளிர்வில் வெப்பமே இல்லை. இதனால் இந்த ஒளியைத் தண்ணொளி என்றும் இப்பூச்சிகளை தண்ணொளி வீசும் உயிரினங்கள் என்றும் கூறுகின்றனர்.

மின் மினிகளில் இரண்டு வகையுள்ளன. ஒன்று மின்புழுக்கள் எனப்படும் மின் மினிகள். இவை நம் நாட்டில் காணப்படுகின்றன. மற்றொன்று "நெருப்புஈ" எனப்படுபவை. இவை அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காணப் படுகின்றன.

மின் மினிகளில் ஆண் பூச்சி வடிவிலும், பெண் பூச்சிகள் புழு வடிவிலும் இருக்கும். இரண்டுமே ஒளிருபவையானாலும் பெண் பூச்சிகளின் ஒளி அதிகமாக இருக்கும்.

மின் மினி ஒளி சிலவற்றில் வெளிர்சிவப்பு, சிலவற்றில் பச்சை கலந்த நீலத்திலும் இருக்கும்.

மின் பூச்சிகளில், உயிரொளிர்வு தற்காப்புக்கு, `எச்சரிப்பு நிறமாகப் பயன்படுகிறது. மேலும் ஆணும், பெண்ணும் ஒன்றையொன்று இருக்கு மிடம் அறிய உதவுகிறது.




அடக்கமாய் வாழ்பவனே மனிதன்
அன்போடு பழகுபவனே மனிதன்

பகையின்றி இருப்பவனே மனிதன்
பாசத்தை பொழிபவனே மனிதன்

துன்பத்தை தீர்ப்பவனே மனிதன்
தோல்வியை நீக்குபவனே மனிதன்

பொறமையுடன் இருப்பவனே மனிதன்
பொறுப்புடனே வாழ்பவனே மனிதன்

நெறிவழி நடப்பவனே மனிதன்
நேர்மையை மதிப்பவனே மனிதன்


வீ. பாலசுப்பிரமணியம்.

# கண்டு பிடியுங்கள்

## புதிர் இலக்கம் –11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | 2 | | 9 | | 6 | = | 15 |
| | | | | | | | | |
| 3 | | 3 | | 3 | | 6 | = | 9 |
| | | | | | | | | |
| 7 | | 5 | | 1 | | 2 | = | 1 |
| | | | | | | | | |
| 4 | | 6 | | 6 | | 5 | = | 9 |
| = | | = | | = | | = | | |
| 14 | | 19 | | 9 | | 11 | = | 13 |

ஒவ்வொரு எண்களுக்கு மிடையேயுள்ள சதுரங்களுக்குள் +, -, x மற்றும் -:- ஆகிய குறியீடுகளை பொருத்தமாக இட்டு, விடைகள் வந்த விதத்தை கண்டுபிடியுங்கள்.




கேள்விக்குறி இடப்பட்டுள்ள பெட்டிக்கு கீழேயுள்ள ஐந்து படங்களில் எது பொருத்தும் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

## புதிர் –10

01) இரண்டு இலக்கமுள்ள மூன்று எண்களை எழுத வேண்டும். இவற்றின் தொகை 253 ஆகும். அதே எண்களை தலைகீழாக திருப்பிப் பார்த்தால் வரும் தொகையும் 253 ஆகும். ஆகவே அந்த எண்கள் எவை?

02) ஒரு பின்னத்தையும், ஓர் எண்ணையும் கூட்டினால், பெருக்கினாலும் ஓரே தொகை வரவேண்டும். முயன்று பாருங்கள்




சுதன்:- மழைக் காலங்களில் தொலைக் காட்சிப் பெட்டியில் புள்ளிகள் அதிகம் தோன்றுவது ஏன்?

ரதன்:- மின்காந்த அலைகளாக ஒளிப்பரப்பப்படும் சமிக்ஞை, இடி-மின்னல் காரணமாக மாசுபடுவதால் தொலைக்காட்சிப் பெட்டியில் புள்ளிகள் தோன்றுகின்றன. மழைக்காலத்தில் மின்னல் மற்றும் மின்னேற்றம் பெற்ற மேக ஓட்டம் ஆகியவற்றால் மின்காந்த அலைகள் உருவாகின்றன. இவை சமிக்ஞை அலையோடு கலந்து இரைச்சல் (Noise) உண்டாகின்றன. இதன் காரணமாகவே காட்சித் திரையில் புள்ளிகளும் ஒலியின் தரமும் மாறுபடுகின்றன.

தொலைக்காட்சிப் பெட்டிக்கு அருகில் மோட்டார் வாகனத்தைக் கிளப்பும் போது இந்தப் புள்ளிகள் தோன்றும். ஸ்பார்க் பிளக்கில் உண்டாகும் 'சிறுமின்னல்' காரணமாக எழும் மின்காந்த அலைகள், சமிக்ஞை அலையை மாசுபடுத்தி காட்சித் திரையில் புள்ளிகளைத் தோற்றுவிக்கின்றன.

# உடலியல் தகவல்கள்

* ஒரு குழந்தை பிறக்கும் போது 330 என்புகளுடன் பிறக்கின்றது. வயது வந்த ஆண், பெண்களின் உடலில் உள்ள மொத்த என்புகள் 330 என்புகளில் சில ஒன்றாக இணைந்து விடுவதால் 206 ஆகும். மனித உடலில் உள்ள மிக நீளமான என்பு தொடை என்பு. மனித உடலில் உள்ள மிகச் சிறிய என்பு காது என்பு.

* ஒரு குழந்தை பிறக்கும் போது அதன் மூளையின் எடை 500 கிராமாக இருக்கும். ஆறு வயதில் குழந்தையின் மூளையின் எடை 1,400 கிராமாக உயர்ந்திருக்கும். மனித உடலின் எடையில் மூளையின் எடை $2^1/_2$ சதமாகும். மூளையைச் சுற்றி உள்ளே உள்ள சவ்வின் பெயர் பயமாட்டர் (Piamater) ஆகும்.

ம. செந்தூரன்
தரம் $10^A$
மு/வித்தியானந்தக் கல்லூரி

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

S.அருள்நேசன் என பெயரிட்ட பொக்கற் டயரி ஒன்று, ஒரு முக்கிய ஆவணமொன்றுடன் யோகபுரம் பாடசாலைக்கும் பாண்டியன் குளத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து மல்லாவி வெண்ணிலா கல்வி நிலையத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1856)

•••

11.05.2002 வான் இல 6406ல் யாழ் சென்று கொண்டிருக்கும் போது, வான் பின் கதவு திறபட்டு, Bagயாவும் கீழே விழுந்து விட்டது. அதில் ஒரு (Briefcase) தவறிவிட்டது. அதில் திரு. S.T.மூர்த்தி அவர்களின் பென்சன் கடிதங்களும் தஸ்தாவேசுகளும் உண்டு. இதனை எடுத்தவர்கள் தயவுசெய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம். (1852)

---

பனங்காமம்பற்று பல நோ.கூ.ச, வவுனிக்குளம்

## விசேட பொதுச்சபைக் கூட்டம்

29.05.2002

மேற்படி பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 29.05.2002 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு சங்கத் தலைமை அலுவலக ஒருங்கு கூடல் மண்டபத்தில் தலைவர் திரு.சு.செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும். நிகழ்ச்சி நிரல் கூடிய விரைவில் சகல பொதுச் சபை உறுப்பினர்கட்கும் தனித் தனியாக அனுப்பி வைக்கப்படும். சகல பொதுச் சபை உறுப்பினர்களும் உரிய நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சேவையிலுள்ள
பொதுச் செயலாளர்.

(1771)

---

## நீங்களும் பட்டதாரியாகலாம்

க.பொ.த (உ.த) பரீட்சையில் கலை.வர்த்தக. விஞ்ஞானப் பிரிவுகளில் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்களுக்கு அரிய வாய்ப்பு. பெரதேனியா பல்கலைக்கழக G.A.Q, B.A வகுப்புக்கள்

ஆரம்பம்: 26.05.2002 சனிக்கிழமை மாலை 4.00 மணி

குறிப்பு: பல்கலைக்கழகத்துடனான பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.



வெண்ணிலா கல்வி நிலையம்
மல்லாவி
(1854)

---

சிவமயம்

## குருப்பட்ட நீராட்டுவிழா அழைப்பிதழ்

**[சிவாச்சாரியபிசேகம்]**

சிவநேயச் செல்வர்களே,

நிகழும் மங்களகரமான சிவம் பெருகு சித்திரபானு வருடம் வைகாசித்திங்கள் 8ம் நாள் (22.05.2002) புதன்கிழமை 10.11 மணிதொடக்கம் 11.40 மணி வரையுள்ள அத்த நட்சத்திரமும் கடக இலக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய நல்வேளையில் யாழ்.கீரிமலையை பிறப்பிடமாகவும் கிளி. உருத்திரபுரீச்சத்தை வாழ்விடமாகவும் கொண்ட

சிவஸ்ரீ ஐ. அரிகரபுத்திரையா யோகம்மா தம்பதிகளின் தலைமகன் சர்வசாதகர் வீரசைவ

**சிவஸ்ரீ மதிவதனஐயா (மோகன் ஐயா)**

(உருத்திரபுர சக்திபுர முருகன் ஆலய அர்ச்சகர்)

அவர்களுக்கு

குருப்பட்ட நீராட்டுவிழா நடைபெற தமிழ்நாடு கும்பகோணம் வீரசைவ பெரியமடம் சுவாமிகளின் மானசீக அருளும் கிளிநொச்சி மகாதேவாச்சிரம சுவாமிகளின் அருளும் இட்டலிங்கப் பெருமானின் திருவருளும் கை கூடியுள்ளமையால் அந்நிகழ்வில் சிவாச்சாரியர்கள் சமயப் பெரியார்கள் சைவ அன்பர்கள் அனைவரையும் உருத்திரபுரீச்சர சிவாலயத்தில் நடைபெறும் நிகழ்விலும் மதிய விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பித்து குருவருளும் திருவருளும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

தீட்சாகுரு:
கலாநிதி சிவஸ்ரீ கிரீட உருத்திரபுரேஸ்வரக்குருக்கள்
(கீரிமலை இரேணுகாச்சிரம பீடாதிபதி அகில இலங்கை வீரசைவ குரு மகா சன்னிதானம் தமிழ்மணி, உருத்திரபுரீச்சர ஆலய முதன்மைக்குரு)


உருத்திரபுரீச்சரம்
சிவநகர்
கிளிநொச்சி

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ திரு திருமதி
நா.சி.ஐ.அரிகரபுத்திரையா
(அரியபுத்திரையா) (1859)

---

இலவச

## கணினி பயிற்சி நெறி



தமிழீழ மாணவர் அமைப்பின் ஒழுங்கமைப்பில் கணணிப் பொறியியல் பட்டதாரி மாணவர்களால் க.பொ.த உயர்தரதேர்வில் தோற்றிய, தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணினி அறிமுகப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் 23.05.2002 புதன்கிழமை தொடங்கி முதற்கட்டமாக பத்து நாட்கள் கீழ்க் காணப்படும் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

* மு/புதுக்குடியிருப்பு ம.வி.
* கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி
* கிளி/முழங்காவில் ம.வி.

மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் மேற் கூறப்பட்ட நிலையங்களில் 18,19 சனி, ஞாயிறு நாட்களில் ரூ.25ஐ விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இப் பயிற்சிநெறி இலவசமாகவே நடைபெறும்.

(1857) தமிழீழ மாணவர் அமைப்பு

---

# தமிழீழ வைப்பக அறிவித்தல்




அன்புக்குரிய வழமையாளர்களே,

* 1996.04.19 ஆம் நாளுக்கு முன்னர் தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகையடைவுக்கடன் பெற்று இன்றுவரை அவற்றை மீட்காதவர்கள் தங்கள் அடைவு நகைகளை, முற்பணத் தொகையினையும் 1996.04.19ஆம் நாள் வரைக்குமான வட்டித் தொகையினையும் மட்டும் செலுத்தி மீளப் பெற்றுக் கொள்ளுதல்.

* தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் உள்ள தங்கள் வைப்பகக் கணக்குகளை 1996.04.19ஆம் நாளுக்குப் பின்னர் செயற்படுத்தாவர்கள் கணக்குகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

* தமிழீழ வைப்பகப்பணி பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆகிய நோக்கங்களுக்காக பொற்பதிவீதி கொக்குவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் ஏழல் தோறும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் காலை 09.00மணி தொடக்கம் மாலை 05.00மணி வரை வைப்பக அலுவலரை தொடர்பு கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



"தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்"

(6858)

**தமிழீழ வைப்பகம்**

மேலாளர்,
(ஆளுகை)
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

தமிழீழ வைப்பகம் T. E. D. B. K. DF TAMILEELAM

# வன்னி வைத்தியசாலைகளில் ஊழியர்கள் பற்றாக்குறை

(நமது நிருபர்)

வன்னிப்பகுதிகளில் உள்ள வைத்திய சாலைகளில் தொண்டர் அடிப்படையில் சேவையாற்றுவோர் தம்மை நிரந்தரமாக்கவில்லையென விசனம் தெரிவித்துள்ளனர்.

ராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில்ஊழியர்கள் பற்றாக்குறை நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு தொண்டர் அடிப்படையில் ஊதியமற்ற சேவையாற்ற இணைந்தவர்கள் பல வருடங்களாக சேவையாற்றிய போதிலும் இதுவரை அவர்களை நிரந்தரமாக்க அரசு முன்வராததினால் இத்தகைய தொண்டர் சேவையாளர்கள் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்குறித்த இப்பகுதிகளில் தற்போது 200க்கும் மேற்பட்ட தொண்டர்கள் சேவையாற்றி வருவதாகவும் தம்மை நடவடிக்கை நிரந்தரமாக்க சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (யோ0

# 'மலேரியா' பரவுகின்றது

(நமது நிருபர்)

மல்லாவியில் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தையடுத்து மலேரியா காய்ச்சல் தீவிரமடைந்து வருகிறது. இக்காய்ச்சலுக்கு தினமும் பலர் இலக்காகி வருகின்றனர்.

இக்காய்ச்சல் திடீரென குளிருடனும், நடுக்க[illegible]னும் ஏற்படுவதாகவும், முதியோர் சிறுவர்[illegible]ரும் இலக்காகி வைத்தியசாலைகளில் சிகிச்[illegible]று வருகின்றனர். (யோ)

# நிதிப்பற்றாக்குறை; கண்நோயாளர் அவதி

(கிளிநொச்சி)

கிளிமாவட்ட வைத்தியசாலையின் கண்ணொளி திட்டத்தின் மூலம் கண் சத்திரசிகிச்சையினை மேற் கொண்டு வந்த கண் நோயாளர்கள் கண்ணொளித் திட்டத்திற்கான நிதி முடிவுற்றநிலையில் வவுனியாவிற்கு அப்பாற் சென்று கண் சத்திர சிகிச்சை பெறமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கண்ணொளித் திட்ட தலைவரும் கிளிமாவட்ட அதிகாரியுமான வைத்தியக்கலாநிதி ச.விக்கினேஸ்வரன அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் கிளி மாவட்டத்திலுள்ள வறுமையிலும், வறுமைக் கோட்டிற்குட்பட்ட 200 கண்கற்றாக் சிகிச்சை பெறமுடியாது அல்லலுற்ற நோயாளர்களுக்கு உதவிநல்கிடும் நோக்கில் மேற்படி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இந் நிதியத்தின் மூலம் நோயாளர்கள் சத்திரசிகிச்சை பெறும் பொருட்டு இலவசமாக வவுனியாவுக்கப்பால் அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொடுக்கப்பட்டு வந்தது.

தற்போது மேற்படி கண்ணொளி நிதியத்தில் நிதி முடிவடைந் துள்ளமையாலும், இந் நிதியத்திற்கு நிதிவழங்கி வந்த நிறுவனங் களிடமிருந்து நிதி கிடைக்கப் பெறாமையினாலும் மேற்படி திட்ட செயற்பாடுகள் செயற்பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் இதன் காரணமாக கண்கற்றாக் சத்திரசிகிச்சை பெறவேண்டி வைத்தியசாலையில் பதிவுகளை மேற்கொண்டவர்கள் தற்போது கண்டியில் நடைபெறும் விசேட கண்சிகிச்சை முகாமிற்கு அனுப்பி வைக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதென கவலையுடன் தெரிவித்தார். (சோ)

# அரசியல் தீர்வொன்றை.....

இச்சூழலை மாற்றியமைக்க முடியும்."

"எமது அமைப்பைப் பொறுத்தவரையில் எடுத்து நாங்கள் அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்."

நாகரிகமாக பேசி ஒரு மூன்றாம் தரப்பினுடைய மேற்பார்வையின் கீழ் அரசியல் தீர்வைக் கொண்டுவர வேண்டுமென்பதில் உறுதியாக இருக்கின்றது."

"எமது இந்த உறுதிப்பாட்டை சிறிலங்காவின் பிரதமரும், சிறிலங்கா அரசாங்கமும் நன்கு புரிந்து கொண்டு இந்தச் சமாதான முயற்சிகளுக்கு, முன்னெடுப்புக்களை மேற்கொள்ளவேண்டும் என்பது தான் எமது விருப்பம்."

"எம்மைப்பொறுத்தவரையில் இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மிக இறுக்கமாக எந்தவிதமான மீறல்களுமின்றி நேர்மையாக செயற்படுத்தி வருகின்றோம்."

"இங்கே நோர்வேயினுடைய கண் காணிப்புக்குழு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு இந்த உண்மை மிகத் தெளிவாகத் தெரியும். அவர்கள் அனைத்தையும் நேரடியாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றனர்."

"புலிகளைப் பொறுத்த வரையில் உடன் படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களில் எந்த இடத்திலும் மீறல் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை."

"படைத்தரப்பினராலேதான் பல இடங்களில் இது மீறப்பட்டிருக்கின்றது. அந்தக் குற்றச்சாட்டுக்களை நாங்கள் நோர்வே கண்காணிப்பு குழுவிடம் கொடுத்திருக்கின்றோம். அப்படி ஏமது தரப்பிலே ஏதாவது மீறல் சம்பவங்கள் நடைபெறுமாக விருந்தால் நோர்வே கண்காணிப்புக் குழு ஊடாக எமக்கு தெரியப் படுத்து போது உடனடியாக தேவையான நடவடிக்கை

"சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பு எப்பொழுதும் தடையாக இருக்கப்போவதில்லை. குறிப்பாக நாங்கள் பேச்சுவார்த்தைக்கு முதலே நடைமுறைக்கு வரவேண்டிய பல விடயங்களில் இணக்கப்பாடு கண்டிருக்கின்றோம். இந்த இணக்கப்பாடு கண்ட விடயங்கள் நடைமுறைக்கு வருகின்றபோது பேச்சுவார்த்தைக்கான சூழலும் தோன்றும் என நினைக்கின்றோம்."

"குறிப்பாக இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பும் ஏற்றுக் கொண்டிருப்பதால் காலவரையறையோடு சில விடயங்கள் நடைமுறைக்கு வரவேண்டும். 30 நாட்களுக்குள், 60 நாட்களுக்குள், 90நாட்களுக்குள் என்று படிப்படியாக சில நெருக்குவாரங்கள் நீங்கிய ஏது நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதில் இரு தரப்பும் மிகத் தெளிவாக இருக்க விரும்புகின்றோம். அவை நடைமுறைக்கு வரும் போது அதாவது, ராணுவ நெருக்குவாரங்கள் பொதுமக்கள் மீது சுமத்தப்படுகின்ற தடைகள் எல்லாம் நீங்கி ஓர் இயல்பு நிலை தோன்றுகின்றபோது உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலவரையறைகளோடு சில விடயங்களை நாம் நடைமுறைப்படுத்தமுடியும். அவை நடைமுறைப்படுத்தப்பட்டும் வந்து முழுமையடையும் போது விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட்டும் போதும் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தைக்கான சூழலை உருவாக்குவது இலங்கை அரசின் பக்கமே தான் இருக்கிறது.


# சிறி கருமாரி நகையகம்







வன்னி பெருநிலப்பரப்பில் பல வருடங்பளாய் இயங்கிய எமது ஸ்தாபனம் தற்போது முத்துமாரி நகை மாடம் இல 78, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் புதுப் பொலிவுடன் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் பெரு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

சிறி கருமாரி நகையகம்,
இல:177D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முத்துமாரி நகை மாடம்,
இல:78,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## சூகீ யின் விடுதலையும் பர்மாவின் எதிர்காலமும்



மியான் மாரின் (பர்மாவின்) ஜனநாயகப் போராளியான ஆங் சாங் சூகீ அம்மையாரின் தீர்க்கமான மன உறுதிக்கு கிடைத்துள்ள வெற்றியாக அவரின் விடுதலை அமைந்துள்ளது. இராணு வத்தின் கொடூர அடக்குமுறை அவரின் மனோபலத்தின் அடிப்படையிலான சர்வதேச அழுத்தத்திற்கு அடிபணிய நேரிட்டுள்ளது.

சூ கீ அம்மையார் இராணுவத்துடன் பேசி பிரச்சினையத் தீர்க்கத் தயாராகவே உள்ளார். ஆனால் சுதந்திரமான தனது கொள்கைகளையும், இலட்சியங்களையும் விற்றுவிடத் தயாரில்லை என்கிறார்கள் அரசியல் அறிஞர்கள்.

பிடிவாதம் கொண்ட பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்கள் மேலும் இறங்கிவருவார்களா? இதுவே இப்போதுள்ள பில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி.

## ஜெயலலிதா தீர்மானம் – பா.ம.க எதிர்ப்பு



தமிழீழ தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை கைது செய்து இந்தியாவுக்கு கொண்டு வர வேண்டுமென்ற தமிழக ஜெயலலிதா அரசின் தீர்மானத்தை கண்டித்தும் எதிர்த்தும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் கறுப்புச்சட்டை அணிந்து சட்டசபைக்குள் வந்து பின் சபைநடவடிக்கைகளை புறக்கணித்து வெளியேறினர்.

## தொடரும் பாரம்பரியம்



எவரெஸ்ட் சிகரத்தில் முதல் கொடி நாட்டிய ரென்சிங்கையும் சேர் எட்மெண்ட் ஹிலாரியையும் எவரும் மறந்திருக்க மாட்டார்கள். 1953 இல் உலகைவியக்க வைத்த






இந்த சாதனையை அவர்கள் செய்தனர்.

இப்போது ஹிலாரியின் மகன் பீற்றர் ஹிலாரியும், ரென்சிங்நோர்கேயின் பேரன் ரரி ரென்சிங்கும் இதே சாதனையை அடுத்தமாதம் நிகழ்த்தவுள்ளனர். அதுவும் தனித்தனியாக மலையேறி [illegible]ச்சியில் ஒன்றாக சந்திக்கவுள்ளனர், சாதனையாளரின் பாரம்பரியம் தொடர்கிறது.

## பி.ஜே.பியும், வீ.எச்.பீ.யும்



"ரா'ட்டிரிய ஸ்வயம் சேவக்" என்ற ஆர்.எஸ்.எஸ் (RSS) என்ற இந்து மதவாத அமைப்பின் அரசியல் பிரிவுகள்தான் இன்று இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதாகட்சி என்ற பி.ஜே.பி (BJP) ஆகும். ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் மற்றொரு பிரிவுதான் பாபர் மசூதியை தகர்த்த வி.எச்.பி என்ற விஸ்வஹிந்து பரிஸத் ஆகும். அண்மையில் குஜராத்தின் முஸ்லீம்களுக்கு எதிரான பாரிய வன்முறையின் பின்னணியில் இந்த அமைப்பே உள்ளது.

இந்திய பா.ஜ.க அரசால் கட்டுப்படுத்த முடியாத இறந்துதத்துவ வெறி குறித்து அந்த கட்சித் தலைவர் ஜனா கிரு'ஸ்ண மூர்த்தி கூறுவது வி.எச்.பி அமைப்பை தம்மால் கட்டுப்படுத்த முடியாது என்பதேயாகும்.

நல்லநாடு, நல்லஆட்சி.... ஆனால் பாவம் மக்கள்...?

இப்பக்திரிகை கிளிநொச்சி ஈமநாகம் பணிமனையில் 2002 ஆண்டு மே மாகம் 17ம் கிகதி அச்சிட்டு வெளியிடப்பட்டகு